# மன்னார்த்தீவின் அபிவிருத்தித் திட்டம்
# 2019 - 2030



## தொகுதி I

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

“செத்சிறிபாய”, பத்தரமுல்லை.

# மன்னார் அபிவிருத்தித் திட்டம்
# 2019-2030

## தொகுதி I

நகர அபிவிருத்தி அதிகார சபை
செத்சிரிபாய,
பத்தரமுல்லை.

# மன்னார் நகரசபை மற்றும் மன்னார் பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய மன்னார் நகர அபிவிருத்தி பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கான அனுமதி

2019.06.28 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைய, 1982 ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (திருத்தப்பட்ட) சட்ட இல:4, கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மன்னார் நகரசபை மற்றும் மன்னார் பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய மன்னார் நகர அபிவிருத்தி பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கு மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான் இத்தால் அங்கீகாரம் வழங்குகின்றேன்.

**பாட்டலி சம்பிக்க ரணவக்க**
**மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்**

**மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு**
**17 மற்றும்18 ஆம் மாடிகள்,**
**"சுஹுருபாய"**
**ஸ்ரீ சுபத்திபுர வீதி, பத்தரமுல்லை**

**திகதி : 2019.06.28**

**மன்னார் தீவு அபிவிருத்தித் திட்டம்: - 2019-2030**

**தொகுதி I**

**© நகர அபிவிருத்தி அதிகார சபை - இலங்கை- 2019**

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் வெளியீட்டாளரின் முன் எழுதப்பட்ட அனுமதியின்றி, எந்த வடிவத்திலும் அல்லது புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது பிற மின்னணு அல்லது இயந்திர முறைகள் உட்பட எந்த வகையிலும் மீள் உருவாக்கம் செய்யவோ, விநியோகிக்கவோ அல்லது பரிமாறப்படவோ இயலாது.

**வெளியீடு**

இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபை

6வது மற்றும் 7 வது மாடிகள், "செத்சிரிபாய", பத்தரமுல்லை, கொழும்பு, இலங்கை

இணையத்தளம் - www.uda.gov.lk

மின்னஞ்சல் - info@uda.gov.lk

தொலைபேசி - +94112873637

ஆனி, 2019 இல் வெளியிடப்பட்டது

மன்னார் தீவு அபிவிருத்தித் திட்டம் - (2019-2030) தொடர் வெளியீடுகள் மூலம் வழங்கப்படுகிறது தொகுதி I & II.

தொகுதி I இல் சூழ்நிலை பகுப்பாய்வு, ஒரு திட்டத்தின் தேவை பற்றிய விளக்கங்கள், தூரநோக்கு, நோக்கம், குறிக்கோள்கள், பரந்த உத்திகள், மூலோபாய திட்டங்கள் மற்றும் செயல்படுத்தும் வழிமுறை உள்ளிட்ட திட்டத்தின் விரிவான விரிவாக்கம் ஆகியவை உள்ளடக்கப்படுகின்றன. தொகுதி II என்பது (2019- 2030) காலத்திற்குள் மன்னார் தீவுக்கு பொருந்தக்கூடிய சிறப்பு மற்றும் பொது திட்டமிடல் மற்றும் கட்டிட விதிமுறைகளை உள்ளடக்கிய ஒரு தனி ஆவணம் ஆகும்.

மன்னார் அபிவிருத்தித் திட்டம் - (2019 - 2030) நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்தால் தொடர்புடைய பங்குதாரர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது.

**நேரடி மேற்பார்வை:**

கலாநிதி ஜெகத் முனசிங்க **தலைவர் - நகர அபிவிருத்தி அதிகார சபை,** பொறியியலாளர். எஸ்.எஸ்.பி.ரத்நாயக்க **பணிப்பாளர் நாயகம் - நகர அபிவிருத்தி அதிகார சபை,** திட்டமிடலாளர். கே.ஏ.டி.சந்திரதாச **உப பணிப்பாளர் நாயகம் - நகர அபிவிருத்தி அதிகார சபை,** திட்டமிடலாளர் டி.எம்.பி. ரணதுங்கா **பிரதிப் பணிப்பாளர் நாயகம் - நகர அபிவிருத்தி அதிகார சபை,** திட்டமிடலாளர். ஜனக் ரணவீர **பணிப்பாளர் (மேல் மாகாணம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு) - நகர அபிவிருத்தி அதிகார சபை,** திட்டமிடலாளர் லலித் விஜயரத்ன **பணிப்பாளர் (அபிவிருத்தி திட்டமிடல்) - நகர அபிவிருத்தி அதிகார சபை,** திட்டமிடலாளர். என்.பி.கே.ரணவீர **பணிப்பாளர் (வடக்கு மாகாணம்) - நகர அபிவிருத்தி அதிகார சபை**

**திட்டமிடல் குழு**

நகர அபிவிருத்தி அதிகாரசபை (தலைமை அலுவலகம்) அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு, புவியியல் தகவல் முறைமை பிரிவு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு, சுற்றுச்சூழல் மற்றும் தரைத்தோற்ற வடிவமைப்பு பிரிவு.

நகர அபிவிருத்தி அதிகாரசபை **(வடமாகாண அலுவலகம்)** என்.பி.கே.ரணவீர **(வடமாகாண பணிப்பாளர்),** க.ஜீவகன் **(பிரதிப் பணிப்பாளர்),** ப.ராகவன் **(திட்டமிடல் உதவியாளர்),** தி.பிரேம்ராஜ் **(திட்டமிடல் உதவியாளர்),** செ.தாரகா **(திட்டமிடல் உதவியாளர்),** யோ. ஆர்த்தி **(திட்டமிடல் உதவியாளர்),** த.றுக்ஸானா **(உதவித் திட்டமிடல் அலுவலர்)**

# I. அமைச்சரின் முன்னுரை



1978ம் ஆண்டின் 41 ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையானது இலங்கையின் திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்தி பங்களிப்பில் 40 வருட சேவையைப் பூர்த்திசெய்துள்ளது. இவ்வேளையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையானது வட பிராந்தியத்தின் அனைத்து நகர அபிவிருத்தி பிரதேசங்களுக்கான விரிவான அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்ததன் ஊடாக மற்றுமொரு மைல் கல்லை எட்டியுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டமானது மன்னார் தீவின் (நகர சபை மற்றும் பிரதேச சபை) பகுதிகளின் எதிர்நோக்கிய ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி மேம்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தின் வர்த்தக மையம் மற்றும் நிர்வாக தலைநகரமான மன்னார் பட்டினமானது பாரிய அளவான சனத்தொகை பிடிப்பிற்கு சேவை வழங்குகின்றது. மேலும், மன்னார் தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளானது கடல் வளங்களுக்கான ஒரு பெரிய களஞ்சியத்தைக் கொண்டுள்ளதோடு மீன்பிடி மற்றும் நீர்வாழ் தொழிற்றுறை அபிவிருத்திக்கான உயர் திறனையும் கொண்டுள்ளது.

எமது முயற்சியானது பொருத்தமான பௌதீக சுற்றுச்சூழலை வசதிப்படுத்துவதன் மூலம் ஏனைய தீவுப் பகுதிகளுடன் சேர்ந்து முழு மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தியை ஆதரிப்பதாகும்.

எமது புரிதலின்படி இந்த அபிவிருத்தி திட்டத்தின் உருவாக்கமானது பாரிய அளவான தொழில் நிபுணர்கள், தேர்ச்சியாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் சமூகத்தவர்களின் ஆலோசனைகளைப் பெறுகின்ற அதேவேளை நவீன முறைமைகள், சிறந்த தொழில்நுட்பங்கள், மற்றும் புத்தாக்க அணுகுமுறைகளையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தவகையில், தலைவர், பணிப்பாளர் நாயகம், திட்டமிடல் குழு மற்றும் இந்த திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க பல்வேறு வகைகளில் தங்களின் அதிஉயர் பங்களிப்பை வழங்கிய அனைத்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களையும் நான் பாராட்டுகின்றேன். மேலும் மன்னார் தீவின் அபிவிருத்தி திட்டத்தின் வெற்றிக்கு தங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் வழங்கி ஒரே மேடையில் சமாந்தரமாக வேலையில் ஈடுபட்ட அனைத்து உள்ளூராட்சி அதிகார சபைகளையும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களையும் மற்றும் பொது மக்களையும் நான் பாராட்டுகின்றேன்.

**கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க,**
**மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்**

## II. நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவரின் முன்னுரை



இன்று நகர அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் நகர்ப்புற சூழல்களின் நிலையை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள இலங்கையின் உச்ச திட்டமிடல் மற்றும் திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பாக காணப்படுகின்றது. இவ் அதிகார சபையானது நகர்ப்புறங்களில் வசிக்கும் அனைத்து மக்களின் பொதுவான நலனுக்கான முன்னேற் றங்களை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் 1978இல் நிறுவப்பட்டது.

1982ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் கீழ் (பகுதி II பிரிவு 8A [1]) நகர அபிவிருத்திப் பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிக்கப்பட்டு பொறுப்பான அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மன்னார் தீவிற்கான அபிவிருத்தித் திட்டமானது இத்தகைய விதிகளின் கீழ் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மன்னார், நகர அபிவிருத்திப் பகுதியாக பிரகடனப் படுத்தப்பட்டதன் விளைவாக, நகர அபிவிருத்தி அதிகாரசபையானது மன்னார் தீவு மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை கருத்தில் கொண்டு மன்னார் அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கத் தொடங்கியது.

இந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான எங்கள் பாதை பட்டுப் போன்ற மென்மையானதாக காணப்படாது மாறாக கரடுமுரடான, சவால்கள் நிறைந்த, நிச்சயமற்ற தன்மைகளால் நிரப்பப்பட்ட, மற்றும் தீய நோக்கங்களால் கறைபட்டவை என்பதை நாம் மறக்கவில்லை. ஆயினும் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது இன்று இத்தகைய சவால்களையும் நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர்கொண்டு மன்னார் தீவை “ பேசுகின்ற கடல் தோற்றம் மற்றும் ஈர்க்கும் கடலியல் “ ஆக உருவாக்க தேவையான அமைப்புகள், கருவிகள் மற்றும் உத்திகளைக் கொண்டுள்ளது.

இந்த விரிவான வேலைத் திட்டத்தை வழங்க பணிக்கப்பட்ட, கடினமாக உழைக்க வேண்டியிருந்த அனைத்து நகர அபிவிருத்தி அதிகாரசபை குழுவினருக்கும், இத்திட்டத்தின் வடிவமைப்பிற்கு பல்வேறு வழிகளில் ஆதரவளித்து பங்களித்த அனைவருக்கும் எனது நேர்மையான நன்றியைத் தெரிவிக்க நான் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறேன். அத்தோடு தொடர்ந்தும் இத்திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கும் இவர்கள் அனைவரின் சமமான மற்றும் தொடர்ச்சியான ஆதரவு கிடைக்கும் என நம்புகின்றேன்.

**கலாநிதி ஜெகத் முனசிங்க,**
**தலைவர் - நகர அபிவிருத்தி அதிகார சபை.**

## III. மன்னார் நகரசபைத் தலைவரின் ஆசிச்செய்தி



இந்த திட்டம் 2030 ஆம் ஆண்டுக்கான மன்னார் தீவின் அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. எந்த வகையான திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் எத்தகைய இடங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும் என உடனடி தலையீடு தேவைப்படும் பகுதிகளை மிக துல்லியமான பகுப்பாய்வுகளின் மூலம் இனங்கண்டு முன்னிலைப்படுத்துவது இத் திட்டத்தின் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

அரசியல் தலையீடுகள் இன்றி, இத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட அனைத்து செயல்திட்டங்களும் அமுலாக்கப்படுமாயின், 2030ஆம் ஆண்டளவில் மன்னார் தீவு ஒரு அழகான, செழிப்பான, வளமான பகுதியாக மாற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பாக, மன்னார் நகர சபைப் பகுதி இந்த திட்டத்தில் முழுமையாக இணைக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. மேலும், நகர சபைக்கான தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகள் திறமையாக செயல்படுத்தப்பட வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் நகர சபையை நிர்வகிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இந்த திட்டம் முறையாக செயல்படுத்தப்படுவதற்கும், அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், திட்டம் வெற்றிபெற எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதற்கும், அனைத்து திட்டங்களுக்கும் அப்பால் அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன். மற்றும் இந்த திட்டம் வெற்றிபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

இந்தத் திட்டத்தை முறையான முறையில் தயாரித்த நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

அன்ரனி டேவிட்சன்,
**தலைவர்,**
**நகர சபை,**
**மன்னார்.**

## IV. மன்னார் பிரதேசசபை தலைவரின் ஆசிச்செய்தி



மன்னார் பிரதேச சபைக்கான அபிவிருத்தி திட்டத்தை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் வரவேற்கிறேன். மன்னார் பிரதேச சபையை அபிவிருத்தி மையமாகக் கருதி அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தமைக்காக பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கு நான் நன்றியைத் தெரிவித்துத் கொள்கின்றேன்.

மன்னார் தீவின் மன்னார் பிரதேசசபைக்கு உட்பட்ட வளமுள்ள கிராமங்களான தலை மன்னார், பேசாலை, தாராபுரம் மற்றும் தாழ்வுபாடு ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக் கப்படவுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்டமிடப்பட்ட பேசாலைத் துறைமுகம், கடலோர சாலைகள், மன்னார் முன்னணிப் பூங்கா, காற்றாலை ஆலை- மின்சாரத் திட்டம், நவீன சந்தை வளாகம், பேசாலை மற்றும் தலைமன்னர் பொது பேருந்து நிலையம் ஆகிய அபிவிருத்தி பணிகளையும் நான் வரவேற்கின்றேன். இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் 2030க்குள் செயல்படுத்தப்படுமாயின் இந்தப் பகுதி சிறந்த நகரமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

எங்கள் பகுதியானது தலைமன்னார் துறையிலிருந்து உயிலங்குளம் வரையில் 12400க்கும் அதிகமான குடும்பங்கள் உள்ளடங்கலாக 34 கிராம சேவகர் பிரிவுகளையும் அதேவேளை மதிப்புமிக்க வரலாற்றுப் பகுதி களையும் கொண்டுள்ளது. இந்த பகுதியை அபிவிருத்தி செய்வதற்கும், சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மிகவும் வரவேற்கத்தக்கவை .

2030 காலத்திற்குள் இந்த அபிவிருத்தித் திட்டத்தை முடிக்க எனது நிர்வாகம், எனது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் என்னாலான முழு ஒத்துழைப்பை வழங்குவேன் என்று பெருமையுடன் அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

2030ஆம் ஆண்டளவில் மன்னார் பகுதியின் பயன்படுத்தப்படாத அனைத்து வளங்களையும் பயன்படுத்தி , புகழ்பெற்ற மன்னார் பகுதியானது பெருமையுடன் மிளிருவதை நான் விரும்பு வரவேற்கிறேன்.

எஸ்.எச்.எம்.முஜாஹிர்
**தலைவர்,**
**பிரதேச சபை ,**
**மன்னார்.**

# V. முன்னுரை

இவ் அபிவிருத்தித் திட்டமானது 2030இல் மன்னார் தீவின் அபிவிருத்தியை அமுல்படுத்துவதற்காக (நகர சபை மற்றும், பிரதேச சபைப் பிரதேசங்கள்) தயாரிக்கப்பட்டுள்ளது. மன்னார் நகரம் மன்னார் மாவட்டத்தின் தலைநகரமாகும். மன்னார் நகரமானது மன்னார் மாவட்டத்தின் தலைநகரமாக விளங்குவதோடு ஏறத்தாழ 66,000 மக்கள் தொகையையும் 143 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பையும் கொண்டுள்ளது. மன்னார்த் தீவின் பொருளாதாரத்துக்குப் பிரதானமான உந்து விசையாகத் தொழிற்படக்கூடிய கடற்கரையோரத்தினையும் காற்று மற்றும் ஆற்றல் மற்றும் சுற்றுலாத்துறையை உள்ளடக்கிய முக்கியத்துவமுள்ள புவியியல் அமைவிடத்தினையும் உள்ளடக்கிய, பெருமளவினதான கடல் சார்ந்த உள்ளார்ந்த வளங்களை மன்னார் தீவு கொண்டுள்ளது.

சாதகமான வளங்களை பயன்படுத்துவதற்காக தூரநோக்கு, நோக்கம், மற்றும் குறிக்கோள்கள் என்பன உருவாக் கப்பட்டுள்ளன. மீன்பிடியுடன் தொடர்புடைய அபிவிருத்திகளைக் கொண்டுள்ள தீவின் வடக்குப் பகுதி, ஆற்றல் மற்றும் சுற்றுலா அபிவிருத்திகளை உள்ளடக்கிய தீவின் தென் பகுதி, சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான அபிவிருத்தி செயற்திட்டங்களை உள்ளடக்கிய தீவின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதி குடியிருப்பு, கலப்பு மற்றும் தொழிற்றுறை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் தீவின் நடுப்பகுதி போன்ற உடனடி தலையீட்டு பகுதிகளின் அடிப்படையில் தந்திரோபாய திட்டத்தின் ஊடாக செயற்திட்டங்களின் பட்டியல் இனங் காணப்பட்டு முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளன.

# VI. நன்றியுரை

மன்னார் தீவு அபிவிருத்தித் திட்டமானது பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தனிநபர்களின் ஆலோசனை மற்றும் ஆதரவோடு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாரிய மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு பட்டாலி சம்பிக்க ரணவக்க அவர்களின் வழிகாட்டுதலுடனும் ஊக்கங்களுடனும் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னுரிமை அளித்தமைக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பெருநகரம் மற்றும் மேற்கத்தேய அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும் மற்றும் அமைச்சின் பிற அதிகாரிகளும் அளித்த பாரிய ஆதரவிற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு மதிப்புமிக்க பங்களிப்பு செய்த மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபையின் தலைவர், சபை உறுப்பினர்கள், ஆணையர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எங்கள் விசேட நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வெற்றிகரமான திட்டத்தை தயாரிப்பதற்கு தங்களின் தரவுகள் மற்றும் தகவல்களையும் மற்றும் பெறுமதிமிக்க பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கிய அனைத்து பங்குதாரர் நிறுவனங்களுக்கும் எங்கள் நன்றியை நீடிக்கின்றோம். மேலும் பெறுமதியான ஆலோசனைகளை வழங்கிய பொதுமக்கள், நலன்விரும்பிகள் மற்றும் வணிக மன்றங்கள் ஆகியவற்றிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முழு அபிவிருத்தித் திட்ட செயன்முறையிலும் தனது நேரடி வழிகாட்டுதலையும் ஊக்குவிப்பையும் வழங்கி புதிய திட்டமிடல் நுட்பங்களைக் கையாளவும், தொடர்ச்சியான கலந்துரையாடலுடனான மேற்பார்வையையும் வழங்கிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், டாக்டர் ஜெகத் முனசிங்கவிற்கு எமது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களின் பெறுமதியான ஆலோசனைகள் மற்றும் மேற்பார்வையினை வழங்கிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் S.S. ரத்நாயக்க அவர்களுக்கும், உதவிப் பணிப்பாளர் நாகயம், துணைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனைத்து பிரிவுகளின் பணிப்பாளர்கள் அனைவருக்கும் விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இந்த திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க தொடர்ச்சியான ஆதரவை வழங்கிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு, புவியியல் மற்றும் தகவல் முறைமைப் பிரிவு, சுற்றுச்சூழல் மற்றும் தரைத்தோற்ற பிரிவு மற்றும் அமுலாக்கல் பிரிவு ஆகியவற்றுக்கும் மற்றும் ஆதரவு வழங்கிய நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் அனைவருக்கும் சிறப்பு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அபிவிருத்தித் திட்ட தயாரிப்புக்கு பல வழிகளில் ஆதரவளித்த ஒவ்வொரு தனிநபருக்கும் விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

# பொருளடக்கம்

அமைச்சரின் ஒப்புதல்.....................................................................................................................

திட்டமிடல் குழு ........................................................................................................................i

முகவுரை

I. அமைச்சரின் முன்னுரை ........................................................................................................ii

II. நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவரின் முன்னுரை ..........................................................iii

III. மன்னார் நகர சபை தலைவரின் செய்தி ...................................................................................iv

IV. மன்னார் பிரதேச சபை தலைவரின் செய்தி ...............................................................................v

V. முன்னுரை ..........................................................................................................................vi

VI. நன்றியுரை .........................................................................................................................vii

1. அறிமுகம் ..........................................................................................................................01

1.1 அபிவிருத்தித் திட்டத் தயாரிப்பின் பின்னணி .........................................................................02

1.2 திட்டமிடல் குழு...................................................................................................................02

1.3 திட்டமிடல் நோக்கம் ...........................................................................................................04

1.4 திட்டமிடல் செயன்முறை....................................................................................................... 04

2. பூர்வாங்க ஆய்வு ................................................................................................................06

2.1 ஆய்வுப் பிரதேசம் ...............................................................................................................07

2.2 திட்டமிடலும் இட அமைவும்....................................................................................................13

2.3 திட்டமிடல் எல்லையயை வரையறுத்தல்....................................................................................14

2.3.1 தொழிற்பாட்டு எல்லை .........................................................................................................14

2.3.2 புவியியல் எல்லை ...............................................................................................................15

2.3.3 நிர்வாகப் பிரிவு எல்லை.........................................................................................................15

3. அபிவிருத்தித் திட்டத்துக்கான தேவை .......................................................................................16

4. திட்டமிடல் கட்டமைப்பு .........................................................................................................20

4.1. தொலை நோக்கு...................................................................................................................21

4.2. தொலை நோக்குக் கூற்று .......................................................................................................21

4.3. குறிக்கோள்கள்.....................................................................................................................21

4.4. இலக்குகள் ..........................................................................................................................22

5. SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு......................................................................................23

6. திட்டம் ................................................................................................................................42

6.1 எண்ணக் கருத்திட்டம் ...........................................................................................................43

6.2 முன்மொழியப்பட்ட நிலப் பயன்பாட்டுத் திட்டம்..........................................................................44

6.3 சமூக மற்றும், பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தித் தந்திரோபாயங்கள் .......................................46

6.3.1 சேவைத் திட்டம்...................................................................................................................46

6.3.2 போக்குவரத்துத் திட்டம் .........................................................................................................50

6.3.3 நீர் விநியோகத் திட்டம்...........................................................................................................52

6.3.4 கழிவு முகாமைத்துவத் திட்டம் ........ 53
6.4 பொருளாதார அபிவிருத்தித் தந்திரோபாயங்கள் ........ 54
6.4.1 கைத்தொழில் திட்டம் (மீன்பிடித்துறை, சக்தி) ........ 54
6.5 நிலைத்து நிற்கும் சூழல் தந்திரோபாயங்கள் ........ 56
6.5.1 பாதுகாப்பும் நன்னிலையில் பேணுதலும் ........ 58
6.5.2 தரைத்தோற்றமைப்பு முகாமைத்துவம் ........ 59
6.5.3 அனர்த்த இடர்தணிப்பு ........ 61
6.5.4 பொதுத் திறந்த வெளிகள் ........ 62
6.6 அமுலாக்கல் தந்திரோபாயங்கள் ........ 65
6.6.1 தந்திரோபாய செயற்திட்டங்கள் ........ 65

வரைபடங்களின் பட்டியல்

வரைபடம் 01 : சூழல் கூருணர்வு பகுப்பாய்வு ........ 12
வரைபடம் 02 : அபிவிருத்தி அழுத்தப் பகுப்பாய்வு ........ 12
வரைபடம் 03 : இடரீதியான ஒழுங்கமைப்பு விதிப்பகுப்பாய்வு ........ 13
வரைபடம் 04 : அமைவிட வரைபடம் ........ 15
வரைபடம் 05 : தற்போதைய நிலப் பயன்பாட்டு வரைபடம் ........ 31
வரைபடம் 06 : முன்மொழியப்பட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி ........ 32
வரைபடம் 07 : முன்மொழியப்பட்ட நிலப் பயன்பாட்டு வரைபடம் (2030) ........ 45
வரைபடம் 08 : முன்மொழியப்பட்ட குடியிருப்புத் திட்டம் (2030) ........ 46
வரைபடம் 09 : முன்மொழியப்பட்ட வீட்டு அடர்த்தி (2030) ........ 48
வரைபட்ம் 10 : சேவைத் திட்டம் - சுகாதாரம் (2030) ........ 48
வரைபடம் 11 : சேவைத்திட்டம் - கல்வி (2030) ........ 49
வரைபடம் 12 : சேவைத் திட்டம் - பொழுதுபோக்கு (2030) ........ 50
வரைபட்ம் 13 : மன்னார்த் தீவுக்கான போக்குவரத்துத் திட்டம் (2030) ........ 50
வரைபடம் 14 : மன்னார் நகரசபைப் பகுதிக்கான போக்குவரத்துத் திட்டம் (2030) ........ 51
வரைபடம் 15 : நீர் விநியோகத் திட்டம் (2030) ........ 53
வரைபட்ம் 16 : கழிவு முகாமைத்துவத் திட்டம் (2030) ........ 54
வரைபடம் 17 : கைத்தொழில் திட்டம் (2030) ........ 56
வரைபடம் 18 : சூழல் மற்றும் உல்லாசத்துறைத் திட்டம் (2030) ........ 58
வரைபடம் 19 : முன்மொழியப்பட்ட பொது வெளியகப் பொழுதுபோக்கு வெளிகள் ........ 64

அட்டவணைப் பட்டியல்

அட்டவணை 1 : மாணவர் - ஆசிரியர் விகிதம் : 2010 - 2015 ........ 10
அட்டவணை 2 : கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விபரம் ........ 28
அட்டவணை 3 : எதிர்வு கூறப்பட்ட குடித்தொகை ........ 47
அட்டவணை 4 : காணப்படும் நீர் மூலங்கள் ........ 53

அட்டவணை 5: 2030 இல் கழிவு உருவாக்கம் ........ 54
அட்டவணை 6: மன்னார்த் தீவுக்கான முன்மொழியப்பட்ட பொது வெளியகப் பொழுபோக்கு வெளித் திட்டம் - 2030 ........ 63
அட்டவணை 7: தந்திரோபாயச் செயற்திட்டங்கள் ........ 65

உருக்கள் பட்டியல்

உரு 1 : மன்னார் மாவட்டத்தினதும் தீவினதும் மின் உற்பத்தி 2011 - 2016 ........ 08
உரு 2 : இட அமைவு ........ 14
உரு 3 : எண்ணக்கருத் திட்டம் ........ 44

பிண்ணிணைப்புக்களின் விபரம் ........ 69
குடித்தொகை அடர்த்தி 2016 ........ 69
நகரிற்கு வந்துசெல்வோர் வரவு (2016) ........ 69
துறைசார் கூட்டு 2016 ........ 70
தற்போதைய நீர்ப்பாவனை - மன்னார் தீவு (2016) ........ 70
நீரேந்து பிரதேச விபரம் EU – வடிகாலமைப்பு திட்டம் ........ 71
குறுக்குவெட்டுப் பிரிவுகள் ........ 72
மன்னார் தீவின் வைத்தியசாலை அடிப்படைவசதிகள் ........ 73
வகைப்பாடுகளுடன் தற்போதைய பாடசாலைகள் - மன்னார் தீவு ........ 73
பாடசாலைகளின் பௌதீக தேவைகள் - மன்னார் தீவு ........ 74
வீதியின் குறுக்குவெட்டுமுகம் ........ 74
நீரிற்கான கேள்வி -மன்னார் தீவு (2020 - 2030) ........ 76
கைத்தொழில் வகைப்பாடு ........ 76
அடையாளம் காணப்பட்ட செயற்திட்டத்திற்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்கள் ........ 76
மன்னார் இயற்கைப் பூங்கா அபிவிருத்திச் செயற்திட்டம் ........ 79
நகர சபை பிரதேசத்தில் பஸ் தரிப்பு நிலையத்தின் மீள் அபிவிருத்தி (இ. போ. ச. மற்றும் தனியார்) ........ 83
பேசாலையில் மீன்பிடிதுறைமுகம் அபிவிருத்தி ........ 86
பள்ளிமுனையில் இறங்குதுறை அமைத்தல் ........ 88
மன்னார் ஒல்லாந்து கோட்டை புனரமைப்பு ........ 90
உறுமலையில் அவதானிப்புகோபுரம் அமைத்தல் ........ 95
நவீன வர்த்தக வளாகத்தை நிறுவுதல் ........ 99
முன்மொழியப்பட்ட தெற்கு கடற்கரையோர வீதி அபிவிருத்தி செயற்திட்டம் ........ 101
முன்மொழியப்பட்ட அல் பாத்தா விளையாட்டு மைதான அபிவிருத்தி செயற்திட்டம் ........ 104
மன்னார் செயல்திட்டத்தில் மீன் சந்தை அபிவிருத்தி ........ 107
பேசாலையில் புதிய சந்தை செயற்திட்டம் ........ 109
கரை முகப்பில் முன்மொழியப்பட்ட கடல் கிராமத்தை நிறுவுதல் ........ 111

அத்தியாயம் 01

# அறிமுகம்

அத்தியாயம் 01

**அறிமுகம்**

## 1.1. அபிவிருத்தித் திட்டத்தயாரிப்பின் பின்னணி

இலங்கையில் நகர அபிவிருத்தி அதிகார சபையானது நகர அபிவிருத்தியை ஒழுங்கு படுத்தும் அமைப்பாகும். இவ் அமைப்பு 1978ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் கீழ் நகர திட்டமிடலை அமுலாக்கும் பிரதான நிறுவனமாக செயற்படுகிறது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரிப்பதென்பது, அதிகார சபைச் சட்டங்களின் அடிப்படையில் மிகவும் முக்கியமான அம்சமாகும். இதனை கருத்திற் கொண்டு குறிப்பிட்ட பிரதேசத்தின் அபிவிருத்திகளை ஊக்குவித்து வழிநடத்துவதற்காக அதிகார சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் அதிகாரத்தை 1982ஆம் ஆண்டு 4ஆம் இலக்க (பகுதி II A பிரிவு 8A (1) சட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை கொண்டிருக்கின்றது.

இதனடிப்படையில், மன்னார் நகர சபைப் பிரதேசமானது நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அபிவிருத்திப் பிரதேசமாக 1ஆம் திகதி ஆனி மாதம் 1979ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. பின்பு 22ஆம் திகதி பங்குனி மாதம் 1998ஆம் ஆண்டு மன்னார்த் தீவு முழுவதையும் நகர அபிவிருத்திப் பிரதேசமாக நகர அபிவிருத்தி அதிகார சபையால் அதன் 1978ஆம் ஆண்டு 41ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 759/1ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசமானது அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் விளைவாக வடமாகாண நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகமானது, மன்னார் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, பௌதீக மற்றும் சுற்றுச்சூழல் பொருத்தப்பாடு களைக் கருத்திற்கொண்டு மன்னார் தீவிற்கான அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.

## 1.2. திட்டமிடல் குழு

### I.2. பிரதான ஆலோசனை நிறுவனங்கள்

1. மன்னார் நகர சபை
2. மன்னார் பிரதேச சபை

### I.2.2. ஆலோசனை நிறுவனங்கள்

1. நிலைபேறான சக்தி அதிகார சபை
2. மத்திய சுற்றாடல் அதிகார சபை

3. கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்
4. தொல்பொருள் திணைக்களம்
5. வீதி அபிவிருத்தி அதிகார சபை
6. வீதி அபிவிருத்தித் திணைக்களம்
7. தேசிய நீர்வள அபிவிருத்தி நிறுவனம் (NARA)
8. இலங்கைத் துறைமுக அதிகார சபை
9. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
10. இலங்கை முதலீட்டுச் சபை
11. மீன்பிடி மற்றும் நன்னீர் வளத் திணைக்களம்
12. கைத்தொழில் அபிவிருத்திச் சபை
13. வடக்கு மாகாண சபை
14. மீன்பிடித் திணைக்களம்
15. மாந்தை உப்பளம் (LTD)
16. நிலப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
17. வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
18. அனர்த்த முகாமைத்துவ நிலையம்
19. இலங்கை மின்சார சபை

### 1.2.3. திட்டமிடல் குழு

1.2.3.1. நகர அபிவிருத்தி அதிகார சபை (தலைமை அலுவலகம்)

1. அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு
2. புவியியல் மற்றும் தகவல் பிரிவு
3. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
4. சுற்றுச்சூழல் மற்றும் நிலவடிவமைப்புப் பிரிவு
5. அமுலாக்கல் பிரிவு

1.2.3.2. நகர அபிவிருத்தி அதிகார சபை (வடமாகாண அலுவலகம்)

1. NPK ரணவீர : வட மாகாணப் பணிப்பாளர்
2. K. ஜீவகன் : பிரதிப் பணிப்பாளர்
3. P. ராகவன் : திட்டமிடல் உதவியாளர்
4. T. பிரேம்ராஜ் : திட்டமிடல் உதவியாளர்
5. S. தாரகா : திட்டமிடல் உதவியாளர்
6. Y. ஆர்த்தி : திட்டமிடல் உதவியாளர்
7. E. றுக்ஸானா : உதவித் திட்டமிடல் அலுவலர்

### 1.3. திட்டமிடல் நோக்கம்

பிரதானமாக இவ்வபிவிருத்தித் திட்டமானது பௌதீக, உட்கட்டுமான அபிவிருத்திகளையும் உல்லாசப் பிரயாணத்துறை, சக்தி மற்றும் மீன்பிடித்துறையை உள்ளடக்கிய கைத்தொழில் அபிவிருத்தி அம்சங்களைக் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி, முக்கியமானதாக பெரிய சவாலுக்குள் காணப்படும் மன்னார்த் தீவின் சுற்றுச்சூழல் வளங்களைப் பாதுகாப்பதற்கான விடயங்கள் சுற்றாடல் திட்டத்தினுள் உள்ளடக்கப் பட்டுள்ளன. மேலும் மரபுரிமை மற்றும் பெறுமதியான வரலாற்றுப் பிரதேசங்கள் போன்றவற்றைப் புனரமைப்புச் செய்வதற்காகச் சுற்றாடல் மற்றும் உல்லாசப் பிரயாணத் திட்டத்தின் கீழ் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தியாயம் 01

**அறிமுகம்**

பிரகடனப்படுத்தப்பட்ட மன்னார்ப் பிரதேசம் முழுவதும் கருத்திலெடுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வபிவிருத்தித் திட்டமானது முழுவதுமாக உள்ளூர் சூழ்நிலையினை உள்ளடக்கு கின்றது. இத்திட்டத்தின் மூலம் மன்னார்த் தீவின் பயன்படுத்தப்படாத வளங்கள் மீது கவனம் செலுத்துவதனூடாக 2030ஆம் ஆண்டளவில் சாதகமான பொருளாதார மற்றும் நிலைத்திருக்கக்கூடிய சுற்றுச்சூழலைக் கொண்ட ஆரோக்கியமான பிரதேசமாக உருவாகும். அத்தோடு இந்த திட்டத்தை எதிர்காலத்தில் தேசிய மட்ட நிலையில் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.4. திட்டமிடல் செயன்முறை

| | | |
|---|---|---|
| 1.4.1 பின்னணி ஆய்வு | ⇨ | தரவு சேகரித்தல் (முதலாம் இரண்டாம் நிலை தரவுகளானவை: களப்பகுப்பாய்வு, அலுவலகங் களிலிருந்து சேகரிக்கும் தகவல்கள், இணையம், வேவு விமான தன்னியக்கப் பகுப்பாய்வு, கூகுள் வரைபடம், செய்மதி மற்றும் ஆவணக் காப்பகம் மூலம் சேகரிக்கப்பட்டன). |
| 1.4.2 நோக்கெல்லை | ⇨ | தற்போதைய நிலையைப் பகுப்பாய்வு செய்தல் (EXCEL, ARC, GIS, SPSS, தன்னியக்க வேவு விமான மென்பொருட்களைப் பயன்படுத்தியதான பகுப்பாய்வு |
| 1.4.3 பிரச்சினைகளையும் உள்ளார்ந்த வாய்ப்புக்களையும் அடையாளப்படுத்துதல் | ⇨ | பிரச்சினைகளினதும் உள்ளார்ந்த வாய்ப்புக் களினதும் தெளிவான தோற்றத்தினை அடை யாளம் செய்தல். |
| 1.4.4 தூர நோக்கு, குறிக்கோள் மற்றும் இலக்குகளை உருவாக்குதல் | ⇨ | நகர அபிவிருத்தி செயற்பாடுகளை அடைவதற்கு தூரநோக்கு, குறிக்கோள், இலக்குகள் என்ப வற்றைக் கட்டமைப்பு செய்தல். |
| 1.4.5 விபரமான பகுப்பாய்வு | ⇨ | தூர நோக்கினை அடைவதற்கு, குறிக்கோள், இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு விபர மான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும் (SWOT பகுப்பாய்வு, சூழல் கூருணர்வுப் பகுப்பாய்வு, இணைவுப் பகுப்பாய்வு, அபிவிருத்தி அழுத்தப் பகுப்பாய்வு) |

| | | |
|---|---|---|
| 1.4.6 திட்டம் / தந்திரோபாயங்களை உருவாகுதல். | ⇨ | தூரநோக்கினை அடைவதற்காக பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல் காரணிகளுக்கான விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல். |
| 1.4.7 ஒழுங்கு விதிகள் | ⇨ | மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்துடன் தொடர்புடைய திட்டமிடல் மற்றும் நிர்மாண ஒழுங்கு விதிகளை உருவாக்குதல். |
| 1.4.8 ஒப்புதல் | ⇨ | பொதுமக்கள் அபிப்பிராயத்துக்காக (பங்குதாரர் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை), உள்ளூராட்சி அதிகார சபைக்கு மாதிரித் திட்டத்தை அனுப்புதல் / சமர்ப்பித்தல். |
| 1.4.9 சமர்ப்பித்தல் | ⇨ | மாதிரி இறுதி அபிவிருத்தித் திட்டத்தினைப் பிரதான திட்டமிடல் குழுவுக்கு / அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவுக்கு சமர்ப்பித்தல். |
| 1.4.10 அனுமதியும் வெளியீடும் | ⇨ | அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவானது அபிவிருத்தித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக சட்டரீதியிலான நடவடிக்கை முறைகளைப் பின்பற்றுதல் |

அத்தியாயம் 02

# பூர்வாங்க ஆய்வு

அத்தியாயம் 02

**பூர்வாங்க ஆய்வு**

## 2.1 ஆய்வுப் பிரதேசம்

மன்னார் தீவானது மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபை என இரண்டு உள்ளூராட்சி அதிகார சபைகளைக் கொண்டுள்ளது. 2016ஆம் ஆண்டில் தீவின் மொத்த நிலப்பரப்பானது 143.21 சதுர கிலோ மீற்றராகவும் சனத்தொகை 66087 ஆகவும் காணப்பட்டது.

தற்போதைய குடித்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிலுள்ளது. அதாவது 2012ஆம் ஆண்டு - 0.8 வீதமாகவும் 2013ஆம் ஆண்டு - 0.5 வீதமாகவும் 2015ஆம் ஆண்டு 0.7 வீதமாகவும் 2016ஆம் ஆண்டு - 0.3 வீதமாகவும் பதிவாகியுள்ளது. 2016ஆம் ஆண்டளவில் மொத்தக் குடித்தொகை அடர்த்தியானது ஒரு சதுரக் கிலோ மீற்றருக்கு 90 நபர்களுக்கும் குறைவான குடித்தொகையினைக் கொண்ட பகுதிகளாகக் கட்டுக்காரன் குடியிருப்பு, பெரிய நாவற்குளம், துள்ளுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவுகளும் பதிவாகியுள்ளன.

**(பின்னிணைப்பு 1 : குடித்தொகை அடர்த்தி, 2016)**

2016ஆம் ஆண்டில் காணப்படும் தரவுகளுக்கமைவாக, மன்னார்த் தீவின் இன ரீதியான குடித்தொகைக் கூட்டு தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்கள் முறையே 56% ,43.9% மற்றும் 0.1% ஆகும். நாளாந்தம் சுமார் 10000 பேர் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு நகருக்கு வந்துசெல்கின்றனர். அநேகமான மக்கள் வர்த்தகத் தேவைக்காகவும் நிர்வாக சேவை வசதிகளைப் பெறுவதற்காகவும் வருகின்றனர். இரவு நேரக் குடித்தொகையினைக் கருத்திற் கொண்டால் மன்னார்த் தீவுக்குள் மிகவும் குறைவான செயற்பாடுகளே இடம்பெறுகின்றன.

**(பின்னிணைப்பு 2 : தினசரி வந்துசெல்வோர் வரவு, 2016)**

மன்னார்த் தீவின் வதிவிடக் கூறுகளைக் கருத்திற் கொண்டால் முழு மன்னார்த் தீவுப் பிரதேசத்தினுள் கிட்டத்தட்ட 12840 வதிவிடக் குடியிருப்புக்களில் 17835 குடும்பங்கள் குடியிருந்துள்ளார்கள். தரவுகளின் அடிப்படையில், 4995 வதிவிட குடியிருப்புக்கள் பற்றாக் குறையாகக் காணப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டால் இங்கு எதிர்காலத்திற்கான வதிவிடத் தேவை இருப்பதனை இது வெளிப்படுத்து கின்றது. இதில் பெரும்பான்மையான வதிவிடக் குடியிருப்புகள் (74%) நிரந்தர வதிவிடக் குடியிருப்புக் கூறுகளாக உள்ளன. மறுபுறம் மிகக் குறைந்தளவிலான வதிவிடக் கூறுகள் (16%) அரை நிரந்தர வதிவிடக் கூறுகளாக 10 வீதம் வதிவிடக் கூறுகள் தற்காலிகமான கட்டமைப்பாகவும் உள்ளன. அதிகமான வதிவிடக் குடியிருப்பு அடர்த்தியானது பேசாலை வடக்கு, பட்டித்தோட்டம், பனங்கட்டிக்கொட்டுக் கிழக்குப் பிரிவுகளிலும் குறைந்தளவு அடர்த்தியானது தாராபுரம் கிழக்குப் பகுதியிலும் பதிவாகியுள்ளது. முழுத் தீவுக்குமான மொத்த வதிவிடக் குடியிருப்பு அடர்த்தியானது 2016இல் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 90 வதிவிடக் கூறுகளாகக் காணப்பட்டது.

மன்னார் தீவிற்கான பொருளாதார நடவடிக்கைகளின் துறை ரீதியான பங்களிப்பானது விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளை முறையே 39.3%, 51%, 9.7% என்ற அடிப்படையில் கொண்டுள்ளது.பொருளாதாரத்துறை அமைப்பின் அடிப்படையில் , 36.4% மான சனத்தொகையானது மீன்பிடித்துறையில் ஈடுபட்டுள்ளனர். மற்றும் பிரதேசத்தின் வேலைவாய்ப்பு முறைமையை கருத்தில் கொண்டால், வேலையின்மை வீதமானது தேசிய மட்டத்தை விட அதிகரித்து 7.1 % ஆக பிரதிபலிக்கின்றது

**(பின்னிணைப்பு 3: துறைகள் கூட்டு, 2016)**


மன்னார் தீவானது மன்னார் வளைகுடாவின் அதிகளவான கடல் வளங்களையும், கடற்கரையோர மீன்பிடி பிரதேசங்களையும் சாதகமாக கொண்டுள்ளது.

அத்தியாயம் 02

**பூர்வாங்க ஆய்வு**

2016ஆம் ஆண்டு புள்ளி விபர அறிக்கையின்படி மன்னார் மாவட்டத்தின் மொத்த மீன் உற்பத்தியானது 16000 மெற்றிக்தொன் ஆக காணப்படுகின்றது இதில் மன்னார்த் தீவானது 10324 மெற்றிக்தொன் மீனை உற்பத்தி செய்வதில் பங்களிக்கிறது. கருவாடு உற்பத்தியை நோக்கும்போது மன்னார்த் தீவானது 2012 - 2016 ஆண்டு காலப் பகுதியில் சராசரியாக 1800 மெற்றிக்தொன் கருவாட்டை உற்பத்தி செய்துள்ளது. 2016ஆம் ஆண்டு மொத்தக் கருவாடு உற்பத்தியானது 516 மெற்றிக்தொன்னாகப் பதிவாகியுள்ளது. மொத்தக் குடித்தொகையில், 19 மீன்பிடிக் கிராமங்களிலிருந்து 5779 குடும்பங்களைச் சார்ந்த 22345 பேர் மீன்பிடி நடவடிக்கை களில் ஈடுபட்டுவருகின்றனர். கிட்டத்தட்ட 5247 மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.மன்னார்த் தீவில் வசிக்கின்ற மக்களின் பிரதானமான பொருளாதார நடவடிக்கை மீன்பிடியாகும். அநேகமான மீனவர்கள் தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு, பனங்கட்டிக்கொட்டு மற்றும் பள்ளிமுனை பகுதிகளில் வசிக்கின்றார்கள்.

உரு 1 : மன்னார் மாவட்டத்தினதும் தீவினதும் மீன் உற்பத்தி (மெ.தொ) 2011 - 2016




மூலம்: மீன்வள மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களம் 2016

சேவைத்துறையின்படி மொத்தக் குடித்தொகையில் 51 வீதமானோர் சேவைத்துறையில் ஈடுபடுகின்றனர். அரச துறையில் 9 வீதமானோரும், வியாபாரத்தில் 11.9 சதவீதமா னோரும், கூலித் தொழிலில் 17.3 சதவீதமானோரும், சுய தொழிலில் 7.6 சதவீதமா னோரும், ஓய்வூதியம் பெறுவோர் 3.9 சதவீதமானோரும், அரச சார்பற்ற நிறுவனங் களில் 0.8 சதவீதமானோரும் என்ற வகையில் ஈடுபடுகின்றனர். நகரம் மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்துக்குரிய உள்ளார்ந்த வாய்ப்புள்ள பகுதியாகவும் நகரின் மையப் பகுதியானது மாவட்ட செயலகம், நகர சபை, ஏனைய அரச

திணைக்களங்கள், வைத்தியசாலை, பாடசாலை, நிதி நிறுவனங்கள், பிரதான பேருந்து நிலையம், சந்தை, மீன் சந்தை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றின் நிர்வாகத் தலைநகராகத் தொழிற்பட்டு வருகின்றது. 80 சதவீதமான நிர்வாக அலுவலகங்கள் நகர மையத்தில் அமைந்துள்ளன.

மன்னார் மாவட்டமானது பனை, கடல் சங்கு, பழங்கள், புடவை, கடலுடன் தொடர்புடைய வளங்கள் போன்ற கைத்தொழிலுடன் சாரந்த உள்ளார்ந்த வளங்களைக் கொண்டுள்ளது. உள்நாட்டுப் போருக்கு முன்னர் மன்னார்த் தீவு முழுமையாகக் கைத்தொழில் நடவடிக் கைகளில் ஈடுபட்டு வந்திருந்தது. ஆனால், தற்போது மிக குறைந்த எண்ணிக்கையான கைத்தொழில் நடவடிக்கைகளே நடைபெற்று வருகின்றன. ஆனால் தற்போது அரச மற்றும் ஏனைய நிறுவனங்கள் கைத்தொழில் துறையில் முதலிடுவதற்குத் தயாராக உள்ளன. இவற்றைவிட புடவைக் கைத்தொழில் மற்றும் உப்பள உற்பத்தியாகிய இரண்டு கைத்தொழிற்சாலைகள் தீவில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

உட்கட்டமைப்பு வசதிகளைக் கருத்திற்கொள்ளும்போது நீர் விநியோகம் பிரதானமான கூறாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக மன்னார் நகரம் குடிநீரைப் பெறுவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது. ஏனெனில், மன்னார் ஒரு தீவாகும். அதாவது மக்கள் தங்களது நாளாந்தத் தேவைக்கு நிலக்கீழ் நீரில் தங்கியிருக்கின்றனர். அதுவும் அதிகம் உவர்த்தன்மையைக் கொண்டிருப்பதால் பருகுவதற்கு ஏற்றதாக இல்லை.  எனவே குழாய் மூலமான நீரே இப்பிரதேசங்களின் பிரதான நீர் மூலமாகும். இது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் விநியோகிக்கப்படுகிறது. தற்போது மன்னார்த் தீவில் மூன்று நீர் விநியோக மூலங்கள் காணப்படுகின்றன. அவையாவன: முருங்கன் கிணற்று நீர், நகர சபையின் கீரிக் கிணற்று  நீர், மற்றும் பேசாலை நிலக்கீழ் நீர் என்பனவாகும். மன்னார் தீவின் ஒரு நாளுக்கான நீர்த் தேவைப்பாடு 9000 கன மீற்றராக உள்ள நிலையில்  தற்போது 60 வீதமானோர் மக்கள் முருங்கன் நீர் விநியோகத் திட்டத்திலிருந்தும் 40 வீதமானோர் நிலக்கீழ் நீரிலிருந்தும் நீரைப் பெறுகின்றனர்.

**(பின்னிணைப்பு 4: தற்போதைய நீர்ப்பாவனை, மன்னார்த்தீவு)**

இலங்கை மின்சார சபை அறிக்கையின்படி மன்னார்ப் பிரிவில் வசிக்கின்ற மக்கள் போதியளவு மின்சார இணைப்பைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறது. அதாவது இலங்கை மின்சார சபையிடமிருந்து 100 வீதமான மின்சாரத்தைப் பெறுகின்றனர். தொலைத்தொடர்பு தொடர்பான விடயத்தில் இலங்கை ரெலிக்கொம் முழு நகருக்கும் சேவை வழங்கி வருகின்றது. அத்துடன், CDMA, ADSL என்பனவும் அதற்கு மேலதிக மாகக் காணப்படுகின்றன.

2013இல் இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தினால் பின்வரும் சேவைகளான பல்சேவை அணுகு மையம் (Multiple Service access Nodes) வர்த்தக எண்ணிம சந்தாதாரர் (Business degital Subscribers) மற்றும் WI-fi நேரடி இணைப்பு போன்ற வசதிகள் மன்னார்  தீவுப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக உட்கட்டுமானத் தோற்றத்தினை நோக்கும்போது சுகாதாரமும் கல்வியும் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. மன்னார்த்  தீவின் சுகாதார வசதிகளைக் கருத்திற்கொள்ளும்போது அங்கு ஒரு மாவட்ட வைத்தியசாலையும் மூன்று பிரதேச வைத்தியசாலைகளும் உள்ளன. நோயாளர் கட்டில்களின் கொள்ளளவினை நோக்கும்போது பொது வைத்தியசாலை ஏறத்தாழ 350 கட்டில்களையும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகள் கிட்டத்தட்ட 60 கட்டில்களையும் கொண்டுள்ளன. பொது வைத்தியசாலையில் குறிப்பாக, 2016இல் மொத்தமாக 60000 நோயாளிகள் உள்நோயாளர் பிரிவில் (கட்டில்) பதிவாகியுள்ளனர். இந்நிலையில்  350 கட்டில்களில்

தங்கியிருந்துள்ளனர். கட்டில்களில் நோயாளிகள் இருக்கின்ற வீதம் 45.73 ஆகும். மேலும் ஏனைய மூன்று பிரதேச வைத்தியசாலைகளில் உள்நோயாளர் (கட்டில்) நாட்கள் 60 கட்டில்களில் 1000ஐ விடக் குறைவாகப் பதிவாகியுள்ளது. மேலும் அங்கு பதிவுசெய்யப்பட்ட 8 தனியார் மருத்துவ நிலையங்கள் உள்ளன. அவற்றில் தினமும் 100 - 150 நோயாளிகள் சிகிச்சைபெற்று வருகின்றனர். மேலும் 50 - 80 வரையான நோயாளிகள் மருத்துவ ஆலோசனைகளை இம் மருத்துவ நிலையங்களிலிருந்து பெறுகின்றனர். மன்னார் பொது மருத்துவமனை, மன்னார் மாவட்டத்திலுள்ள ஒரேயொரு பெரிய வைத்தியசாலையாகும். இங்கு அதிகமாக மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் ஆய்வுகூட வசதிகளுக்கும் பாரியளவிலான பற்றாக்குறை நிலவுகிறது.

அத்தியாயம் 02

**பூர்வாங்க ஆய்வு**

மன்னார் மாவட்ட உட்பிரதேசங்களுக்கு மடு வலயம், கரையோரப் பிரதேசங்களுக்கு மன்னார் வலயம் என இரண்டு கல்வி வலயங்களைக் கொண்டுள்ளது. இவை மன்னார் நகரம், முசலி, நானாட்டான் ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன. கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி தற்போதுள்ள நிலைமையில் மன்னார் வலயத்தினுள் 40 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. மன்னார்த் தீவு 25 பாடசாலைகளைக் கொண்டுள்ளது.

மன்னார் வலயம் இரண்டு வகையான பாடசாலைகளைக் கொண்டுள்ளது.வலயத்தினுள் 4 தேசிய பாடசாலைகள், 21 மாகாணப் பாடசாலைகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இங்கு தனியார் பாடசாலைகள் இல்லை. 21 பாடசாலைகள் தமிழ் பேசும் தமிழ் சமூக மாணவர்களையும் அதேநேரம் 4 பாடசாலைகள் தமிழ் பேசும் முஸ்லிம் சமூக மாணவர்களையும் கொண்டுள்ளன. மன்னார்க் கல்வி வலயத்தினுள் மொத்த மாணவர் குடித்தொகையில் ஆசிரியக் குடித்தொகை 743 ஆகக் காணப்படுகின்றது. ஆசிரிய மாணவ விகிதம் 1:17 ஆக உள்ளது.

அட்டவணை 1 : மாணவர் ஆசிரியர் விகிதம், (2010 - 2015)

| **ஆண்டு** | **மன்னார் வலயம்** | | |
|---|---|---|---|
| | **மாணவர் எண்ணிக்கை** | **ஆசிரியர் எண்ணிக்கை** | **மாணவர் ஆசிரியர் விகிதம்** |
| 2010 | 21417 | 1173 | 1:18 |
| 2011 | 22112 | 1188 | 1:18 |
| 2012 | 22840 | 1377 | 1:16 |
| 2013 | 23255 | 1421 | 1:16 |
| 2014 | 23240 | 1364 | 1:17 |
| 2015 | 23543 | 1428 | 1:17 |

மூலம்: வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம், மன்னார் வலயம் - 2015

வடிகாலமைப்பினைக் கருத்திற்கொள்ளும்போது திட்ட ஆய்வுப் பிரதேசம் 18 நீர் நிலைகளைக்கொண்டுள்ளது. ஆனால், அநேகமானவை பொதுமக்களால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளன. இந்நீர்நிலைகள் தற்போதுள்ள வடிகாலமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளன. UNOPS நிறுவனத்தின் வடிகாலமைப்பு நிர்மாணத் திட்டத்தின் கீழ் மன்னார் நகரின் வடிகாலமைப்பு முறைமை உருவாக்கப்பட்டது. இவ் வடிகாலமைப்பு முறைமையானது வெள்ள நிலைமையை கட்டுப்படுத்த உறுதுணையாக உள்ளது.

**(பின்னிணைப்பு 5 : நீரேந்தும் பிரதேச விபரங்கள் EU - வடிகாலமைப்புத் திட்டம், UNOP – 2012)**

மன்னார்த் தீவு முழுவதனாலும் தினமும் 25.5 மெற்றிக்தொன் திண்மக்கழிவு உருவாக்கப்படுகிறது. மொத்தக் கழிவில் 68 % குடியிருப்பு நடவடிக்கைகளாலும் 4 % கைத்தொழில் துறையினாலும் மற்றும் 28 % வர்த்தகத் துறையினாலும் உருவாக் கப்படுகிறது. திண்மக் கழிவானது மத்திய நகரப் பிரதேசத்தில் தினமும் சேகரிக்கப் படுவதுடன் ஏனைய பிரதேசங்களில் கிழமைக்கு இரண்டு தடவையுமாக சேகரிக்கப் படுகின்றது. தற்போது 3 இடங்களில் கழிவு கொட்டப்படுகிறது. அவை 8 ஏக்கர் பரப்புக் கொண்டவையாக நகர சபைப் பகுதியிலும் பிரதேச சபைப் பகுதியிலும் அமைந்துள்ளன. இப்பிரதேசத்தில் வினைத்திறனான கழிவு சேகரித்தல் மற்றும் முகாமைத்துவ முறைமையானது நடைமுறையில் இல்லை.

தீவின் கடற்கரை பகுதியில் உயர் சூழல் உணர்திறன் பகுதிகள் காணப்படுகின்றன. (வரைபடம் 1 ஐ பார்க்கவும்: சூழல் கூருணர்வு பகுப்பாய்வு) அநேகமாக எல்லாப் பிரதேசங்களுமே தட்டையான நிலத் தோற்றத்தினை உடையனவாக உள்ளன. மன்னார் ஒரு தீவாக இருப்பதனால் அது ஒரு தனித்துவமான சூழ்நிலையினைக் கொண்டுள்ளது. மன்னார்த்தீவு முழுவதுமான நிலப்பயன்பாட்டில் 396 ஹெக்ரேயர் அல்லது 2.78 வீதமான நிலம் தாழ் நிலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எழுத்தூர், பனங்கட்டிக்கொட்டு மேற்கு, புறக்கோட்டைப் பகுதி, தாராபுரம் கிழக்கு, துள்ளு குடியிருப்புப் பகுதிகள் தாழ்நிலப் பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. அபிவிருத்தி நோக்கினைக் கருத்திற்கொள்ளும்போது மன்னாரில் நிலத்திற்கான கேள்வியை அதிகரிக்கும் நிலை உள்ளது. மன்னார்த் தீவானது இலங்கையின் வரண்ட பிரதேசமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மன்னார்த் தீவில் வெப்பநிலை $28^{0}$ C இல் இருந்து $33^{0}$ C வரை வேறுபடுகின்றது. அத்துடன், பொதுவாக உயர்வான வெப்பநிலை சித்திரை – வைகாசி மாதங்களில் பதிவாகிறது. மன்னார்த் தீவின் தனித்துவமான காலநிலை மற்றும் பருவக் காற்றினைக் கருத்திற்கொள்ளும்போது காற்று சக்தி, சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க வளங்களுக்கான அதிகளவிலான உள்ளார்ந்த வாய்ப்பினைக் கொண்டுள்ளது.

மன்னார்த் தீவின் சூழலியல் தொகுதி தொடர்பில் கண்டல் தாவரங்கள் முக்கியமான இடத்தினை வகிக்கின்றன. மன்னார்த் தீவின் குடாப்பகுதிகள் விசேடமான கண்டல் தாவரங்களைக் கொண்டிருப்பதுடன் இப்பகுதிகளில் பல வகையான கண்டல் தாவரங்களைக் காணமுடியும். குறிப்பிடுவதற்கு சுவாரஸ்யமான விடயம் இந்தத் தாவரங்களில் றிசோபோரா (RHIZO PHORA) அவிசென்னியா (ABICENNIA) புறுகியேரா (BROGVIERA) செரியோப்ஸ் (CERIOPS) லும்னிற் செரா (LIMNITZERA) போன்றவை உள்ளடங்குகின்றன. மேலும் மன்னார் வளைகுடாப் பிரதேசம் நாட்டின் ஏனைய பிரதேச கடலோரங்களைவிட உவர் நீர் சேற்றுநிலத்தாவரங்களை அதிகமாகக் கொண்டுள்ளன. மேலும் உவர் சேற்று நிலங்கள் கண்டல் தாவரங்களுக்கு அண்மையாகக் காணப்படுவதுடன் உள்நோக்கிய, வெளிநோக்கிய நாளாந்த வற்றுப்பெருக்கிற்கு அமைவானதாகக் காணப்படுகிறது. உவர் சேற்றுநிலங்களில் வளரும் தாவரங்கள் வெள்ளத்துக்கும் உவர்த்தன்மை மாற்றங்களுக்கும் தம்மை இயைபுபடுத்தியுள்ளன.

அத்தியாயம் 02


**பூர்வாங்க ஆய்வு**

**வரைபடம் 1: சூழல் கூருணர்வுப் பகுப்பாய்வு**




அபிவிருத்தி அழுத்தப் பகுப்பாய்வு அடிப்படையில் மன்னார் நகர சபைப் பிரதேசம் மற்றும் பேசாலை நகரம் அதிக அபிவிருத்தி அழுத்தத்தினைக் கொண்டிருப்பதனைக் காண முடியும். அதாவது வரைபடம் 2 இல் காட்டப்பட்டுள்ளபடி A14 வீதியினூடாக காட்டப்கின்றது. அதேநேரம், ஏனைய பிரதேசங்கள் குறைவான அபிவிருத்தி அழுத்தங்கொண்ட பகுதிகளாக அடையாளங்காணப்பட்டுள்ளன. எனவே எதிர்கால அபிவிருத்திக்கு அதிகளவான நிலம் அங்கு காணப்படுவதால் எதிர்கால மன்னார்த் தீவை அபிவிருத்தி செய்வதற்கு உள்ளார்ந்த வாய்ப்புக்கள் சாதகமாகக் காணப்படுகின்றன. அத்தோடு, மன்னார்த் தீவு உள்ளூர் மற்றும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை ஈர்க்கக்கூடிய பிரதானமான உல்லாசப் பிரயாண மையங்களைக் கொண்டிருக்கிறது. அவையாவன: ஆதாம் பாலம், பெருக்க மரம், பறவைகள் சரணாலயம், வில்பத்து தேசிய பூங்கா, முத்து மேடை மற்றும் மன்னார்க் கோட்டை என்பன சில உதாரணங்களாகும்.

**வரைபடம் 2: அபிவிருத்தி அழுத்தப்பகுப்பாய்வு**




அத்தியாயம் 02

**பூர்வாங்க ஆய்வு**

இடரீதியான ஒழுங்கமைப்பு விதி (Space syntax) என்பது வீதி வலையமைப்பின் தொடர்புநிலையை அல்லது ஒருங்கிணைப்பை விபரித்து பகுப்பாய்வு செய்யும் ஒரு முறைமையாகும். இப்பகுப்பாய்வின்படி அதிகளவிலான வீதி ஒருங்கிணைப்பு மன்னார் மாவட்டத்தின் ஏனைய நகரங்களைவிட மன்னார் நகர சபை பகுதியிலேயே பதிவுசெய்யப்பட்டுள்ளது. நடுத்தர வீதி ஒருங்கிணைப்பானது பேசாலை, எருக்கலம்பிட்டி மற்றும் தாழ்வுபாடு பகுதிகளில் வரைபட இலக்கம் 08 இல் காட்டப்பட்டுள்ளபடி பதிவாகியுள்ளது. பகுப்பாய்வுகளின்படி,மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசங்கள் எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள சாத்தியக்கூறான பகுதிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

**வரைபடம் 3: இடரீதியான ஒழுங்கமைப்பு விதிப்பகுப்பாய்வு**




## 2.2. திட்டமிடலும் இட அமைவும்

மன்னார் மாவட்டம் இலங்கையின் வட மாகாணத்தின் மேற்குத் திசையில் அமைந்துள்ளது. மாவட்டத்தின் பிரதான நகரமாக மன்னார் நகர சபை காணப்படுவதோடு இது மன்னார் தீவில் அமைந்துள்ளது. இதனால் மன்னார் தீவு என அழைக்கப்படுவதோடு நகர அபிவிருத்தி அதிகார சபையால் 1998ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி பிரதேசமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.தீவின் அமைவிடமானது வரைபட இலக்கம் 04 இல் காட்டப்பட்டுள்ளது. இது ஏனைய பிராந்திய நகரங்களான யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்றவற்றுடன் நேரடித் தொடர்பைக் கொண்டுள்ளது.அத்தோடு இலங்கையின் தலைநகரத்துடன் 312 கிலோமீற்றர் தூரத்தில் பௌதீக ரீதியான தொடர்பைக் கொண்டுள்ளது. மன்னார் தீவானது இலங்கையின் ஏனைய பிரதான நகரங்களுடன் A - 14 ( மதவாச்சி - தலைமன்னார் ) வீதியூடாகவும் மற்றும் A - 32 (பூநகரி-நாவற்குழி ) வீதியூடாகவும் தொடர்பைக் கொண்டுள்ளது. அத்தோடு மன்னார் புகையிரத சேவையானது மதவாச்சி புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பித்து மன்னார் தீவினூடாகச் செல்கின்றது.

அத்தியாயம் 02

**பூர்வாங்க ஆய்வு**

**உரு 2: இட அமைவு**




மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை - வடமாகாணம்

மன்னார் தென்னிந்தியாவின் இராமேஸ்வரத்தினையும் இலங்கையின் தலை மன்னாரையும் இணைக்கின்ற வரலாற்றுக் காலத்தின்போது வெளித் தெரியும் ஒடுக்கமான பாறைகள் மணல் தொடரைக் கொண்ட சங்கிலி போன்ற முருகைக் கற்பாறைத் தொடரைக் கொண்ட 30 கிலோமீற்றர் நீளம் கொண்டு ஆதாம் பாலம் அல்லது இராமர் பாலம் காணப்படுவதாலாகும்.

தேசிய, பௌதீகத் திட்டம் 2050இன் படி தேசிய ரீதியில், மன்னார் பிரதான சேவை மையமாகக் காணப்படுகின்றது. மன்னார் மாவட்டத் தலைநகரமாகவும் தொழிற்படு கின்றது. அத்துடன், வடமாகாணத்துக்கான வரைபு பௌதீகத் திட்டத்தின்படி மன்னார் நகர மையமானது மாவட்டத்தின் சேவை மற்றும் நிர்வாக மையமாகவும் கனிய வளக் கைத்தொழில் மையமாகவும் வர்த்தக மையமாகவும் மாவட்ட வைத்தியசாலையுடன் கூடிய சுகாதார சேவை மையமாகவும் தேசிய ரீதியில் மீன்பிடியை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கை மற்றும் வர்த்தக மையமாகவும் முன்மொழியப்பட்டுள்ளது.

## 2.3. திட்டமிடல் எல்லையை வரையறுத்தல்

திட்டமிடல் எல்லை வரையறுத்தல் பின்வரும் மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

### 2.3.1. தொழிற்பாட்டு எல்லை

அபிவிருத்தி அழுத்தப் பகுப்பாய்வு மற்றும் இடரீதியான ஒழுங்கமைப்பு விதிப்பகுப்பாய்வு களின் அடிப்படையில் மன்னார் தீவின் செயற்பாட்டு எல்லையானது மன்னார் நகரசபை, எருக்கலம்பிட்டி, பேசாலை மற்றும் தாழ்வுப்பாடு போன்ற பகுதிகளை உள்ளடக்குகிறது. அத்தோடு அபிவிருத்திப் போக்கு மற்றும் திறன் அபிவிருத்தி நடவடிக்கைகளை A14 வீதியின் ஊடாக மன்னார் நகரத்திலிருந்து தலைமன்னார் நோக்கி நகர்த்தியுள்ளது.

மேலும் தீவானது கடல் வளங்கள், காற்றுவலு, சூரிய வலு, சுற்றுலாத்துறை மற்றும் கைத்தொழில்துறை நடவடிக்கைகளுக்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளது. எனவே மன்னார்த் தீவு முழுவதும் மன்னார் அபிவிருத்தித் திட்டத்தில் கருத்தில் கொள்ளப் பட்டுள்ளது.

### 2.3.2. புவியியல் எல்லை

நகர அபிவிருத்திப் பிரதேசமானது தீவாக இருப்பதால், கடற்கரைகள், கழிமுகங்கள் மற்றும் சுங்கக்கல் சங்கிலித் தொடராலான ஆதாம் பாலம் போன்ற சாதகமான புவியியல் பண்புகளையும் தீவில் பல உள்ளார்ந்த மற்றும் சுற்றுப்புற கடல் வளங்களையும் கொண்டுள்ளது.


எனவே தீவின் புவியியல் தன்மையைப் பாதுகாப்பதற்கும் கிடைக்கப்பெறும் வளங் களைப் பயன்படுத்துவதற்கும் மன்னார் தீவு திட்டமிடலுக்கான புவியியல் எல்லையாக வரையறுக்கப்படுகிறது.

### 2.3.3. நிர்வாகப் பிரிவு எல்லை

மன்னார்த் தீவானது மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபை ஆகிய இரண்டு நிர்வாக சபைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் நகர சபையானது முழுமையாகவும் பிரதேச சபையானது பகுதியளவிலும் அதாவது மன்னார் தீவிற்குள் உள்ளடங்கும் பகுதிகள் மட்டுமே நகர அபிவிருத்திப் பிரதேசமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி பிரதேசமானது செயற்பாடுகளின் அடிப்படையிலும் தொழிற்பாடுகளின் பரம்பல் மற்றும், புவியியல் தோற்றப்பாடுகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மன்னார் தீவிற்கான திட்டமிடல் எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 4: அமைவிட வரைபடம்**



அத்தியாயம் 03

# அபிவிருத்தித் திட்டத்துக்கான தேவை

அத்தியாயம் 03

**அபிவிருத்தித்திட்டத்துக்கான தேவை**

## 3. அபிவிருத்தித்திட்டத்துக்கான தேவை

மன்னார் அபிவிருத்தித் திட்டமானது அப்பிரதேசத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் அங்குள்ள வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவதற்காகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி அமுக்கத்தினைக் கொண்டிருப்பதாக ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு, அல்லது வளர்ச்சி மற்றும், அபிவிருத்தி காரணமாகப் பாதகமான விளைவுகளைக் கொண்டுள்ள பகுதிகளுக்கான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முகமாக அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு உள்ளூர்த்திட்டமிடல் ஒழுங்கமைப்பின் ஊடாக உள்ளூர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதும் எதிர்கால வளர்ச்சியை முகாமை செய்வதற்குமாகும். மன்னார்த் தீவினுடைய பிரச்சினைகள், திட்டமிடலாளரின் கண்ணோட்டத்திலும் விபரமான பகுப்பாய்வின் மூலமும் அப்பிரதேசத்துடன் தொடர்புடைய பங்குதாரர் கண்ணோட்டத்திலிருந்தும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பிரச்சினைகள் அதன் முக்கியத்துவம், தாக்கம், சூழ்நிலை போன்றவற்றின் அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், மன்னார் அபிவிருத்தித் திட்டத்துக்கான தேவைகளை பின்வருமாறு அடையாளப்படுத்த முடியும்.

அதிகளவு உயர்ந்த கடல் வளங்கள், மணற்கடற்கரைகள், மீன்பிடி மற்றும் சக்திக்கு சாதகமான வானிலை மற்றும் காலநிலை (காற்று மற்றும் சூரிய சக்திக்கான உள்ளார்ந்த வளங்கள் கிடைப்பனவு) மற்றும் அதிகளவு மன்னார் வளைகுடாவின் உயிர்ப் பல்லினத்தன்மை போன்றவற்றால் வளப்படுத்தப்பட்டுள்ள தீவாகும். மன்னார்த் தீவானது அதிகளவு இயற்கை வளங்களைக் கொண்டிருக்கின்றது. ஆனால் இதுவரை அபிவிருத்தித்திட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள் இன்மையினால் உள்ளார்ந்த வளங்கள் பயன்படுத்தப்படாத தன்மையினை உருவாக்கியுள்ளது.

மன்னார்த் தீவின் சிறந்த உள்ளார்ந்த வளமாக தீவின் தென் பகுதியை உள்ளடக்கிய கடல்சார் வளங்கள் காணப்படுகின்றன. மன்னார் வளைகுடா தென்னாசியப் பிராந்தியத்திலேயே அதிக வளமான கடற்கரையோரமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, NARA நிறுவனமானது இப்பகுதி 3200 கடல்வாழ் விலங்கினங்களையும் தாவரங்களையும் கொண்டிருப்பதாகவும் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் முதலாவது உயிரினக் கோளமாகவும் அடையாளப்படுத்தியுள்ளது. இது அதிகளவு உயிர்ப்பல்லினத் தன்மையைக் கொண்ட கடற்கரையில் ஒன்றாகும். மன்னார் வளைகுடாவிலுள்ள 6 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நன்னீர் மீன்கள், ஈரூடக உயிரினங்கள், ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் உள்ளிட்ட 398 முள்ளந்தண்டுள்ள உயிரினங்களும் 98 முள்ளந்தண்டற்ற (தும்பி, வண்ணத்துப்பூச்சிகள்) உயிரினங்கள் போன்ற இந்த இடங்களுக்கே சிறப்பான உள்ளூர் உயிரினங்களை இங்கு காணமுடியும். அவற்றுள் 31 முள்ளந்தண்டுடையவை. இப்பிரதேசத்துக்கே உரியனவாகும் 66 இடம்பெயரும் பறவைகள், 2 அறிமுகப்படுத்தப்பட்ட நன்னீர் மீனினங்கள், 8 இவ்வூருக்குப் பழக்கப் படுத்தப்பட்ட முலையூட்டிகள் என்பன காணப்படுகின்றன.

அத்தியாயம் 03

**அபிவிருத்தித்திட்டத்துக்கான தேவை**

மன்னார்த் தீவின் எதிர்கால அபிவிருத்திக்கு ஒரு உந்து விசையாக கடல் சார் வளங்கள் காணப்படுகின்றன. தற்போது 10 வீதக் கடல் சார் வளங்கள் பயன்படுத்தப்பட்டபோதும் ஏனைய வளங்கள் பயன்படுத்தப்படாமலேயே உள்ளன.

வட மாகாணத்தில் மன்னார் இரண்டாவது அதிக மீன் உற்பத்தி செய்யும் இடமாகத் தற்போது காணப்படுகின்றது. அங்குள்ள வளங்கள் சரியாகப் பயன்படுத்தப்பட்டால் மாகாணத்தில் முதல்நிலை உற்பத்தி இடமாக உருவாகுவதற்கான சாத்தியம் உள்ளது.

தற்போது மீன் பிடிக்கும் எல்லை 200 கடல் மையில் தோட்டமாக காணப்பட்ட போதிலும் நவீன மீன்பிடி முறைகள் மற்றும் உபகரணங்கள், கருவிகள், பாதுகாப்பான நிறுத்துமிடங்கள், சேமிப்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் மீன்பிடித் துறைமுகம் இல்லாமை போன்றன குறைபாடுகள் காரணமாக உள்ளூர் மீன்பிடி சமூகம் தற்போதைய மீன்பிடி நடவடிக்கைகளை 25-40 கடல் மைல் தூரம் வரையிலே மேற்கொள்கின்றனர். மற்றும் தற்போது 18 பல நாள் மீன்பிடிப் படகுகள் மட்டுமே காணப்படுகின்றன.எனவே இது குறைந்த அளவான மீன் உற்பத்திக்கு வழிவகுப்பதோடு தேசிய பங்களிப்பில் 4 % ஆக மட்டுமே காணப்படுகின்றது.

போக்குவரத்து முறை, சேவை மையங்கள் மற்றும் தீவின் தெற்கு மற்றும் வடக்கு கடற்கரை ஆகியவற்றுக்கும் மீன்பிடி முகாம்களுக்கும் இடையே தொடர்பு இல்லாத நிலையில் போக்குவரத்து அமைப்பில் பல தடைகள் காணப்படுகின்றன. எனவே, தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள கிடைக்கக்கூடிய வளங்களை வினைத்திறனாக பயன்படுத்த முடியாதுள்ளது. அனைவருக்கும் இலகுவாக (உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மக்களுக்கு) அணுகக்கூடிய மற்றும் வினைத்திறனான பொது போக்குவரத்து முறையை வழங்கு வதற்கான திறன் அதிகரிப்பு உள்ளிட்ட விரிவான சாலை வலையமைப்பை உருவாக்கி கிடைக்கக்கூடிய வளங்களிலிருந்து அதிகபட்ச பயன்பாட்டைப்பெற முன்மொழியப் பட்டுள்ளதோடு மக்கள் மற்றும் சரக்குகளுக்கான பாதுகாப்பான மற்றும் வசதியான போக்குவரத்து வசதியை உறுதி செய்கிறது.

மன்னார் தீவானது மணித்தியாலத்திற்கு 40 -50 கிலோமீற்றர் காற்றின் வேகத்தையும் GHI 2100 உலகளாவிய கிடைமட்ட கதிர்வீச்சையும் கொண்டுள்ளது. இதன் காரணமாக நிலைபேறான சக்தி அதிகாரசபையானது (SEA) மன்னார் தீவினை இலங்கையின் உயர்ந்த நிலையான சக்தி உற்பத்தி செய்யும் இடங்களில் ஒன்றாக அடையாளம் கண்டுள்ளது. சக்தி வளங்களை விருத்திசெய்து தொடர்ந்து பயன்படுத்துவதற்குப் பெரிதும் ஆதரவாக இருப்பது அபிவிருத்தி நிலம் காணப்படுவதும் சாதகமான வானிலை காணப்படுவதுமாகும். ஆனால், உள்ளார்ந்த வளங்கள் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

மன்னார்த் தீவு மணற்கடற்கரைகளைக் கொண்டிருந்தபோதும், கீரிக் கடற்கரை மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு (சுற்றுலாத்துறைக்கு ஏற்றதாக) உள்ளன. மன்னார்த் தீவின் எதிர்கால உள்ளூர்ப் பொருளாதாரத்தையும் முழுத் தீவின் பிராந்தியப் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கும் மன்னாரின் வளங்களைப் பாதுகாத்துப் பேண்தகு நிலையை ஏற்படுத்துவதற்கும் அங்கு காணப்படும் வளங்கள் சரியாகப் பயன் படுத்துவது முக்கியமானதாகும்.

மற்றுமொரு தேவைப்பாடானது தொழிற்பயிற்சியும் மூன்றாம் நிலைக் கல்வியும் மட்டுப்பாடாகக் காணப்படும் அல்லது இல்லாது காணப்படும் நிலையாகும். தொழில்சார் பயிற்சிகள் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி வசதிகள் பற்றாக்குறை அல்லது காணப்படாமை, குடித்தொகையில் பெரும் பிரிவினர் திறனற்ற கூலித் தொழிலாளராகவும் பெரும் எண்ணிக்கையானவர்கள் பருவகாலத் தொழில் புரியும் அல்லது தொழிலற்ற வர்களாகவும் இருக்கின்றார்கள். இது பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது. 6 - 18 வயது வகுப்பைச் சார்ந்த 13000 பேர் மன்னார்த் தீவில் வசிக்கின்றனர்.

அத்தியாயம் 03

**அபிவிருத்தித்திட்டத்துக்கான தேவை**

இவர்களில் 8 வீதமானோர் மட்டுமே க.பொ.த. உயர்தரம் கற்கின்றனர். அதில் 100 - 150 வரையிலானவர்கள் மட்டுமே உயர்கல்விக்குத் தகுதிபெறுகின்றனர். மிகுதி 900 பேரும் தொழில்சார் கல்விக்கும் மூன்றாம் நிலைக்கல்வி பெறுவதற்கும் தகுதியுடையவர்களாகின்றனர். ஆனால், தற்போது அவர்களுக்கு மூன்றாம் நிலைக் கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இந்நிலையில், இக்குடித்தொகை திறனற்ற கூலித் தொழிலாளியாக மாறுகின்றது. ஆகவே, தொழிற் கல்வியையும் மூன்றாம் நிலைக் கல்வியையும் விருத்தி செய்வது திறன்மிக்க தொழிற்பாடுடைய விரிவுபடுத்துவதுடன் மன்னாரின் பொருளாதார வளர்ச்சியையும் விரிவுபடுத்தும்.

இங்கு அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் மன்னார்த் தீவின் எதிர்கால அபிவிருத்திக்கு முக்கியமானதாக உள்ளது. ஆதலினால், மன்னார்த் தீவின் எதிர்காலப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் அடையாளங்காணப்பட்ட பிரச்சினை களைத் தீர்ப்பது பிரதான நடவடிக்கையாகும். “பேசுகின்ற கடற் தோற்றமும் ஈர்க்கின்ற கடலும்” என்ற தூர நோக்கினை அடைவதற்கு இதுவே வழியாகும்.

அத்தியாயம் 04

# திட்டமிடல் கட்டமைப்பு

அத்தியாயம் 04

**திட்டமிடல் கட்டமைப்பு**

**4.1 தொலைநோக்கு**

"பேசும் கடற் தோற்றமும் கவருகின்ற கடலும்"

**4.2 தொலைநோக்குக்கூற்று**

பேசுகின்ற கடற் தோற்றம் என்பது கடலைப் பிரதிபலிக்கும் கலைப் படைப்பாகும். அத்தோடு, கடல்சார் ஓவியங்கள் அல்லது கடற் படைப்பு அல்லது கடல் பிராந்தியத்துடன் தொடர்புடைய ஓவியம் அல்லது கடற் படைப்பாகும். கடல் தோற்றம் அல்லது கடற் காட்சி பொதுவாக கடல்சார் பல்லினத்தன்மையைக் காட்டுவதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப் படுகிறது. கடல் தோற்றம் அல்லது கடற் காட்சி கடலின் தோற்றத்தை அல்லது வெளியி லிருந்து கரையை நோக்கும்போது உள்ள காட்சியைக் குறிக்கின்றது. சமுத்திரம், கடற்கரைகள், கடலோரங்கள், கடலில் வள்ளங்கள், கடல் பிம்பங்கள், கடல் தோற்றத் தினைக் கலைத்துவ நயங்கொண்டவையாக ஆக்குகின்ற கூறுகளாகும்.

கவரும் கடல் / கவர்ச்சியான சமுத்திரம் / ஈர்க்கும் கடற் சூழல் மன்னார்த் தீவு முழுவதும் மக்களை ஈர்க்கின்ற ஒரு காந்தம் போன்று தொழிற்படும் இப்பதம் மீன்பிடித்துறை மற்றும் சக்தி அபிவிருத்தியைப் பிரதிபலிக்கின்றது.

மன்னார், அதிகளவு இயற்கை வளங்களையும் கடல்சார் கடற்கரையோர வளங் களையும் கொண்டிருக்கின்ற ஒரு இடமாகும். அத்துடன் சுற்றுலாத்துறை, சக்தி, மீன்பிடித்துறைகளில் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கு வேண்டிய அதிகளவு உள்ளார்ந்த வளங்களைக் கொண்டுள்ளது. அதுமட்டுமல்ல, சுற்றாடல் வளங்களைப் பாதுகாப்பதும் பேணுவதும் அவசியமானது. இங்கு தூரநோக்கு மன்னாரின் சூழல் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவது மட்டுமன்றிப் பேணிப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகிறது. ஆகவே, பேசுகின்ற கடற் தோற்றம் என்ற பதம் தென்னாசியாவின் சிறந்த கடல்சார் உயிர் பல்லினத் தன்மையைக் கொண்டுள்ள குடாப் பகுதியில் கடல்சார் வளங்களை விருத்தி செய்வதனைக் குறிக்கும்.

2030ஆம் ஆண்டு மன்னார்த் தீவினைப் பொருளாதார நடவடிக்கைகள், வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் மீன்பிடி, சுற்றுலா, சக்தித் துறைகளின் அபிவிருத் தியை மேம்படுத்துவதன் ஊடாக ஏனைய பிராந்தியங்களுக்கு நேரடியாகத் திறந்து விடப்படும். அதுமட்டுமல்ல, இலங்கையில் மன்னார் முழு நாட்டையும் ஈர்க்கக்கூடியதாகத் தொழிற்படுவதோடு தேசிய மட்டத்தில் பொருளாதாரத்தில் ஒரு ஸ்திரத்தன்மை கொண்ட தாகவும் உருவாகும்.

**4.3. குறிக்கோள்கள்**

குறிக்கோள் 1 : வட மாகாணத்தில் பலம்மிக்க மீன்பிடி மையமாக வருதல்

குறிக்கோள் 2 : புதுப்பிக்கத்தக்க சக்திக்கு ஒரு சிறப்பான / நிறைவான இடமாக இருத்தல்.

குறிக்கோள்3 : இயற்கைச்சூழல் அனுபவத்தையும் முக்கியத்துவம்வாய்ந்த இடங் களையும் மேம்படுத்துதல்.

### 4.4. இலக்குகள்

**குறிக்கோள் 1**

1. 2030ஆம் ஆண்டளவில் மீன்பிடித்துறையில் 3500 வேலைவாய்ப்பினை உருவாக்குவதனை வசதிப்படுத்தல்
2. ஒவ்வொரு ஆண்டும் கடல் தொழில் தொடர்பான நடவடிக்கைகளுக்கு தகுதியான தொழிலாளர் எண்ணிக்கையில் 50%மானவர்களை திறமை யான / அறிவுள்ள நபர்களாக பயிற்றுவிக்க வசதியளித்தல்.
3. 2030ஆம் ஆண்டளவில் மீன்பிடி முகாம்களையும் சேவை மையங்களை யும் இணைப்பதன் மூலம் தீவின் வடக்குக் கடற்கரைகளையும் தெற்குக் கடற்கரையை இணைக்கும் உள்ளிணைப்பை ஏற்படுத்தல்



**குறிக்கோள் 2**

1. 2030ஆம் ஆண்டளவில் காற்று மற்றும் சூரிய வலுவிலிருந்து 10 வீதமான மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின் வலையமைப்புக்கு வழங்கு வதனை வசதிப்படுத்தல்.

**குறிக்கோள் 3**

1. 2030ஆம் ஆண்டளவில் இயற்கைச் சூழலைப் பேணிப் பாதுகாத்தல்
2. 2030ஆம் ஆண்டளவில் மன்னாரின் வரலாற்று மற்றும் கலாசார இடங்களின் தொல்லியல் பெறுமானங்களை மேம்படுத்துதல்.
3. 2030ஆம் ஆண்டு முடிவில், கடல்சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்து வதற்காக 3000 சுற்றுலாப் பயணிகளைக் கவருதல்.

அத்தியாயம் 05

# SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு

அத்தியாயம் 05

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**


இலக்கு 1 : வட மாகாணத்தில் பலம்மிக்க மீன்பிடி மையமாக வருதல்

| | | | |
|---|---|---|---|
| **பலம்**<br>1. வட மாகாணத்தின் மீன்பிடி உற்பத்தியில் மன்னார் இரண்டாம் இடத்திலுள்ளது<br>2. 36 வீதமான தொழிலாளர்கள் மீன்பிடியுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடுகின் றனர்<br>3. தீவாகக் காணப்படுதல் (87 கி.மீ. கடற்கரை)<br>4. சிறந்த காலநிலை (வெப்பம் $24^{o}$C - $35^{o}$ C, வடகீழ், தென்மேல் பருவக் காற்றுக்கள்)<br>5. 200 NM - மீன்பிடி நடவடிக் கைகளுக்கான எல்லை<br>6. வளம்மிக்க மீன்பிடித் தளத் தில் அமைந்துள்ளது | **S** | **W** | **பலவீனம்**<br>1. தொடர்புடைய வசதிகள் குறைவாக அல்லது போதியதாக இல்லை<br>1.1 மீன்பிடியுடன் தொடர் புடைய மூன்றாம் நிலைக்கல்வி<br>1.2 ஆழ்கடல் மீன்பிடியுடன் தொடர்புடைய முன்னேற்றகரமான கருவிகள், நுட்பங்கள் காணப்படாமை<br>1.3 துறைமுகம், தரிப்பிடங்கள், இறங்குதுறைகள் இன்மை<br>1.4 மீன் பதனிடுவதற்குப் போதிய நிலையங்கள் இன்மை<br>1.5 மீன்பிடி முகாம்களுக்கும் சந்தைகளுக்கும் இடையில் போதிய வீதி இணைப்பு இன்மை |
| **வாய்ப்புக்கள்**<br>1. பேசாலையில் மீன்பிடித் துறைமுகத் திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளமை. | **O** | **T** | **அச்சுறுத்தல்கள்**<br>1. இந்திய மீனவர்களின் அத்துமீறல் |

**பலம்**


**1. வட மாகாணத்தில் மன்னார் மீன் உற்பத்தியில் இரண்டாம் இடத்திலுள்ளது.**

2016ஆம் ஆண்டு மன்னாரின் கடல்சார் மீன் உற்பத்தி 17510 மெற்றிக்தொன் ஆகும். இது தேசிய உற்பத்தியில் 4 வீதமாகவும் வட மாகாண உற்பத்தியின் 23 வீதமாகவும் இருப்பதுடன் வடமாகாணத்தில் 2ஆம் இடத்தினைக் கொண்டிருக்கின்றது.





மூலம்: மீன்வளர்ப்பு மற்றும் மீன்வளமேம்பாடு அமைச்சு

2. 36 வீதம் கூலிப்படை/தொழிலாளர் படை மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்




மன்னார் தீவின் பொருளாதாரமானது பிரதானமாக மீன்பிடித் துறையில் 36.4 % ஊழியப் படையின் பங்களிப்புடன் தொழிற்படுகிறது.

3. தீவாக இருத்தல் (87 கி.மீ. கடற்கரையுடன்)




மூலம்: நில அளவைத் திணைக்களம், இலங்கை - 2010

மன்னார்த் தீவானது, மீன் பிடிப்பதற்குரிய உள்ளார்ந்த வளங்களைக் கொண்ட 87 கி.மீ. நீளமான கடற்கரையினால் சூழப்பட்டிருப்பதுடன் மன்னார் வளைகுடாவின் வளமான மீன்பிடித் தளத்தில் அமைந்துள்ளது.

**4. ஏற்ற காலநிலைத் தன்மைகள் (வெப்பம் 24$^{o}$C - 35$^{o}$C, தென்மேல், வடகீழ் பருவக் காற்றுக்கள்)**

மன்னார்த் தீவானது, மத்திய கோட்டு வரண்ட காலநிலை காணப்படும் இலங்கையின் வரண்ட வலயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய கோட்டுக் காலநிலை காரணமாக, மன்னார் கருவாடு உற்பத்திக்குப் புகழ் பெற்றுள்ளது.

அத்தியாயம் 05

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**

கருவாடு உற்பத்தியைக் கருத்திற் கொள்ளும்போது மன்னார்த் தீவானது 2012 - 2015ஆம் ஆண்டு காலப் பகுதியில் சராசரியாக 1800 மெற்றிக்தொன் கருவாட்டை உற்பத்தி செய்துள்ளது. மன்னார் மாவட்டம் முழுவதையும் கருத்திற் கொள்ளும்போது அதிகளவு கருவாடு உற்பத்தி 2015ஆம் ஆண்டு 7780 மெற்றிக் தொன்னாகப் பதிவாகியுள்ளது. அத்துடன், மன்னார்த் தீவிற்கு வடகீழ் மற்றும் தென்மேல் பருவக் காற்றுக்கள் சாதகமாக இருப்பதனால் வருடம் முழுவதும் மீன் பிடிப்பது சாத்தியமாக உள்ளது.

**5. மீன்பிடி நடவடிக்கைகளுக்கான 200 கடல் மைல்**

முன்னேற்றகரமான தொழில்நுட்பமின்மையும் கருவிகளின் பாவனையின்மையும் காரணமாக, தற்போது மீன்பிடித்தொழில் 25 - 40 கடல் மைல் பிரதேசத்தை உள்ளடக்கு கிறது. ஆனால், சட்டபூர்வமான கடல் எல்லை மன்னார்த் தீவிலிருந்து 200 கடல் மைல்களாகும்.




மூலம்: மீன்வள திணைக்களம் மன்னார்

**பலவீனங்கள்**

**1. தொடர்புடைய வசதிகள் போதாதிருத்தல்**

- துறைமுகம், படகுத் தரிப்பிடங்கள், இறங்கு துறைகள் இல்லாதிருப்பதும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் போதாமையும்.
- மீன்பிடி முகாம்களுக்கும் மீன் சந்தைகளுக்கும் இடையில் போதியளவு வீதி இணைப்பின்மை.
- மீன்பிடியுடன் தொடர்புடைய மூன்றாம் நிலைக்கல்வி வசதிகள்
- ஆழ்கடல் மீன்பிடியுடன் தொடர்புடைய முன்னேற்றகரமான கருவிகள் நுட்பங்கள் இன்மை.

மன்னார்த் தீவு மீன்பிடிக்கான அதிகளவு வளங்களைக் கொண்டிருந்தபோதும் மீன்பிடியுடன் தொடர்புடைய உட்கட்டுமான வசதிகள் போதியளவானதாக இல்லை. இதனால் பெரும்பான்மையான மீனவர்கள் கடலோர மீன்பிடியிலேயே ஈடுபடுகின்றனர். இது மீன் உற்பத்தியிலும் சந்தைப்படுத்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மன்னார்த் தீவினுள், ஒரு துறைமுகமோ தரிப்பிடங்களோ, இறங்கு துறையோ காணப்படவில்லை. உதாரணமாக, (பள்ளிமுனை) கோடை காலத்தில் கிட்டத்தட்ட வருடத்தின் அரைவாசிக் காலம் மீனவர்கள் 1.5 கி.மீ. தூரத்துக்கும் அதிகமாக நீரின் எல்லைவரை வள்ளங்களைக் கையினால் தள்ளியோ அல்லது இழுத்தோ கொண்டு செல்கின்றனர். இது மீன் மற்றும், மீன்பிடி உபகரணங்களை ஏற்றி இறக்குவதில் சிக்கல்களை ஏற்படுத்துவதுடன் அநாவசியமான நேரச் செலவினங்களையும் எரிபொருட் செலவினங்களையும் உண்டு பண்ணுகிறது. தற்போது வள்ளங்கள் கடற்கரையில் தரித்து வைக்கப்படுவதால் அங்கு வள்ளங்கள் துருப்பிடிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. அத்துடன் வெள்ளப் பெருக்கு நிகழ்வதற்கு வாய்ப்புக்கள் இருப்பதால், படகுகள் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு சாத்தியமான நில ஒதுக்கீடு இல்லாதுள்ளது.

மீன் உற்பத்தியைக் கருத்திற்கொள்ளும்போது அங்கு தினமும் 50 மெற்றிக்தொன் பனிக்கட்டி உற்பத்தி செய்யக்கூடிய 4 பனிக்கட்டித் தொழிற்சாலைகள் தொழிற்படுகின்றன. இந்த நிலை மீனவர்களுக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதுடன் மன்னாரில் உடன் மீனுக்கும் கருவாட்டுக்கும் இருக்கும் சந்தைப் பெறுமானத்தைக் குறைக்கின்றது. பதனிடும் கைத்தொழில் இல்லாததால் அநேகமானவர்கள் மூலப்பொருளாகவே ஏற்றுமதி செய்கின்றனர். கடற்கரையோரம் முழுவதுமாக 19 மீன்பிடிக் கிராமங்கள் காணப்படுகின்றன. அவை வீதியின் மூலமாக இணைக்கப்படவில்லை. குறிப்பாக தீவின் வடக்கு, தெற்குக் கரையோரங்கள். ஆகவே, மீன்பிடிப் பொருட்களை அனுப்புவதிலும் சந்தைப்படுத்துவதிலும் சிக்கல் தன்மை காணப்படுகின்றது.

தற்போது, மூன்றாம் நிலைக்கல்வி குறிப்பாக கடல்சார் கல்வி வசதிகள் காணப்படாமை பிரதானமான பிரச்சினையாகும். இதனால் மீன்பிடித்துறையின் பெருமளவான தொழிலாளர்கள் திறமையற்றவர்களாக உள்ளனர். ஆகவே மீன் உற்பத்தியில் உச்ச விளைவைப் பெறுவதற்குரிய மீன்பிடி நடவடிக்கையுடன் தொடர்புடைய புதிய தொழில்நுட்பத்தினையும் கருவிகளையும் கையாளமுடியாதபடி சிரமப்படுகின்றனர். அத்துடன் இது உற்பத்திச் செலவை உயர்த்துவதுடன் அதிகளவு நேரத்தினையும் சக்தியினையும் நுகர்கிறது.

ஆழ்கடல் மீன்பிடியுடன் தொடர்புடைய மேம்பட்ட கருவிகளும் நுட்பங்களும் இன்மை மற்றும் பல நாள் மீன்பிடிக்கலங்கள் இன்மையினால் கடலோர மீன் உற்பத்தி குறைவாகவும் அத்துடன் மீன் வளத்தின் கிடைப்பனவும் குறைவாக உள்ளது.

**வாய்ப்புக்கள்**

**1. முன்மொழியப்பட்ட பேசாலைத் துறைமுகத் திட்டம்**

பேசாலையில் மீன்பிடித் துறைமுகம் முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்பதுடன், 2020ஆம் ஆண்டளவில் அமுல்படுத்தப்படும்.

**அச்சுறுத்தல்**

**1. இந்திய மீனவர்களின் அத்துமீறல்**

இலங்கையின் கடற்புல எல்லைக்குள் மன்னார்த் தீவுப் பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் இடையூறு மிகவும் ஆதிக்கம் மிக்கதாக உள்ளது. அவர்கள் குறுகிய நேரத்துக்குள் நவீன கருவிகளையும் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி அதிகளவு மீனைப் பிடிக்கின்றனர். இவை உள்ளூர் மீனவர்களிடம் இல்லை. ஆகையினால், உள்ளூர் வளங்கள் சுரண்டப்படுவதுடன் உள்ளூர் வருமானமும் பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றது. மேலும் பின்வரும் அட்டவணை 2 கடந்த காலங்களில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விபரங்களைக் காட்டுகிறது.

அத்தியாயம் 05

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**

அட்டவணை 2: கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விபரம்

| ஆண்டு | கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் |
|---|---|
| 2015 | 98 |
| 2016 | 90 |
| 2017 | 60 |

மூலம்: மீன்பிடி மற்றும், நீர்வளத் திணைக்களம், மன்னார் மாவட்ட அலுவலகம்


**இலக்கு 2 : சக்திக்கான சிறந்த இடம்**

| | | | |
|---|---|---|---|
| **பலம்**<br>1. காற்று காணப்படுதல் (காற்றின் வேகம் 45 - 50 கி.மீ. / மணிக்கு, வடகீழ் தென்மேல் பருவக்காற்று)<br>2. சூரிய சக்திக்கு ஏற்றதான காலநிலை (சூரிய 2100 GHI)<br>3. 84 வீதமான பயன்படுத்தப்படாத, அபிவிருத்தி செய்யக்கூடிய நிலம் | **S** | **W** | **பலவீனம்**<br>1. தனியார் நிலவுடைமை |
| **வாய்ப்புக்கள்**<br>1. நிலைபேறான சக்தி அதிகார சபையின் காற்று மின் உற்பத்தித் திட்டங்கள்<br>2. நிலைபேறான சக்தி அதிகார சபை, நிலைபேறான சக்தி அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது | **O** | **T** | **அச்சுறுத்தல்கள்**<br>1. நிலைபேறான சக்தி அதிகார சபை ஏனைய இடங்களில் ஆரம்பிக்கக்கூடிய சாத்தியமான புதுப்பிக்கக்கூடிய சக்தித் திட்டங்கள் |

**பலம்**

1. **காற்றுக் காணப்படுதல் (காற்று வேகம் 45 - 50 கி.மீ.மணிக்கு, வடகீழ் மற்றும் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று**

நிலைபேறான சக்தி அதிகார சபை மேற்கொண்ட ஆய்வின்படி மன்னார்த் தீவானது காற்று அடிப்படையிலான சக்தி விருத்திக்கு அதிக வாய்ப்புள்ள பகுதியாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. மன்னார்த் தீவானது 45 - 50 கி.மீ. மணிக்கு வேகத்தில் வீசும் வடகீழ் - தென்மேல் பருவக்காற்று வருடம் முழுவதும் எதிர்நோக்குகிறது. இது, காற்று மின் ஆலைகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கு மிகச் சிறந்த சாதகமான காற்று வேகமாகும். நிலைபேறான சக்தி அதிகார சபை மேற்கொண்ட தொழில்நுட்ப ஆய்வில் மன்னார்த் தீவு சிறந்த காற்று வேகம் கொண்ட பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளது.




மூலம்: தேசிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆணையம்


### 2. சூரிய சக்திக்குப் பொருத்தமான காலநிலை (2100 GHI)

மன்னார்த் தீவானது வரண்ட வலயத்தில் அமைந்திருப்பதால் ஏறத்தாழ வருடத்துக்கு 9 மாதங்கள் அதிகளவு சூரிய ஒளியை எதிர்நோக்குகின்றது. நிலைபேறான சக்தி அதிகார சபை மேற்கொண்ட ஆய்வின்படி இலங்கையில் மன்னார் மற்றும் அம்பாந்தோட்டையும் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யக்கூடிய உள்ளார்ந்த வாய்ப்பினை GHI 2100 கொண்டுள்ளது. இவ்வாய்வு, மன்னார்த் தீவு வருடம் முழுவதும் சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய பலத்தினைக் கொண்டுள்ளது என்பதனை உறுதிசெய்கிறது.

அத்தியாயம் 05

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**

3. 84 வீதம் பயன்படுத்தப்படாத அபிவிருத்தி செய்யக்கூடிய நிலம்




மூலம்: இலங்கை நிலைபேறான சக்தி அதிகார சபை

காற்று மின் உற்பத்தியாலை மற்றும், சூரிய சக்தி உற்பத்தித் தளங்களை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி மூலங்களை நிர்மாணிப்பதற்குப் பெரியளவு பரப்பு நிலம் அவசியமாகும். மன்னாரின் 84 சதவீதமான நிலமானது பரந்தளவு மனிதர்களே இல்லாத பயன்படுத்தப்படாத அபிவிருத்தி செய்யக்கூடிய நிலமாகக் காணப்படுகிறது. இது மன்னார்த் தீவினைப் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளத்துக்கான சிறந்த இடமாக உருவாக்கு வதற்குரிய சாதக நிலைமையைக் கொண்டுள்ளது.

**வரை படம் 5: தற்போதைய நிலப் பயன்பாட்டு வரைபடம்**




**பலவீனம்**

**1. கிடைப்பனவுள்ள நிலங்களின் தனியார் உடைமை**

மன்னார் தீவானது 80% பயன்படுத்தப்படாத அபிவிருத்தி செய்யக்கூடிய நிலங்களை புதுப்பிக்கக்கூடிய வளங்கள் உற்பத்தி செய்யக்கூடியதாக வளங்களைக் கொண்டிருந்த போதும், அபிவிருத்தி என்கின்றபோது தடையாகவே உள்ளது. புதுப்பிக்கத்தக்க வளங்கள் தொடர்பான திட்டங்களை அமுல்படுத்தும்போது, தனியார் நில உடைமைத் திட்டங்கள் காலதாமதப்படுவதுடன் பெருமளவு பொருளாதாரச் செலவுகளையும் ஏற்படுத்தக்கூடும்.

**வாய்ப்புக்கள்**

1. **நிலைபேறான சக்தி வள அதிகார சபையினுடைய காற்று வலு செயற்றிட்டங்கள்**

   இக்குறிக்கோளை அடைவதற்கு ஒரு வாய்ப்பாக நிலைத்து நிற்கும் சக்தி வள அதிகார சபை மன்னார்த் தீவின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் 39 காற்று மின் உற்பத்தி ஆலைகளை நிறுவும் திட்டத்தினை அடையாளப்படுத்தியுள்ளது. இது 2022ஆம் ஆண்டு முழுமையாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது மூன்று கட்ட செயற் திட்டத்தின் முதலாவது கட்டமாகும். திட்டத்தின் முடிவில் அது நாளொன்றுக்குத் தேசிய மின்சார வலையமைப்புக்கு 100MW மின்சாரத்தை விநியோகிக்கும். இது நாளொன்றுக்குத் தேவையான மின் கேள்வியில் 5% ஆகும்.

2. **நிலைபேறான சக்தி வள அதிகார சபையால் நிலைத்து நிற்கும் சக்தி அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**

   மன்னார் தீவானது வலு அபிவிருத்தி பிரதேசமாக SEA வினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இப்பிரகடனமானது புதுப்பிக்கத்தக்க வளங்கள் தொடர்பான திட்டங்கள் தொடர்பில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்களைக் கவரும். இது ”புதுப்பிக்கக்கூடிய வளங்களுக்கான சிறந்த இடம்” என்பதை அடைய ஒரு சந்தர்ப்பமாகும்.

அத்தியாயம் 05


**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**

**அச்சுறுத்தல்கள்**

**1. நாட்டின் ஏனைய பிரதேசங்கள் நிலைபேறான சக்தி அதிகார சபையினை அடையாளப்படுத்தக்கூடிய புதுப்பிக்கக்கூடிய சக்தி வளத் திட்டங்கள்**

நிலைபேறான சக்திவள அதிகார சபையானது இலங்கை புதுப்பிக்கத்தக்க வளங்கள் தொடர்பான திட்டங்களுக்குப் பொருத்தமான இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆய்வுகள் மேற்கொண்டுவருகின்றது. இது புதுப்பிக்கத்தக்க சக்தி வள உற்பத்தி தொடர்பாக மன்னார்த் தீவுக்கு இருக்கின்ற முக்கியத்துவத்தினைக் குறைக்கக்கூடும்.

வரைபடம் 6: முன்மொழியப்பட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி




மூலம் : இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபை

**குறிக்கோள் 3 : இயற்கைச் சூழலினதும்முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினதும் அனுபவத்தினை மேம்படுத்துதல்**

| | | | |
|---|---|---|---|
| **பலம்**<br>1. மன்னார் வளைகுடா ஆசியாவின் முதலாவது உயிர்க்கோளமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது<br>2. மன்னாரின் 3600க்கும் அதிகமான தாவர, விலங்குகள் காணப்படுகின்றன<br>3. மன்னாரில் ஏறத்தாழ 30 கி.மீ. நீளமான மணல் தன்மையிலான ஆழம் குறைந்த கடற்கரை காணப்படுகிறது<br>4. மன்னாரில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பிரசித்திபெற்ற இடங்கள் (ஆதாம் பாலம், டச்சுக் கோட்டை, பெருக்க மரம், புனித லூசியாகிறிஸ்தவ ஆலயம்)<br>5. இயற்கை அழகைப் பார்க்கக்கூடிய இடங்கள் மன்னாரின் சூழல் பெறுமதியை வளப்படுத்துகின்றன<br>6. வங்காலை சரணாலயம் "ரம்சார்"ன் ஒதுக்குப் பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது | **S** | **W** | **பலவீனம்**<br>1. இடங்களைச் சென்று பார்ப்பதற்குப் பொருத்தமற்ற வசதிகள் இன்மை<br>A) பொருத்தமான அணுகுவழிகள் இல்லை<br>B) பொருத்தமான வழிகாட்டல் இல்லை. |
| **வாய்ப்புக்கள்**<br>1. முன்மொழியப்பட்ட இயற்கைப் பூங்கா அபிவிருத்தி | **O** | **T** | **அச்சுறுத்தல்கள்** |

**பலம்**

**1. மன்னார் வளைகுடா ஆசியாவின் முதலாவது உயிர்க்கோளம்**

மன்னார் வளைகுடாவானது அதன் எல்லைப்பகுதியினுள் 3600க்கு மேற்பட்ட தாவர மற்றும் விலங்குகளைக் கொண்ட உயிரியல் ரீதியான மிக வளமான கடற்கரையோரப் பிரதேசத்தினைக்கொண்டுள்ளது. மன்னார் வளைகுடாப் பகுதியில் பல வகையான டொல்பின்களையும், திமிங்கிலங்களையும் மற்றும் மூன்று வகையான அழிவடையும் நிலையிலுள்ள ஆமைகளையும் காணமுடியும். மேலும் இவ் ஒதுக்குப் பிரதேசமானது கடற் குதிரைகளுக்கும், 450 வகையான மீன் இனங்களுக்கும், 100 வகையான கடல் அட்டை வகைகளுக்கும், கடற் பாசிகள் மற்றும் அனைத்து வகையான முருகைக்கற் பாறைகளுக்கும் வாழ்விடமாகும். மேலும் ஒதுக்குப் பிரதேசத்தில் காணப்படும் தீவுகளில் 150க்கும் அதிகமான பறவையினங்கள் காணப்படுகின்றன. ஒதுக்குப் பிரதேசத்தின் சூழலியலின் முக்கிய கூறாக, 17 வகையான சேற்று நிலக்கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன.

ஒதுக்குப் பிரதேசமானது 10500 சதுர கி.மீ. பிரதேசத்தினையும் 21 தீவுகளையும் தொடர்ச்சியான முருகைக் கற்பாறைத் தொடரையும் கொண்டுள்ளது. ஒதுக்குப் பிரதேசத்தின் மையப் பிரதேசமானது 560 சதுர கி.மீ. பரப்பளவுள்ள முருகைத் தீவுகளையும் உயிரினக் குடியிருப்புப் பகுதிகளையும் கொண்டுள்ளது. 5500 சதுர கி.மீ. பிரதேசத்தில் வர்த்தக ரீதியான மீன்பிடி இடம்பெறுவதுடன் மன்னார் வளைகுடா ஒதுக்குப் பிரதேசத்தினைச் சூழ்ந்துள்ள கடற்கரையோரப் பகுதியிலுள்ள 47 கிராமங்களைச் சார்ந்த 50000 வரையான மக்கள் தமது வாழ்வாதாரத்துக்காக மன்னார் வளைகுடாப் பகுதியிலுள்ள வளங்களில் தங்கியுள்ளனர்.

குறைந்த மத்தி, வெள்ளி தொப்பை, கானாங்கெளுத்தி, நெத்தலி, நூல் இறகு, ப்ரீம், சிப்பி, மொல்லஸ்க் மற்றும் இறால்கள் போன்ற மீன் இனங்களால் மீன்பிடி ஒதுக்கமானது ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. பலவீனமான பவளப்பாறைகள் மற்றும் ஏராளமான கடல் உயிரினங்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் மன்னார் வளைகுடாவின் கடல் புல்வெளிகள் உள்ளிட்ட தனித்துவமான தாவரங்கள் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றன.

**2. மன்னாரில் 3600 தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் ஏராளமாக காணப்படுகின்றன**

**அ) விலங்கு உயிரினங்கள்**

ஆற்றுக் கழிமுகங்கள், கடற்கரைகள், காடுகள், அல்காக் குடும்பங்கள், கடற்புற்கள், பவளப் பாறைகள், உவர் சேற்று நிலங்கள் மற்றும் கண்டல் தாவரங்கள் போன்ற வற்றை உள்ளடக்கிய உலகின் வளமான கடல்சார் உயிர்ப் பல்வகைமையை கொண்ட பிராந்தியமாகும். அத்துடன் பறவைகளின் சர்வதேச இடப்பெயர்வுப் பாதை மன்னாரில் காணப்படுகிறது. ஏறத்தாழ 149 வகையான பறவையினங்கள் இங்கு காணப்படுகின்றன. பறவைகள் கூடுகின்ற இடங்கள் பற்றிய அறிவுள்ள வழிகாட்டுநர்களுடன்கூடிய கவர்ச்சிகரமான தெரிவுகளோடு பறவைகளின் சுற்றுப்பாதையில் மன்னார் காணப்படுமாயின் இது உள்ளூர்ப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் சுற்றுலாப் பயணிகளின் வருவாயை அதிகரிக்கச் செய்யும். அத்துடன், பறவைகளையும் வன ஜீவராசிகளின் வாழ்விடங்களையும் பாதுகாக்கும்.

**ஆ) தாவர வகைகள்**

- **கண்டல் தாவரங்கள்**

இலங்கையில் மிகப் பெரிய கண்டல் தாவரங்கள் கலா ஓயா மற்றும், மல்வத்து ஓயாவின் கழிமுகப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. அதிக உவருள்ள மற்றும், சம களப் பிரதேசத்தில் மண்டா (அவிஸ்றியா, மரீனா) மகா கடோல் (றிசோபோராமுக்கிறரூனடா) சுடு கிறளா (கொனேனட்டியால்பா), புங்கண்ட (செரியோப்ஸ்ரகல்) ரெலகிரியா (எக்ஸ் ஸோகலியா கலக்கா) போன்றன அதிகளவில் காணப்படுகின்றன. அவை ஸ்றியா மரினா என்ற தாவரமானது இளம் தீவுகளையண்டி ஒரு தனித்த பெரியளவிலான இனமாகப் பரம்பிக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் அவிஸ்றியா மரினா இன கண்டல் தாவரம் பள்ளிமுனைப் பிரதேசத்தில் கடற்கரையோரத்தில் காணமுடியும். கண்டல் தாவர வகைகளை ஆராய்ந்து அவை ஸ்னியா மரினா, றிகோறோகோறாமுக்குறொனிச்சா

இனங்கள் பெருமளவில் பரம்பிக் காணப்படுகின்றன. பு-ரெண்டா (கிளேரோ டென்றுமிளேமே) சூரியா (தெஸ் பெசிய பெர்பபுல்னியா) பெரிபட்ட (கிபிஸ்கஸ் ரிலியேசியஸ்) ரமறிசிண்டிகா என்பன காணப்படுகின்றன.







- **உவர் சேற்று நிலங்கள்**

நாட்டின் ஏனைய கடற்கரையோரங்களைவிட மன்னார் வளைகுடாப் பிரதேசம் அதிகளவான உவர் சேற்றுநிலத் தாவரங்களைக் கொண்டுள்ளது. கண்டல் தாவரங்கள் எங்கு உவர்சேற்று நிலங்கள் காணப்படுகின்றனவோ அங்கு காணப்படும். அத்துடன், நாளாந்த வற்றுப்பெருக்கு நீரோட்டத்தினைக் கொண்டு காணப்படும் உவர்சேற்று நிலங்களில் வளரும் தாவரங்கள் நீர் தேங்கி நிற்பதனையும் உவர்த் தன்மையில் ஏற்படும் மாற்றங்களையும் சகிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கும். உவர் சதுப்பு நிலங்களை கல்லடி, வங்காலை, அரிப்பு, வில்பத்துவின் உட்பகுதி, இலவங்குளத்திலுள்ள ஐலே பகுதி, மன்னார்த் தீவின் உட்பகுதி மற்றும் பள்ளிமுனைப் பிரதேசங்களில் காணலாம். மன்னார்ப் பிரதேசத்தில் மாந்தை முதல் வங்காலை வரை பரந்த அளவிலான உவர்சேற்று நிலத் தாவரங்களை (குறிப்பாக வற்றுப் பெருக்கு மட்டத்திலும் (56 வகையான கண்டல் தாவரங்களையும் கொண்டுள்ளது.) காணலாம். இப்பிரதேசத்தில் அநேகமான உவர்சேற்று நிலங்கள் பெரிய மரமல்லாத சிறு தாவரங்களால் மூடப்பட்டுள்ளன. இப்பிரதேசம் தொடர்ச்சியான வரட்சிக் காலத்தில் கடுமையான வரண்ட பிரதேசமாகக் காணப்படும். இதனால் பெருமளவு நீர் இழக்கப்பட்ட அதிக உவர்த்தன்மையுள்ள பகுதியாக மாற்றமடைகிறது. இங்குள்ள குடியிருப்புக்களில் வரண்ட காலத்தில் உப்புப் படிவதைக் காணமுடியும்.

- **சேற்றுப் படுக்கைகள்**

மன்னார்த் தீவு மற்றும், மாந்தை மேற்குப் பகுதிகளிலுள்ள கடல்நீர் ஏரி மற்றும், குடாக்களில் சேற்றுப் படுக்கைகள் காணப்படுகின்றன. (உதாரணமாக வங்காலை மற்றும், பள்ளிமுனை) இச்சேற்றுப் படுக்கைகளானவை சூழலியலுக்கு ஊட்டமளிப்பதுடன் மற்றும், வற்றுக் காலத்தில் புலம்பெயர் பறவைகளுக்கும் பெருக்குக் காலத்தில் மீன்களுக்கும் உணவூட்டுகின்ற செயன்முறையின் முக்கிய பகுதியாகத் தொழிற்படுகின்றது. சேற்றுப் படுக்கையானது வற்றுப்பெருக்கு மட்டத்துக்குக் கீழும் மற்றும் தரையில் தாவரம் காணப்படும் பகுதிக்கு இடையிலும் பொதுவாகக் காணப்படுகிறது.

- **மணற்குன்றுகளும் கடற்கரைகளும்**

தாவரங்கள் மணல் அடித்துச்செல்லப்படுவதிலிருந்து மணலைப் பாதுகாக்கின்றது. பின்னர் காற்று மணல் துணிக்கைகளை காற்றுப் பக்கத்தில் அரித்து ஒதுக்குப் பக்கத்தில் படியவைக்கின்றது. படிப்படியாக இச்செயன்முறை மணல் குன்றுகளை உள்நோக்கி நகரச்செய்கின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் மேலும் மேலும் மண்ணை ஒன்று சேர்க்கின்றது. நடுக்குடாப் பகுதியில் மணல் குன்றுகளைக் காணமுடியும். மணற் குன்றுகளானவை இராவணன் மீசை (விஞ்ஞானப்பெயர் ஸ்பினிபெக்ஸ்லி ரோறியஸ்) மற்றும், அறுகம்புல் (சைனோடொண்டக்ரைலோன்) போன்ற படரும் கொடிகளைக் கொண்டுள்ளன.



அத்தியாயம் 05

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**

மூலம்: கள அவதானிப்பு 2017

- **கடற்புல் நிலம்**

மன்னார் வளைகுடாவின் கடற்கரையோரங்கள் மற்றும், தீவுகள் ஒப்பீட்டு ரீதியில் அதிக அடர்த்தியான கடற்புல் தளங்களைக் கொண்டுள்ளன. பிரதானமாக பெரு நிலப் பரப்புக்கும் தீவுகளுக்குமிடையே உள்ள தீவுகளின் கடற்பக்கத்திலும் காணப்படுகின்றன. இவை தீவுகளின் கரையிலிருந்து 2 - 3 கி.மீ. தூரத்துக்குக் கடல் நோக்கிக் காணப்படுகின்றன. பாம்பன் பாலத்துக்கும் தூத்துக்குடிக்கும் இடையே 101 சதுரக் கி.மீ. பரப்புக்கு தளசியா கெம்பிறிச்சி, சிமோடா சி செருலட்டா ஆகிய முக்கியமான கடற்புறகள் காணப்படுகின்றன. இதேபோன்று பல வகையான கடற் புற்கள் தலைமன்னார் மற்றும், பள்ளிமுனைப் பகுதியில் காணப்படுகின்றன. இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்படைந்துள்ளது என்பதைக் காணமுடியும். இப்புல் தளப் பகுதியில் மீன்கள் மற்றும், பல விலங்குகள் வாழ்கின்றன. இக்கடற்புல் தளங்களில் வசிக்கும் விலங்குகளில் கடற்பசு முக்கியமானது.

- **பவளப்பாறைகள்**

பவளப்பாறைத் தொடரானது மன்னார் பள்ளிமுனைகளுக்கப்பாலும் மன்னார்த் தீவின் தெற்கு, மேற்குப் பகுதிகள், சிலாவத்துறை, அரிப்பு, வங்காலை, தோமையார் மற்றும் கொக்குப்பட்டியான் பகுதிகளுக்கு அண்மித்த பகுதிகளில் காணப்படுகின்றது. ஏறத்தாழ 100 வகையான வேறுபட்ட பவளப்பாறை வகைகள் இப்பகுதியில் காணப்படுகின்றன. அத்துடன் 200 வகையான மீன் இனங்கள் இப்பவளப் பாறைத் தொடர்களிடையே காணப்படுகின்றன.

**3. ஏறத்தாழ 30 கி.மீ. நீளமான மணற் கடற்கரைகள் மன்னாரில் உள்ளன (தெற்குக் கடற்கரை)**

மன்னாரானது, பாதுகாப்பான மற்றும் ஊக்கங்குன்றிய, கடற்கரைகளையும் அதனையடுத்துக் கவர்ச்சிகரமான பனை மற்றும் தென்னந்தோப்புக்களையும் குளிர்மையான நன்னீர் ஆறுகளையும் அண்மித்துக் காணப்படுகின்றன. அவற்றுள், மன்னாரில் காணப்படும் அழகான கடற்கரைகளுள் எருக்கலம்பிட்டி ஒன்றாகும். எனினும், அது அபிவிருத்தி செய்யப்படவுமில்லை, பராமரிக்கப்படவுமில்லை.

4. **வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள். (ஆதாம் பாலம், ஒல்லாந்தர் கோட்டை, பெருக்க மரம், புனித லூசியா தேவாலயம்)**

- **ஆதாம் பாலம்**

ஆதாம் பாலம் இராமர் பாலம் அல்லது சேது கால்வாய் எனப்படுவதுடன் தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கடற்கரைக்கு அப்பாலுள்ள இராமேஸ்வரத்துக்கும், இலங்கையின் வட மேற்குக் கடற்கரைக்கு அப்பாலுள்ள தலைமன்னாருக்குமிடையே சங்கிலித் தொடராகக் காணப்படும் முருகை கற்பாறைத் தொடராகும். இது பிரதானமாக மணல் மற்றும் தாவரத்தினால் சூழப்பட்டுள்ள 50 கி.மீ. நீளமான தொகுதியாகும்.

- **பெருக்க மரம்**

அத்தியாயம் 05

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**

இது இலங்கையின் மன்னார்த் தீவில் மட்டும் காணப்படும் மரமாகும் பெருக்க மரமானது தனித்துவமானதொரு மரமாகும். 9 மீற்றர் விட்டம் வரை கொண்ட பாரிய குழல் போன்ற 19.5 மீற்றர் வரையான சுற்றளவு கொண்ட 7.5 மீற்றர் வரையான உயரம் கொண்டது. பெருக்க மரம் என்ற பெயர் அரேபியத் தாவரமான புகிபப் என்பதிலிருந்தும் விஞ்ஞானப் பெயரானது பிரான்சியத் தாவரவியலாளர் அடன்சன் (1727 - 1806) என்பவருக்குப் பின்பும் வந்தது.அரேபிய வர்த்தகர்கள் பெருக்க மரத்தினைக் கொண்டு வந்து மன்னாரின் சூடான மணற்கரையில் நாட்டினார்கள். பெருக்க மரம் ஆபிரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்டது. இது அரேபிய ஒட்டகங்களுக்கு உணவூட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்டது. பெருக்க மரமானது பொம்பகேசியா என்ற குடும்பத்தினைச் சார்ந்தது.



மூலம்: கள அவதானிப்பு 2017

- **மன்னார் ஒல்லாந்தர் கோட்டை**

கோட்டையானது மன்னாரின் ஒரு காலனித்துவ அடையாளமாகும். மன்னார்த் தீவில் இது போர்த்துக்கீசரால் 1560இல் அமைக்கப்பட்டது. 22ஆம் திகதி மாசி மாதம் 1658ஆம் ஆண்டு மன்னார்க் கோட்டை ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டு பின்னர், 1696இல் புனரமைக்கப்பட்டது. மன்னார்த் தீவு 4 பாதுகாப்புக் கொத்தளங்களைக் கொண்டுள்ளது.

ஆனால் அவை கைவிடப்பட்ட நிலையிலுள்ளன. கோட்டையானது சதுர வடிவில் 4 கொத்தளங்களுடன் பெரு நிலப்பரப்பையும் மன்னார்த் தீவினையும் இணைக்கும் புதிய பாலத்துக்கு அண்மையிலும் அமைந்துள்ளது. கோட்டைக்குள் காணப்படும் கட்டடங்கள் சீராகப் பராமரிக்கப்படவில்லை. தற்போது இலங்கைப் பொலிஸார் இக்கோட்டையில் இருக்கின்றார்கள்.



மன்னாரிலுள்ள ஒல்லாந்தர் கோட்டையின் தற்போதைய நிலை
மூலம்- கள அவதானிப்பு - 2017



ஒல்லாந்தர் கோட்டையின் வானியல் நோக்கு

மூலம்: கூகுல் புவி

- **புனித லூசியா தேவாலயம்**

மன்னார்ப் பிரதேசத்தில் சில கவர்ச்சியான சுற்றுலாத் தலங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் புனித லூசியாத் தேவாலயமானது பள்ளிமுனையில் அமைந்துள்ளதுடன் அது காலனித்துவக் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

அத்தியாயம் 06

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**



**புனித லூசியா தேவாலயம், மன்னார்**
**மூலம்: கள அவதானம் - 2017**

**5. இயற்கை காட்சிப் புள்ளிகள் மன்னாரின் சுற்றுச்சூழல் மதிப்பை வளப்படுத்துகின்றன.**

இயற்கை வனப்பைப் பார்ப்பதற்கான பார்வை மையங்கள் மன்னார்த் தீவின் உணர்வையும் பண்பையும் வளம்படுத்துகின்றன. பார்வைப் புள்ளிகளானவை வங்காலைப் பறவைகள்சரணாலயம், முன் கடற்கரைப் பிரதேசம், உறுமலைக் கடற்கரை, கீரி கடற்கரை, பேசாலைக் கடற்கரை, தலைமன்னார் போன்ற இடங்களில் காணப்படு கின்றன. பறவைகள் சரணாலயத்தைவிட மன்னார்த் தீவுக்கு நுழைகின்ற இடம் பறவைகளைப் பார்ப்பதற்கு ஏற்ற ஒரு இடமாக உள்ளது. மன்னார் பறவைகள் சரணாலயத்தைக் கடந்த பின்னர் முன் கடற்கரைக்கு அடுத்ததாக ஒல்லாந்தர் கோட்டை மற்றும் பள்ளிமுனைத் தேவாலயம் என்பவற்றைக் காணமுடியும். முன் கடற்கரையில் மற்றைய பக்கமானது உப்பளங்களைக் கொண்டுள்ளது.



தலைமன்னாரிலுள்ள வனப்புமிக்க தோற்றத்தைப் பார்க்கக்கூடிய வெளிச்ச வீடு
மூலம்: கள அவதானிப்பு 2017.






வனப்புமிக்க மன்னார்த் தீவின் நுழைவாயில்
மூலம்: கூகுல் புவி.

**6. வங்காலைப் பறவைகள் சரணாலயம் "ரம்சார்" இடமாகப் பிரகடனம்.**


இலங்கை அரசாங்கமானது, வங்காலைப் பறவைகள் சரணாலயத்தை சர்வதேச முக்கியத்துவமுள்ள நான்காவது ஈரநிலமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. ஆசியா/ ஓசானியாவுக்கான ஆலோசகர் மரியன் கோவிலியம் பின்வருமாறு சுருக்கமாகக் கூறுகின்றார். வங்காலைப் பறவைகள் சரணாலயம் (8°56' N079°55' E) இலங்கையின் வடமேற்குப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பகுதி 4839 கி.மீ. பிரதேசத்தை உள்ளடக்கியிருப்பதுடன் இப்பகுதி வரண்ட வலய முட்புதர்கள் நிலம், வரண்ட வலய மேய்ச்சல் நிலம், கடற்புல் நிலம், மணற்குன்றுகள், கண்டற் தாவரங்கள், உவர் சேற்று நிலங்கள், கடல் நீர் ஏரிகள், வற்றுப் பெருக்குப்படுக்கைகள், ஆழங் குறைந்த கடற் பகுதிகள் என பலவாறான சூழலியல் கூறுகளைக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த ஆழங் குறைவான ஈர நிலம் மற்றும், தரைப் பகுதியிலுள்ள கடலோர வாழ்விடங்கள் காரணமாக இந்த சரணாலயம் உயர்வான வினைத்திறனைக் கொண்டுள்ளது. சூழலியலின் உயர்ந்த நிலைக்கும் உயிரினப் பல்லினத் தன்மைக்கும் ஆதாரமாக உள்ளது.

இப்பகுதி வருடாந்தம் வந்துசெல்லும் பெருமளவான பறவைகள் உள்ளிட்ட நீர்ப் பறவை களுக்கு வாழ்விடமாக உணவூட்டுகின்ற சிறந்த இடமாகக் காணப்படுகின்றது. அத்துடன், புலம்பெயர் பறவைகள் வந்துசெல்லும் வரை பயன்படுத்துகின்ற இடமாக வும் உள்ளன. புலம்பெயரும் பருவத்தில் 20000 பறவைகளுக்குரிய பாதுகாப்பான இடமாக உள்ளது. இங்கு நொதேண் பின் ரெயில் (அனஸ் ஒருட்டா), பெரிய பிளமிங்கோ (பெனிரோ பிரெறஸ் றோசியஸ்) மற்றும் ஐரோப்பிய வகன் (அனஸ் பெனிலோப்) காணப்படுகின்றன. இறுதியாகக் குறிப்பிட்ட இரண்டு வகையான இனத்தின் ஒரு வீதமானவற்றுக்கு வங்காலை சரணாலயம் ஆதாரமாக உள்ளது. இப்பகுதியின் கடல் சூழலியல் பிரதேசம் 60க்கும் மேற்பட்ட மீன் இனங்களுக்கும் கடல் ஆமைகளுக்கும் கடற்பசு போன்ற அரிய விலங்கினங்களுக்கும் முக்கியமானதாகும்.இந்த சூழலியல் பிரதேசம் ரவெலி (கறங்ஸ்), ஸ்ருப்பர்ஸ் (லட்ஜனூஸ் போன்ற மீன் இனங்கள் மற்றும் பச்சை ஆமை, கடற்பசு, நன்னீர் முதலைகள், ஆபத்தான நிலையிலுள்ள இனங்களுக்கும் மற்றும் முட்டையிடும். அவற்றின் இனப் பிரிவினருக்கும் உணவூட்டும் இடமாகக் காணப்படுகின்றது.

அத்தியாயம் 06

**SWOT மற்றும் விபரமான பகுப்பாய்வு**

வங்காலை சரணாலயம் பல்வகைப்பட்ட உணவு வலையைப் பேணுவதுடன், மீன்பிடியை ஆதாரமாகக் கொண்ட சமூகத்தின் ஜீவனோபாயத்தையும் பேணுகின்றது. உள்நாட்டுப் பிரச்சினையால் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மனித நடவடிக்கைகள் இங்கு இடம்பெறுவதனைத் தவிர்த்துள்ளது. இதனால் இப்பகுதியில் ஒரு சில நிரந்தர மான குடியிருப்புக்களே உள்ளன. உள்ளூர் மக்கள் சிறியளவு மேய்ச்சல் நடவடிக்கை களிலும், சுயதேவை மற்றும் வர்த்தக நோக்கிலான மீன்பிடி நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். இலங்கையில் கி.மு. 6 - கி.பி. 13ஆம் நூற்றாண்டுவரை முக்கியத்துவம் பெற்றிருந்த புராதனத் துறைமுகமொன்றின் பகுதி இப்பகுதிக்குள் வருவதால் வங்காலை சரணாலயம் தொல்லியல் முக்கியத்துவம் மிக்க பகுதியாக உள்ளது. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் கலாசார ரீதியில் வளம்மிக்க ஈர நிலத்தினையும் அதன் பல்லினத் தன்மையையும் நேரடியாக முகாமை செய்கின்ற பொறுப்பினைக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் தற்போது 4 “ரம்சார்” இடங்களானவை 13361 கெக்ரேயர் பரப்பில் உள்ளன. ஒப்பந்தமானது உலகளாவிய ரீதியில் 1891 இடங்கள் அவை 185, 464, 092 கெக்ரேயர் பரப்பில் காணப்படுகின்றன.




மூலம்: ரம்சார் தகவல் ஆவணம்

**பலவீனங்கள்**

**1. இடங்களை அறிந்து கொள்வதற்குப் பொருத்தமான வசதிகள் இன்மை.**

இடங்களைப் பார்த்து அனுபவிப்பதற்குப் பொருத்தமான வழிகாட்டல் மற்றும் அணுகுவழிகள் இல்லாதிருப்பது பெரும் மட்டுப்பாடாகும். மன்னார்த் தீவானது பெருமளவு சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய வளங்களைக் கொண்டுள்ளது. ஆனால், அநேகமான சுற்றுலாப் பயணிகளுக்கு அங்கு செல்வதற்கான அணுகு வசதிகள் தெரியாது. இதற்குப் பின்னாலிருக்கின்ற காரணங்களாக, சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கும் வழிகாட்டுவதற்கான திட்டம் எதுவும் இல்லாதிருப்பதும் மற்றும் சுற்றுலா வாய்ப்புள்ள இடங்களில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் வழிகாட்டவும் வழிகாட்டிப்

பலகைகள் இல்லாதிருப்பதுமாகும். பொருத்தமற்ற உட்கட்டமைப்பு வசதிகள், குறிப்பாக, பொருத்தமற்ற வீதிகள் அவ்விடங்களுக்கு இலகுவாகச் சென்றடைவதற்குரிய வசதிகளை வழங்கத் தவறியுள்ளன. (உதாரணம்- ஒல்லாந்தர் கோட்டை, பெருக்க மரம், முன் கடற்கரையோரப் பிரதேசம், வரலாற்றுப் பெறுமதி மிக்க கிறிஸ்தவ ஆலயங்கள், வங்காலைப் பறவைகள் சரணாலயம், உறுமலைக் கடற்கரை, கீரிக் கடற்கரை, கீரிக் கிணறு)



இடங்களை அறிந்து கொள்வதற்குப் பொருத்தமான வசதிகள் இன்மை.
மூலம்: கள அவதானிப்பு - 2017

**வாய்ப்புக்கள்**

**1. முன்மொழியப்பட்ட இயற்கைப் பூங்கா அபிவிருத்தி**

வங்காலை சரணாலயமானது, புளியந்தீவு, திருக்கேதீச்சரம், பள்ளிமுனை, வங்காலை மற்றும் மன்னார்ப் பெரு நிலப்பரப்பையும் தலைமன்னாரையும் இணைக்கும் பாலத்துக்கு மறுபக்கம் உள்ள ஒடுங்கிய நீண்ட நிலம் போன்றவற்றை உள்ளடக்கிய ஈர நிலத்தின் பகுதியையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. 4800 ஹெக்ரேயர் பரப்பை உள்ளடக்கியுள்ள இச் சரணாலயமானது, வரண்ட முட்புதர் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், குட்டைகள், குளங்கள், மணற் குன்றுகள், கண்டல் தாவரங்கள், உவர் சேற்றுநிலங்கள், கடல்நீர் ஏரிகள், கடற்புற் தளங்கள் மற்றும் கடற் புல் நிலங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கின்றது.

2008இல் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் வங்காலை பகுதியானது பறவைகள் சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வங்காலையானது 2010ஆம் ஆண்டு ரம்சார் உடன்படிக்கையின் கீழும் உள்ளடக்கப்படுகின்றது. (சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் மிக்க ஈரநிலம் மீதான ரம்சார் உடன்படிக்கையானது ஈர நிலங்களைப் பேணி, நிலைத்து நிற்கத்தக்க வகையில் பயன்படுத்துவது பற்றிய ஒரு சர்வதேச உடன்படிக்கை) வங்காலை சரணாலயமானது Spot Billr Jocf, Comb Jock, Gavwall Long Toej Stint, Peregrino போன்ற பல ஆயிரம் பறவைகளுக்கு வாழ்விடமாக உள்ளது. இவை சைபீரியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கில் மன்னார் வங்காலைப் பகுதிக்கு முதலில் இடம்பெயர்கின்றன. அதேபோன்று பருவ முடிவில் கூட்டை விட்டு வெளியேறும்போது இறுதியாக மன்னார் வங்காலையிலிருந்தே புறப்படுகின்றன. வங்காலை சரணாலயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்ததன் காரணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையானது வங்காலை சரணாலயத்தினுள் வசதிப்படுத்தும் நிலையமொன்றினை அமைக்க முடிவெடுத்துள்ளது. அந்த முன்மொழியப்பட்ட கட்டடம் மன்னார்ப் பாலத்துக்கண்மையிலாகவும் கோட்டையிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட உள்ளது.

அத்தியாயம் 06

# திட்டம்

அத்தியாயம் 06

**திட்டம்**

## 6.1 எண்ணக் கருத்திட்டம்

எண்ணக் கருத்திட்டமானது மன்னார்த் தீவின் முழுமையான எதிர்கால அபிவிருத்தி பற்றி விளக்கமளிக்கின்றது. இங்கு மன்னார்த் தீவானது நான்கு பிரதானமான தோற்றப்பாட்டினுள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன: **நகர அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தி, புதுப்பிக்கத்தக்க சக்தி வள அபிவிருத்தி மற்றும் சூழல் மேம்பாடு ஆகும்.**

நகர அபிவிருத்தி என்பதனைக் கருத்திற் கொண்டால் தற்போதைய நகர சபையை அடிப்படையாகக்கொண்ட நகரமானது மன்னார் மாவட்டத்தின் நிர்வாகத் தலைநகரமாகத் தொழிற்பட்டு வருகின்றது. மன்னார் நகரசபையைக் கொண்டிருக்கின்ற மன்னார் நகரத்தின் எதிர்கால அபிவிருத்தியானது மன்னார்த் தீவின் இதயப் பகுதியை போன்று கருதப்படுகின்றது. இப்பகுதி மத்திய வியாபார வலயமாகக் கருதப்படுவதுடன், இப் பகுதியானது வியாபார நடவடிக்கைகளுக்கு முதன்மையான பகுதியாக இருப்பதுடன் மாவட்டத்தின் நிர்வாகத் தலைநகரமாகவும் இருக்கின்றது.

மன்னாரின் எதிர்கால நிலைத்து நிற்கத்தக்க பொருளாதார அபிவிருத்தி என்பது மீன்பிடித் துறையிலும் புதுப்பிக்கத்தக்க வளங்களிலுமே தங்கியுள்ளது. வட மாகாணத்தின் மீன்பிடியை பாரிய அளவில் உருவாக்குதல் என்ற குறிக்கோளை அடையக்கூடியதாக தீவின் வடக்குக் கடற்கரைத் துறைமுகம், மீன்பிடி முகாம்கள், கைத்தொழில் வலயங்கள், இறங்கு துறைகள் மற்றும் சந்தைகள் என வசதிகள் ஏற்படுத்தப்படும். தீவின் வட கடற்கரையோரப் பிரதேசம் மீன்பிடியுடன் தொடர்பான அபிவிருத்தியைப் பிரதானமாகக் கொண்டிருந்தபோதும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அங்கு காணமுடியும்.

A14 வீதியும் அதற்கான எதிர்கால மேம்படுத்தல்களும் மன்னார்த் தீவின் முதுகெலும்பாகத் தொழிற்படும். இவ்வீதி மூலம் சிறியளவிலான நகர அபிவிருத்தியினுள் உள்ளடங்கும் தாராபுரம், தாழ்வுப்பாடு, தலைமன்னார் மற்றும் பேசாலை பலமடைவதுடன், இவற்றுக் கிடையிலான இணைப்பும் மேம்படுத்தப்படும். தீவுக்குள்ளும் தேசிய ரீதியிலும் மீன்பிடி யுடன் தொடர்புடைய சந்தை வசதிகளை விரிவாக்குவதன் மூலமாக மீன்பிடியை பாரிய அளவில் உருவாக்குதல் என்ற எதிர்கால இலக்கினை அடைவதற்கு உதவியாக A14 வீதியை வீதி அபிவிருத்தி அதிகார சபை நியமங்களுக்கேற்ப விருத்திசெய்கின்ற நடவடிக்கை பிரதானமானதாகக் கொள்ளப்படுகின்றது. மேலும் தீவின் வடக்கு மற்றும் தெற்குக் கடற்கரைகளுக்கிடையே முன்மொழியப்பட்ட இணைப்பு வீதிகள் மூலம் மேம்படுத்தப்படும்.

SEA இனால் தீவின் பகுதியானது அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதால் தீவின் தென்பகுதியில் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளத்துடன் தொடர்புடைய வசதிகளும் உருவாக்கப்படும். “புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களுக்கான சிறந்த இடம்” என்ற இலக்கினை இவ்வெண்ணக்கரு ஊடாக அடையக்கூடியதாக உள்ளது. இங்கு மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறை போன்ற ஏனைய நடவடிக்கைகளை மேம்படுத்துகின்ற


அதேவேளை புதுப்பிக்கத்தக்க சக்திவள அபிவிருத்தி என்பது பிரதான நடவடிக்கையாகத் இப்பிரதேசத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

மற்றும் தீவின் மேற்குப் பாகமானது சுற்றாடல் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய செயற்பாடுகளைக் கொண்டிருக்கும். தீவின் கிழக்குப் பகுதியின் சுற்றுச்சூழல் கூறுகளை மேம்படுத்துவதன் ஊடாகச் சுற்றுலாத்துறையை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**உரு 3: எண்ணக் கருத்திட்டம்**

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை - வடமாகாணம்






**6.2. முன்மொழியப்பட்ட நிலப் பயன்பாட்டுத் திட்டம்**

இலங்கையில் மன்னார்த் தீவு ஒரு தந்திரோபாயம் மிக்க சிறந்த அமைவிடமாக உள்ளது. தீவின் பிரதானமான பாதையானது தீவின் தெற்குப் பகுதியில் ஆரம்பிக் கின்றது. இப்பெரிய சிறந்த நுழைவாயிலானது மன்னார்த் தீவினையும் இலங்கையின் ஏனைய பகுதிகளையும் இணைக்கின்றது. ஆகையினால், எதிர்கால அபிவிருத்தியின் போது அதன் இயற்கைப் பண்புகள் சிதைவுறா வண்ணம் பேணிப் பாதுகாப்பது அவசியமானது.

கட்புல மன்னார்த் தீவின் எதிர்கால நகர சூழலை உருவாக்குவதற்கு ஒருங்கிசைவும் ஒழுங்கமைவும் கொண்டுள்ள கட்டடங்கள், வீதிகள், வெளிகள், வேறுபட்ட செயற்பாடு களையும் மாறுபடும் வேறுபட்ட உயர எல்லைகளையும் கொண்டதாக அதிக சுவாரசியமுடைய முழுமையான நகர வடிவ உணர்வைக் கொடுக்கும்.

பிரேரிக்கப்பட்ட நகர அமைப்பின் பௌதீக வடிவமைப்பானது கட்டட அமைப்பு, வடிவம், உயரம் மற்றும் கட்டடங்களுக்கிடையிலான தொடர்பிலேயே தங்கியுள்ளது. நகரத்தை உற்றுநோக்குபவர்களும் நகரப் பௌதீக கட்டமைப்பு, நகர வெளி மற்றும் கட்டடப் பரிமாணங்களையே நோக்குகின்றர். இதனடிப்படையில் மன்னார் தீவின் எதிர்கால நகர அமைப்பு மற்றும் ஒழுங்கமைப்புக்களானது மன்னார் நகரின் தரமான தோற்றப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

புனித லூசியா கிறிஸ்தவ ஆலயம் மற்றும் ஒல்லாந்தர் கோட்டை வளாகம் போன்றவற்றின் மூலம் 200 வருட காலப் பழைமைமிக்க காலனித்துவ காலக் கட்டடக்கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படும். ஒல்லாந்தர் கோட்டையிலிருந்து ஆரம்பிக்கின்ற உயரம் குறைந்த சுற்றுலாக் குடிசைகளைப் போன்ற தன்மையை வெளிப்படுத்தும் கடற் கிராமங்கள், பறவைகள் சரணாலயங்கள் காணப்படும் சுற்றுலா முடிவிடங்கள் மீன்பிடி நடவடிக்கை போன்றவற்றின் உணர்வுகளை பார்வையாளர்கள் அனுபவிக்கமுடியும். உயரம் குறைந்த குடிசைகளின் கட்டட உயரமானது தேவாலயத்திலிருந்தும்

அத்தியாயம் 06

**திட்டம்**

கோட்டையிலிருந்தும் வேறுபடுத்துவதுடன் மன்னார்த் தீவின் பிரதான மையமாகவும் இட அடையாளமாகவும் முதன்மைப்படுத்துகின்றது.

இப்பாதையானது படிப்படியாக மத்திய வியாபார வலயத்தின் ஊடாகத் தொடர்கின்றது. அபிவிருத்தி செயற்பாடுகளின் வேறுபாட்டைப் பிரதானமான வர்த்தக செயற்பாடுகள் ஊடாகக் காணமுடியும். தீவின் வடக்குப் பகுதி வரை கட்டடங்களின் உயரம் அதிகரித்துச் செல்கின்றது. வலது பக்கத்தில் மன்னார் நகர சபைக்கு அப்பால் கடந்து சென்ற ஆழங் குறைந்த கடல்நீர் ஏரியையும் அத்துடன் இடது பக்கத்தில் உயரமான வர்த்தகக் கட்டடங்களையும் மற்றும் பிரபல்யமான வர்த்தக செயற்பாடுகளையும் காணலாம்.

அவதானிக்கக்கூடிய செயற்பாட்டு மாறுபாடானது கலப்புச் செயற்பாடுகள், தள நில விகிதம், காணியின் பரப்பளவு மற்றும் கலப்பு நகரச் செயற்பாடுகள் என்பன வேறுபடும் இடத்தில் ஆரம்பிக்கின்றது. இதற்கு அண்மையில் பாடசாலை, வைத்தியசாலை, மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு போன்ற உள்ளூர் மக்களுக்கு அவசியமான அபிவிருத்திகள் மன்னார்த் தீவினது நகர வடிவமைபு மற்றும் நடைபாதையை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றது. உயரம் குறைவான கலப்பு அபிவிருத்திகளைக் கொண்ட பகுதிகளானவை 150 மீற்றர் உயரமான காற்று மின் ஆலைகளைக் கடந்துவரும் தூய்மையான காற்றை பெற்றுக்கொள்ளும். தெற்குக் கடற்கரையின் வலது பக்கமாகவுள்ள காற்று மின் ஆலைகள் மற்றும் பார்ப்பதற்கு அழகான கடலோரப் பிரதேசங்கள் என்பன கடலுக்கும் தரைக்கும் இடையிலான வேறுபாட்டை தோற்றுவிக்கின்றன. பேசாலை நகரமானது கலப்பு அபிவிருத்தி செயற்பாடுகளை கொண்ட உப வர்த்தக மையமாக இருப்பதுடன் இது படிப்படியாக அதிகரிக்கின்ற கட்டிட உயரங்களால் வேறுபடுத்தப்படுகின்றது. இப்பிரதேசமானது பெரியளவு கைத்தொழில் நடவடிக்கைகள், பதப்படுத்தும் நிலையங்கள் மற்றும் மீன்பிடித் துறைமுகங்கள் போன்றவற்றைக் கொண்ட தனித்துவமான இடமாக உள்ளது. பேசாலை நகர எல்லையிலிருந்து தலைமன்னார் வரையும் உயரம் குறைவான கட்டடக் கட்டமைப்புக்களையும் இயற்கை அழகுடைய பாதுகாத்துப் பேணப்பட வேண்டிய பகுதிகளைக் கொண்டுள்ளது. தலைமன்னாரின் விளிம்புப் பகுதி யானது தென்னிந்தியாவின் தோற்றத்தை போன்றது.

**(பின்னிணைப்பு 6 : குறுக்கு வெட்டுத்தோற்றம்)**

இவ்வத்தியாயமானது மன்னார்த் தீவின் எதிர்கால நகர வடிவமைப்பு மற்றும் நிலப் பயன்பாடு பற்றி ஆய்வு செய்கின்றது. வேறுபட்ட வகையான செயற்பாடுகளும் கட்டமைப்புக்களும் எதிர்காலப் பொருளாதார செயற்பாடுகளும் "பேசும் கடற்தோற்றம் மற்றும் மன்னாரின் கவருகின்ற கடல்" என்னும் தோற்றத்தை உருவாக்குகின்றது.

**வரைபடம் 7: முன்மொழியப்பட்ட நிலப்பயன்பாட்டு வரைபடம் - 2030**



அத்தியாயம் 06

**திட்டம்**

## 6.3. சமூக மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி தந்திரோபாயங்கள்

### 6.3.1. சேவைத் திட்டம்


மன்னார் அபிவிருத்தித் திட்டமானது மூன்று இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் ஊடாகப் பேசுகின்ற கடற் தோற்றமும் மன்னாரின் கவருகின்ற கடலும் என்ற தூர நோக்கினை அடையக்கூடிய வழிமுறைகளைக் கொண்டுள்ளது. அபிவிருத்தித் திட்டத்தின் இலக்கினைக் கருத்திற் கொள்ளும்போது 2030ஆம் ஆண்டு தூர நோக்கினை அடைவதற்கு முறையான சேவைத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

இச்சேவைத் திட்டத்தில் எதிர்கால வீடமைப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவற்றின் மீது கவனம் செலுத்தியுள்ளது. முழுவதுமான சேவைத் திட்டமானது எவ்வாறு ஒவ்வொரு சேவையும் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக இலகுபடுத்தும் என்பதையும் இச்சேவை வசதிகள் எவ்வாறு முழு மன்னார் தீவினதும் விம்பத்தினை மாற்றியமைக்கும் என்பதனையும் வெளிப்படுத்தும்.

**அ) முன்மொழியப்பட்ட குடியிருப்புப் பிரதேசம்**

முன்மொழியப்பட்ட குடியிருப்புப் பிரதேசமானது வாழக்கூடிய தகைமை, பாதுகாப்பு, வாழக்கூடிய வசதியான தன்மை, நிலக் கிடைப்பனவு போன்றவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக திட்டமிடல் எல்லையை வரையறுக்கின்றது. இதன்படி மிக முக்கியமான நகர இணைப்புக்கள் எதிர்கால அபிவிருத்திப் போக்குகள், சரியான சூழல் கூருணர்வுத் தன்மை, விசேட பாதுகாப்புப் பிரதேசங்கள் போன்றவற்றின் அடிப்படையில் சில பகுதிகள் குடியிருப்பு அபிவிருத்திப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**வரைபடம் 8: முன்மொழியப்பட்ட குடியிருப்புத் திட்டம் - 2030**




ஆகவே, இப்பகுதிகளானவை குடியிருப்பு அபிவிருத்தி செயற்பாடுகளை உள்ளடக்கிய திட்டமிட்ட பிரதேசத்தினை உருவாக்குவதற்கான குடியிருப்புப் பரம்பலுக்கான எதிர்காலக் கேள்வியை 2030 இல் மேம்படுத்தும். இத்திட்டமானது இயற்கை வள அதிகரிப்பு மற்றும் பகல் நேரக் குடித்தொகை போன்றவற்றின் ஊடாக அதிகரிக்கும் எதிர்காலக் குடித்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. குடியிருப்புப் பரம்பலுக்கு ஏற்ப ஏழு வகையான பொழுதுபோக்கு வலயங்கள் முன்மொழி யப்பட்டுள்ளன. வரைபடம் 7, 2030ஆம் ஆண்டு குடித்தொகைப் பரம்பலைக் காட்டுகின்றது.

ஆ) கேள்வி எதிர்வு கூறல்

1. குடித்தொகை மற்றும் வீடமைப்பு எதிர்வு கூறுவதற்கான எடுகோள்கள்:-

- சராசரி வளர்ச்சி வீதம் 1.5
- சராசரி குடியிருப்புப் பருமன் 3.7

அட்டவணை 3: எதிர்வு கூறப்பட்ட குடித்தொகை

| வருடம் | எதிர்வு கூறப்பட்ட குடித்தொகை | மதிப்பிடப்பட்ட வீட்டு தேவை |
|---|---|---|
| 2020 | 70100 | 18957 |
| 2025 | 75600 | 20422 |
| 2030 | 81400 | 22000 |

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை - வடமாகாணம்

இதன்படி 2030ஆம் ஆண்டு இயற்கைக் குடித்தொகை வளர்ச்சியின் அடிப்படையில் எல்லா வலயங்களிலுமாக 22000 வீட்டுக் கூறுகளில் 81400 பேர் குடியிருப்பார்கள்.

பகல் நேரம் வந்துசெல்லும் மக்கள்: தினமும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 2016ஆம் ஆண்டு தரவின்படி 10,000 பேர் நகருக்கு வருகின்றார்கள். அநேகமான மக்கள் வர்த்தக நோக்கங்களுக்காகவும் நிர்வாக சேவைகளைப் பெறுவதற்காகவும் வருகின்றனர். எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளான பொருளாதார மற்றும் சுற்றுலாத்துறை சார்பாக 15,000 பேரை வந்துசெல்லும் மக்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சேவைத்திட்டமானது தற்போதுள்ள சேவைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குடியிருப்பு வலயத்தினுள்ளும் தேவையான வீடு, சுகாதாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குகின்ற அதேவேளை தற்போதுள்ள பிரச்சினைகளையும் தீர்க்கும். (பார்க்க பின்னிணைப்பு இல. 2 - பகுதி 1.)

வீட்டுச் சேவைகள்: வீடமைப்புத் தந்திரோபாயமானது மக்கள் விரும்பி வேலை செய்வதற்கும், ஓய்வு பெறுவதற்கும், பொழுதுபோக்குவதற்கும் மற்றும் தங்கியிருப் பதற்கான ஏற்ற நகரமொன்றினைக் கட்டியெழுப்புவது சேவைத் திட்டத்தின் ஒரு முக்கியமான கூறாகவுள்ளது. சேவைத் திட்டம் என்பதன் கீழ் குறித்த எண்ணிக்கையான வீட்டுக் கூறுகளும் கல்வி, சுகாதாரம் போன்ற ஆதாரமான சேவைகளும் வழங்கப் படுகின்றது. இதன் அடிப்படையில், சேவைத் திட்டமானது பிரதானமாக வீட்டு வசதிகளின் எதிர்காலத் தோற்றப்பாட்டினைக் கருத்திற்கொள்கின்றது. இதன்மூலம் வீட்டு அபிவிருத்தியானது சேவைத் திட்டத்தினால் வழங்கப்படுகின்றது. இது அவசியமான குடித்தொகையையும் வசதிகளையும் அங்கு வழங்குகின்றது.

2030ஆம் ஆண்டு 22000 வீட்டுக் கூறுகள் வழங்கப்படவேண்டும். அப்போது மன்னார்த் தீவு முழுவதுமாக 7 குடியிருப்பு வலயங்களில் 81,400 மக்களைக் குடியிருத்த எதிர்பார்க்கப்படுகிறது. இதில் வலயம் E யானது உயர் அடர்த்தி கொண்ட வலயமாகவும். G யானது அடர்த்தி குறைந்த வலயமாகவும் இருக்கும். F, B வலயங்கள் இரண்டாவது, மூன்றாவது அடர்த்திகூடிய வலயங்களாக காணப்படும்.

அத்தியாயம் 06

**திட்டம்**

**வரைபடம் 9: முன்மொழியப்பட்ட வீட்டு அடர்த்தி - 2030**




**ஆ. சுகாதார சேவைகள்**

2030ஆம் ஆண்டளவில் சுகாதாரத் துறையின் வளர்ச்சித் தேவைகள் மற்றும் கோரிக்கை களைப் பூர்த்தி செய்வதற்காக தற்போதுள்ள மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகளின் தரம் மற்றும் அளவுகள் விருத்தி செய்யப்படும். இந்நிலையில் மன்னார் அபிவிருத்தித் திட்டமானது தற்போதுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிகமான மனித வளத்தையும் கட்டடங்களையும் ஒதுக்கவேண்டுமென முன்மொழி கின்றது. சுகாதார நிறுவனங்களின் அமைவிடத்தைக் கீழுள்ள வரைபடம் காட்டுகின்றது.

**(பின்னிணைப்பு 7: எதிர்காலத்தில் மன்னார்த் தீவிலுள்ள வசதிப்படுத்த வேண்டிய வைத்தியசாலைகளின் அடிப்படைத் தகவல்கள்)**

**வரைபடம் 10: சேவைத் திட்டம் - சுகாதாரம் - 2030**



**இ. கல்விச் சேவைகள்**

தற்போதைய நிலையில் அடையாளப்படுத்தப்பட்ட ஒவ்வொரு குடியிருப்பு வலயத்திலும் போதியளவு பாடசாலைகள் உள்ள நிலையில் கல்வித் திணைக்களத்தின் தேசிய நியமத்தின் அடிப்படையில் பாடசாலைகள் குறைந்தளவான மாணவர்களையே கொண்டுள்ளன.

2030ஆம் ஆண்டில் கணிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு இடவசதியினை வழங்கும் பொருட்டு தற்போதுள்ள பள்ளிகளுக்குத் தேவையான கட்டடங்களுக்கான பௌதீக அபிவிருத்தி திட்டமானது பரிந்துரைக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் மன்னார்த் தீவின் மூன்றாம் நிலைக்கல்வி தொடர்பாக நோக்கு கின்றபோது, தற்போது 90 % மாணவ மாணவியர் உயர்நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்து பள்ளியை விட்டு விலகியவர்களாக எந்தவொரு மூன்றாம் நிலைக் கல்வியிலும் ஈடுபடாதவர்களாக இருக்கின்றார்கள். இந்நிலையில் இவர்கள் மீன்பிடித் தொழிலில் மட்டுமே ஈடுபடுவதுடன் நேரடியாகவே திறமையற்ற ஊழியப்படையாக வளர்கின்ற நிலையே காணப்படுகின்றது. எனவே சேவைத் திட்டத்தின் மூலம் கடல் வளம் சார்ந்த மூன்றாம் நிலைக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. ஆகவே முன்மொழியப்பட்ட மூன்றாம் நிலை பயிற்சி நிலையமான சவுத்பாரில் “தொழில் பயிற்சி நிலையமானது அமைக்கப்படும்.

(வரைபடம் 11 இனைப் பார்க்க)

**வரைபடம் 11 : சேவைத் திட்டம் - கல்வி (2030)**




**(பின்னிணைப்பு 8: தற்போது மன்னார்த்தீவில் காணப்படுகின்ற பாடசாலைகளும் அவற்றின் வகைப்பாடுகளும்)**

**(பின்னிணைப்பு 9: மன்னார்த்தீவில் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கான பௌதீக தேவைப்பாடுகள்)**

**ஈ. பொழுதுபோக்கு சேவைகள்.**

மன்னார்த் தீவில் பொழுதுபோக்கு சேவைக்கென பயன்படத்தக்க போதுமான வெறுமையான நிலங்கள் மற்றும் தரவை நிலங்கள் முறையான பராமரிப்பு இன்றி கைவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களுக்கு முறையான பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்காக பூங்காக்கள், விளையாட்டு மைதானம் மற்றும் பொது திறந்தவெளி இடங்கள் ஆகியவை 2030ஆம் ஆண்டிற்குள் முன்மொழியப்பட்ட குடியமர்வுப் பிரதேசத்தினுள் உள்வாங்கப்படும்.

அத்தியாயம் 06

**திட்டம்**

அத்துடன் 2030 இல் உள்ளூர் மக்களுக்கு ஆரோக்கியமான மற்றும் வாழக்கூடிய சூழலை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வு கூறப்பட்ட குடியிருப்புப் பிரதேசத்தில் எதிர்வு கூறப்பட்ட சனத்தொகைக்கு முறையான வசதிகளை வழங்குவதற்காக பொழுதுபோக்கு வசதிகள் முன்மொழியப்பட்டுள்ளது. அவையாவன: பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொது திறந்தவெளிகள் இவை 2030இல் வேறுபட்ட ஒழுங்கில் வழங்கப்படவுள்ளது. (வரைபடம் 12இனைப் பார்க்க)

**வரைபடம் 12 : சேவைத் திட்டம் - பொழுதுபோக்கு (2030)**




### 6.3.2. போக்குவரத்துத் திட்டம்

இலங்கையிலுள்ள ஏனைய நகரங்களுடன் ஒப்பிடும்போது நகரம் வழங்கும் சமூக, பொருளாதார சேவைகளின் தேவைகளைக் கருத்திற் கொள்ளும்போது, போக்குவரத்துத் தொடர்பில் மன்னார் மிகக் குறைந்தளவு பிரச்சினையையே கொண்டிருக்கின்றது.

**வரைபடம் 13 : மன்னார்த் தீவுக்கான போக்குவரத்துத் திட்டம் (2030)**



அத்தியாயம் 06

**திட்டம்**

மன்னார்த் தீவின் எதிர்கால அபிவிருத்தியை அடைவதற்காகவும் எதிர்காலத்தில் பாரிய தேவைகளுக்கு உதவுவதற்காகவும் போக்குவரத்துத் துறையை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது. A14 வீதி வலையமைப்பானது மன்னார்த் தீவின் பிரதானமான போக்குவரத்து அணுகுவழியாகக் கருதப்படுகின்றது. போக்குவரத்துத் திட்டத்தில் மன்னார்த் தீவின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் அடைவதற்கும் A14 வீதியை விருத்தி செய்வது பிரதான முன்னுரிமையாக கருதப்பட்டுள்ளது.

பேசாலை நகரினை அடுத்து அமையவுள்ள துறைமுக அபிவிருத்தி பெறுமதி சேர்க்கும் மீன்பிடி கைத்தொழில் மற்றும் பெரிய அளவிலான பதனிடும் கைத்தொழில் போன்றவற்றை உள்ளடக்கியதான எதிர்காலக் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவக்கூடிய வகையில் இப்பகுதியின் திறனை மேம்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி யானது பிரதான அபிவிருத்தியாகும். இவ்வீதி வலையமைப்பானது மத்திய வியாபார வலயத்திற்கும் உபநகரங்களான நகர சபை, தாழ்வுப்பாடு, தாராபுரம், எருக்கலம்பிட்டி, பேசாலை மற்றும் தலைமன்னார் ஆகியவற்றுக்கிடையிலான இணைப்பை உருவாக்கும்.

போக்குவரத்துத் திட்டத்தினை முழுமையாக நோக்கின் இரண்டாவது முன்னுரிமையாக தீவின் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான இணைப்பை மேம்படுத்துவதாகும். மன்னார்த் தீவு முழுவதுமாக அமைக்க முன்மொழியப்பட்டுள்ள கடற்கரை வீதியானது தீவின் இரண்டு பக்கமும் பிரதானமான இணைப்பையும், தீவின் முழுப் பகுதிக்கும் குறிப்பாக சுற்றுலாத்துறை, கைத்தொழில் மற்றும் மீன்பிடி அபிவிருத்திக்கு உதவுவதுடன் அனைத்துப் பகுதிகளையும் சென்றடைவதற்கான வசதியையும் வழங்கும்.

முன்மொழியப்பட்ட சேவை வீதியானது பேசாலைத் துறைமுகத்திலிருந்து பொருட்களை ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கும் நகரில் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப் படும் குடித்தொகையின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உதவும்.

**வரைபடம் 14 : மன்னார் நகர சபைப் பகுதிக்கான போக்குவரத்துத் திட்டம் (2030)**




எதிர்காலத்தில் நிகழவிருக்கும் அபிவிருத்தி காரணமாக உருவாகும் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதற்கும் சென்றடையக்கூடிய தன்மையை மேம்படுத்துவதற்கும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. நகர சபையைச் சுற்றி முன்மொழி யப்பட்டுள்ள உள் சுற்றுவட்ட வீதியானது மத்திய வியாபார வலயத்துக்கு

அத்தியாயம் 06

**திட்டம்**

அண்மையாக உருவாகின்ற அநாவசியமான வாகன நடமாட்டத்ததை திசை திருப்புவதன் ஊடாக போக்குவரத்து நெரிசலை தவிர்க்கின்றது. தீவினுள் இணைப்பை மேம்படுத்துவதற்கு மேலதிகமாகத் தீவு முழுவதும் நகரங்களைச் சூழ்ந்து வீதிகள் மேம்படுத்தப்படும்.

**(பின்னிணைப்பு 10: முன்மொழியப்பட்ட வீதிக் குறுக்கு வெட்டுத் தோற்றம்)**

போக்குவரத்து வலையமைப்பை அபிவிருத்தி செய்வதற்குப் போக்குவரத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அவசியமானதாகும். தற்போதைய மன்னார் நகரின் பேருந்து நிலையம் பயணிகளுக்குப் போதிய வசதிகளைக் கொண்டதாக இல்லை. ஆகவே, தற்போதுள்ள பேருந்து நிலையத்தை அவசியமான வசதிகளுடன் மீள் அபிவிருத்தி செய்ய முன்மொழியப்பட்டதுடன், பிரதேச சபைகளின் எதிர்கால அபிவிருத்திக்காகப் பேசாலையிலும் தலைமன்னாரிலும் 3 பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கான முன்மொழிவையும் இத்திட்டம் கொண்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள பொதுப் போக்குவரத்தானது தீவு முழுவதுமாக முன்மொழியப்பட்டுள்ள குடியிருப்பு வலயங்களை உள்ளடக்கிய சேவையாகும். முன்மொழியப்பட்டுள்ள தற்போதுள்ள பொதுச் சந்தை யினதும் சந்தைக் கட்டட அடித்தளத் தரிப்பிட நிலையத்தினதும் மீள் அபிவிருத்தி மற்றும், மத்திய வியாபார வலயத்தில் முன்மொழியப்பட்டுள்ள அபிவிருத்தி காரணமாக உருவாகும் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்துவதற்குத் தற்போதுள்ள பாலத்துக்கு அருகேயுள்ள வாகனத் தரிப்பிடமானது (ப.நோ.கூ.ச. கட்டடத்தின் முன்னால்) மீள் அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

### 6.3.3. நீர் விநியோகத் திட்டம்

நகரம் ஒன்றின் சமூக, பொருளாதார, சுற்றாடல் மற்றும் பௌதீகத் தோற்றப்பாட்டை அபிவிருத்தி செய்வதில் நீர் முக்கிய பங்கு வகிக்கின்றது. நகரின் பல பகுதிகளிலும் நீரின் நிலைபேறான பயன்பாட்டுக்கும் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் நகரின் நீர் முகாமைத்துவம் என்பது முக்கியமானதாகும். தற்போது நாளொன்றுக்கு 9000 கன மீற்றர் நீரில், 60% ஆன மக்கள் முருங்கன் நீர் விநியோகத் திட்டத்திலிருந்தும் 40% ஆன மக்கள் தரைக்கீழ் நீரிலிருந்தும் நீரைப் பெறுகின்றனர். நீரானது 2030ஆம் ஆண்டில் 81,000 பேருக்கு வழங்குவதற்காக முன்மொழியப்பட்டுள்ளது. அபிவிருத்திச் செயன்முறைகளான கைத்தொழில், சுற்றுலாத்துறை மற்றும் நகர மத்திய அபிவிருத்தி போன்றவற்றுக்கு விநியோகிக்கப்படும். 2030ஆம் ஆண்டுக்கு நாளொன்றுக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நீரின் அளவானது 14000 கன மீற்றராகும்.

**(பின்னிணைப்பு 11: மன்னார்த் தீவுக்கான நீருக்கான கேள்வி 2020 - 2030)**

2030ஆம் ஆண்டளவில் பேசாலைப் பிரதேச சபைப் பிரதேசத்துக்குள் காணப்படும் தரமான நீருக்கு மேலதிகமாக கீழே உள்ள அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ள கீரிக் கிணறு, கட்டுக் கரைக்குளம் (முருங்கன் நீர் விநியோகம்) போன்ற மூலங்களிலிருந்து நீரைப் பெறுவதற்கான சாத்தியப்பாடு காணப்படுகிறது. அத்துடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் முன்மொழியப்பட்ட பாரிய மன்னார் நீர் விநியோகத் திட்டமும் காணப்படுகின்றது.

**அட்டவணை 4 : காணப்படும் நீர் மூலங்கள்**

| நீர் மூலங்கள் | கொள்திறன் (க.மீ/ நாளொன்றுக்கு 2030) |
|---|---|
| பேசாலை பி.ச. பகுதி தரைக்கீழ் நீர் | |
| கீரி நீர்க்கிணறு | 2250 |
| கட்டுக்கரைக் குளம் (முருங்கன் நீர் விநியோகம்) | 15000 |
| முன்மொழியப்பட்ட பாரிய மன்னார் நீர் | 19000 |
| விநியோகத் திட்டம் | |

மூலம் : தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, மன்னார் மாவட்டம்

**வரைபடம் 15 : நீர் விநியோகத் திட்டம் (2030)**




### 6.3.4. கழிவு முகாமைத்துவத் திட்டம் (2030)

தற்போது மன்னார்த் தீவில் இரண்டு கழிவு கொட்டும் தளங்கள் காணப்படுகின்றன. அவை முறையே மன்னார் நகர சபைப் பிரிவிலுள்ள சின்னக்கடை மற்றும் மன்னார் பிரதேச சபை பிரிவிலுள்ள பேசாலை மேற்கு பகுதிகளாகும். இரு பிரதேசங்களும் மொத்தமாக 8 ஏக்கர் நிலப்பரப்பினை குப்பைகளைப் புதைப்பதற்கும் மற்றும் உரம் தயாரிப்பதற்கும் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. மேலதிகமாகமன்னார் நகர சபையில் எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான நில ஒதுக்கீடு காணப்படவில்லை. ஆகையால் தற்போதுள்ள பேசாலை குப்பை கொட்டும் தளத்தை சுகாதார நிலநிரவுகை, உரம் தயாரித்தல் மற்றும் கொட்டுதல் நோக்கத்தை உள்ளடக்கியதாக உருவாக்க முன்மொழியப்பட்டது இது வரைபடம் எண் 15 இல் காட்டப்பட்டுள்ளது.

எதிர்கால மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி போக்குகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் திண்மக்கழிவு உற்பத்தி அதிகரிக்கும். இதற்கேற்ப 2030 ஆம் ஆண்டில் தொழில்துறை, குடியிருப்பு மற்றும் வணிகத் துறைகளில் இருந்து கழிவுகள் மேலும் உருவாக்கப்படும்.

கழிவுகளை அகற்றுவதற்கு பல முறைகள் காணப்பட்ட போதிலும் குறிப்பிட்ட பகுதியில் அதிகரிக்கும் கழிவுகளுக்கான நீண்டகால தீர்வாக சுகாதார நிலநிரவுகை காணப்படுகின்றது.பேசாலை பகுதியில் கலப்பு அபிவருத்தி வலயத்தினுள் எதிர்கால

கழிவுகளை அகற்றுவதற்காக மேலும் 10 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலம் கூட்டெரு தயாரிக்கும் செயற்பாடுகள் (2 ஏக்கர்) கழிவுகளைத் தரம் பிரிக்கும் 3R பொறிமுறை (2 ஏக்கர்) மற்றும் திறந்தவெளியில் அகற்றல் (7 ஏக்கர்) போன்ற தேவைகளுக்காகப் பிரித்து ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு ஒரு நாளைக்கு 100 மெற்றிக் தொன் கழிவு முகாமை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. கைத்தொழில் கழிவுகளை ஒவ்வொரு தொழில்துறை வலய பகுதிக்குள் நிர்வகிக்க வேண்டும், ஏனெனில் திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் “பசுமை கட்டட சான்றிதழ் பெறப்பட வேண்டும்” என்ற வழிகாட்டுதல் கட்டாயமாக செயற்படுத்தப்படும்.



**அட்டவணை 5 : 2030 இல் கழிவுருவாக்கம்.**

| துறைகள் | முன்மொழியப்பட்டது | மொத்தக் கழிவுருவாக்கம் (2030இல் நாளொன்றுக்கு) |
|---|---|---|
| குடியிருப்பு | 100000 | 100000 X 0.77 = 77 தொன்<br>நியமம் 0.77 கி.கி/ ஒரு நபருக்கு |
| வர்த்தகம் | 900 | 900 X 30 = 27 தொன்<br>நியமம் 30 கி.கி/ ஒரு நபருக்கு |
| கைத்தொழில் | 450 | 450 X 50 = 22.5 தொன்<br>நியமம் 50 கி.கி/ ஒரு நபருக்கு |

மூலம் : மத்திய சுற்றாடல் அதிகார சபை, மன்னார்

**வரைபடம் 16 : கழிவு முகாமைத்துவத் திட்டம் (2030)**




### 6.4 பொருளாதார அபிவிருத்தி தந்திரோபாயங்கள்

#### 6.4.1. கைத்தொழில் திட்டம் (மீன்பிடி, சக்தி)

கைத்தொழில் அபிவிருத்தியானது நகரத்தின் விரைவான பொருளாதார அபிவிருத்திக்கும் தனிநபர் வருமானத்தினையும் அதிகரிக்க உதவுகின்றது. கைத்தொழில்துறை அபிவிருத்திக்கு இடையில் நேர்முகமான தொடர்பு இருப்பதாக அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி தரவுகள் காட்டுகின்றது. மன்னார்த் தீவின் கடல் சார் வளங்களை சரியாகப் பயன்படுத்துவதன் மூலமும் தேசிய அளவிலான கேள்வியை நிறைவு செய்வதற்குப் பங்களிப்புச் செய்வதன் மூலமும் மன்னார்த் தீவின் மீன்பிடிக்

கைத்தொழிற் துறையை அபிவிருத்தி செய்வது சாத்தியமானது. தற்போது மீன், கருவாடு மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் போன்றவற்றின் தலைக்குரிய நுகர்வானது அதிகரிக்கப்பட்டதுடன், அதன் கேள்வியானது மீனினதும் மீன்பிடிப் பொருட்களினதும் உற்பத்தியை விஞ்சியுள்ளது. இதன் காரணமாக தேவையை நிறைவு செய்வதற்காக இலங்கையானது அந்நியச் செலாவணியை 2015ஆம் ஆண்டு 30729 மில்லியன் ரூபாவினை செலவிட்டு 120,046 மெற்றிக் தொன் மீன் சார்ந்த உணவு வகைகளை இறக்குமதி செய்தது.

இந்த நிலையில், பயன்படுத்தப்படாத கடல் சார்ந்த வளங்களிலிருந்து மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் மன்னார்த் தீவிற்கு மீன்பிடிசார் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம் அவசியமானது. முன்மொழியப்பட்ட கைத்தொழில் திட்டத்தின் பிரதானமான தந்திரோபாயமானது பௌதீக, சமூக, பொருளாதார செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு மன்னார்த் தீவில் துறைமுகமொன்றினை அமைத்தலாகும். பேசாலைப் பிரதேசமானது மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்குப் பொருத்தமான பகுதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. ஏனெனில், தெரிவுசெய்யப்பட்ட பிரதேசமானது அதிகளவு மீன் உற்பத்தியையும் (தீவின் உற்பத்தியில் 46 வீதம்) மற்றும் இங்குள்ள அநேகமான மக்கள் (60 வீதம்) மீன்பிடியுடன் தொடர்புடைய செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். எனவே பேசாலை பிரதேசமானது மீன்பிடியை அடிப்படையாகக் கொண்ட நகரம் என்ற தந்திரோபாயம் இலக்கினை அடைவதற்கும், ஏனைய மீன் உற்பத்திப் பகுதிகளைவிட அதிகளவு நன்மையைப் பெறுவதற்கான இடமாகும்.

பேசாலை மீன்பிடித் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில், அடிப்படையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் முன்மொழியப்பட்ட கைத்தொழில் வலயத்தினுள் (வலயம் 5) மீன்பிடியுடன் தொடர்புடைய கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மூலப்பொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான முன்மொழியப்பட்ட வடக்குக் கடற்கரை வீதியின் மூலம் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவமுடியும். பேசாலையிலும் தலைமன்னாரிலும் உள்ள புகையிரத நிலையங்கள் எதிர்காலத்தில் மீன்பிடி சார்ந்த பொருட்களை இடமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தமுடியும். இதனைவிட A14 வீதி மீள் அபிவிருத்தி, மற்றும் வீதிகளின் அபிவிருத்தி என்பன மீன்பிடி உற்பத்திப் பொருட்களை நாட்டின் ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்றவகையில் தொழிற்படும். (வரைபட இலக்கம் 17ஐ பார்க்க : கைத்தொழில் திட்டம்)

அத்துடன் மீன் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நகரசபைப் பகுதியிலும் பேசாலை, தலைமன்னார்ப் பகுதியிலும் மீன் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளன. மேலும் வடமாகாணத்தின் மீன்பிடியை பாரிய அளவில் உருவாக்குதல் என்ற இலக்கினை அடைவதற்கு அங்குள்ள கடல்சார் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் இறங்கு துறைகள் (வரைபட இல. 17ஐ பார்க்க கைத்தொழில் திட்டம்) அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக முன்மொழியப்பட்ட கைத்தொழில் திட்டத்தின் மூலம் 2030ஆம் ஆண்டில் 3500 புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்குவதுடன் வெளிப் பிரதேசங்களிலிருந்து 1200 மக்கள் உள்வாங்கப்படுவார்கள்.

**வரைபடம் 17 : கைத்தொழில் திட்டம் (2030)**




இதேநேரத்தில் மன்னார்த் தீவானது புதுப்பிக்கக்கூடிய சக்தி வளஅபிவிருத்திக்குரிய உள்ளார்ந்த வளமுள்ள பகுதியாக நிலைத்து நிற்கத்தக்க சக்தி வள அதிகார சபையால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, சக்தி வளத்துடன் தொடர்புடைய கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான சாத்தியப் பாடு மன்னார்த் தீவில் காணப்படுகின்றது. அங்கு காணப்படும் சாத்தியமான வளங்களைப் பயன்படுத்தி தேசிய கட்டமைப்புக் குறிக்கோளுக்கான சக்தி வளத்தினை உருவாக்குதல். தேசிய மின்சார வலையமைப்புக்கு விநியோகிப்பதற்கான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவும் கைத்தொழில் வலயத்தினுள்ளும் (வலயம் 5) கலப்பு அபிவிருத்தி வலயத்தினுள் (வலயம் 3) சூரிய சக்தி மற்றும் மின்சார உற்பத்தி பூங்காக்கள் அமைக்க அனுமதிக்கப்படும்.

மேலும் இக்குறிக்கோளை அடைவதற்காக சக்திவள அபிவிருத்தி பிரதேசங்களில் பின்வரும் விதிமுறைகள் SEA ஆல் அமுல்படுத்தப்படும்.

- காற்று மின் உற்பத்திக்கு அதீத முன்னுரிமை வழங்கப்படும்.
- கட்டடங்களின் அதிகூடிய உயரம் 9 மீற்றராக மட்டுப்படுத்தப்படும்.
- எந்தவிதமான அபிவிருத்திக்கும் நிறைபேறான சக்திவள அதிகார சபையின் அனுமதி பெறப்படவேண்டும்.

சூரியமின் உற்பத்தித் தட்டுகள் மன்னார்த் தீவு முழுவதும் ஊக்குவிக்கப்படும். மேலும், வலயம் 5 இன் உள் அமையும் கைத்தொழிற்சாலைகள் மற்றும் களஞ்சியசாலைகள் அவற்றின் கூரைகளில் சூரிய மின்சார உற்பத்தித் தட்டுகளைக் கொண்டிருக்கவேண்டும். இக்குறிக்கோளை அடைவதற்கு வேண்டிய உட்கட்டுமான வசதிகளானவை உட்கட்டு மானத் திட்டத்தின் ஊடாக வழங்கப்படும்.

(பின்னிணைப்பு 12 : கைத்தொழில் வகைப்பாடு)

### 6.5.நிலைத்து நிற்கும் சூழல் தந்திரோபாயங்கள்

உலகில் சூழல் என்பது மிகவும் பெறுமதியான வளமாகும். இந்த வகையில் நகரம் மற்றும் இயற்கைச் சூழலிலுள்ள மகிழ்ச்சி ஊட்டும் தோற்றப்பாடுகள், ஓசைகள், வாசனைகள், மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தவை. அடிப்படையில் சூழல் என்பது இயற்கையின் கொடையாகும். இது எல்லா உயிர்களையும், மனித, விலங்கு, தாவர உயிர்களைச் செழுமைப்படுத்தி வளப்படுத்துகின்றது. மேலும், மன்னார் தனது

அத்தியாயம் 06

**திட்டம்**

உணவு, நீர் மற்றும் சுவாசிக்கும் காற்றுக்கு நீல மற்றும் பசுமையான வெளிகளில் தங்கியுள்ளது.

மன்னாருக்கான தொலைநோக்கு “பேசும் கடற்தோற்றமும், கவருகின்ற கடலும்” என்பதாகும். ஆகவே பேசுகின்ற கடல் தோற்றம் கடலைப் பிரதிபலிப்பதுடன் கடல் சார்ந்த கலைப் படைப்பைக் கொண்டிருக்கின்றது. கடற்கரைகளும் கடற்கரையோரங்களும் கடலில் வள்ளங்களும் கடல்சார் விம்பங்களும் கலைத்துவ உணர்வுள்ள கடல் தோற்றத்தை உருவாக்குகின்ற அடிப்படைக் கூறுகளாகும். மன்னாருக்கான தொலை நோக்குக்கான இலக்குகளில் ஒன்றாக ”இயற்கைச் சூழலினதும், முக்கியத்துவம்மிக்க இடங்களினதும் அனுபவத்தினை மேம்படுத்துவதாகக் காணப்படுகின்றது”. மன்னாரின் இயற்கைச் சூழலையும், கலாசார மரபுரிமைகளையும் பேணி விருத்தி செய்வதற்கான முயற்சிகள் அத்தியாவசியமானதாகும். அது பொருளாதார ரீதியில் அர்த்தமுள்ளதாகவும் உள்ளது. ஆரோக்கியமான சூழலானது ஆரோக்கியமான பொருளாதாரத்துக்கு இன்றியமையாதது.

2030ஆம் ஆண்டு சூழல் திட்டமானது மன்னாரின் சூழலைப் பாதுகாப்பதற்குரிய அணுகுமுறைகளை உருவாக்குவதுடன் எதிர்கால சந்ததியின் பொருளாதாரத்தினைப் பாதுகாப்பதற்குரிய உறுதிப்பாட்டையும் கொண்டிருக்கும். அவை சூழலுக்கும், பொருளா தாரத்துக்கும் இடையிலான உறவைப் பரஸ்பரம் பலப்படுத்தும். நீண்ட நோக்கிலான பொருளாதார வளர்ச்சிக்கும் உற்பத்தித் திறனுக்கும் அடிப்படையாக எல்லா வடிவிலுமுள்ள உயிர்கள் அடிப்படையாக இருப்பதால் அதற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய இயற்கை மூலதனங்களான காற்று, நீர், மண், சூழல்தொகுதி என்பவற்றை மேம்படுத்து வதன் மூலம் சுற்றுச்சூழல் திட்டமானது உற்பத்தித் திறனை மேம்படுத்தும்.

சுற்றுலாத்துறையானது உள்ளூர் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு முக்கியமான துறையாக உள்ளது. இலங்கையினுடைய புகழின் காரணமாக அதிகளவு சுற்றுலாப் பயணிகள் தீவினைச் சென்று பார்க்கின்றார்கள். புதிய மற்றும் தனித்துவமான இடங்கள் உல்லாசப் பயணிகளின் மாற்றமடைந்துவரும் அழகுணர்ச்சியைத் திருப்திப்படுத்த அவசியமானதாகும். மன்னார் மாவட்டத்தின் தன்மைகள் ஒரு மாற்றீடான சுற்றுலா இடங்களாகப் பெரிதும் கண்டுபிடிக்கப்படாமலும் விருத்தி செய்யப்படாமலும் உள்ளது. நன்கு ஸ்தாபிக்கப்பட்ட சேவை வழங்குநர்களோடு ஒப்பிடும்போது புதிய சந்தைக்கான கேள்விகளுக்கும் புதுமையான வாடிக்கையாளர்களுக்கும் பதிலளிக்கக்கூடியதாக இருக்கும். பொறுப்புள்ள கைத்தொழிலானது தற்போது பயன்படுத்தாது காணப்படும் வளங்களின் பயன்பாடு பற்றி ஆய்வு செய்வதோடு, ஈடுபாடுள்ள மத சுற்றுலாப் பயணி களின் தேவையையும் நிறைவுசெய்யும். திருப்தியடைந்த ஆர்வமுடை விருந்தினர்கள், புதிய விழிப்புணர்வைத் தங்கள் வீட்டுக்கும் இடத்திற்கும் கொண்டு செல்வதோடு அந்த அனுபவத்தினைத் தமது நண்பர்களுக்கும் பகிர்ந்துகொள்வதால் மன்னார் மாவட்டத்தின் செயற்பட்டு கொண்டிருக்கும் வியாபார நடவடிக்கைகளுக்கு வாய்ப்பைக் கொடுக்கும். மன்னார்த் தீவு பற்றித் தாம் அறிந்து கொள்வதுடன், மன்னாரின் பண்பை எவ்வாறு பேணமுடியும் என்பதற்கும் தமது பயண அனுபவத்தினை ஆழமாக்குவதற்கும் உதவும். மன்னார் மாவட்டத்தை ஒரு மாற்றீடான சுற்றுலா இடமாக உருவாக்குவதன் மூலம் சிறந்த பொருளாதார, சமூக, சூழல் நன்மைகளைப் பெறலாம்.

பொருளாதார நோக்கில் சுற்றுலா வர்த்தகமானது, உள்ளூரவர்களைப் பயிற்றுவித்துத் தொழிலில் ஈடுபடுத்துவதனையும், உள்ளூர் விநியோகத்தினைக் கொள்வனவு செய்வதனையும், உள்ளூர் சேவைகளைப் பெறுவதனையும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதையும் உறுதி செய்வதினூடாக இதன் விளைவாகத் தேக்க நிலையிலுள்ள பொருளாதாரத்தினை இயங்க ஆரம்பிக்கச் செய்யும். தீர்மானமெடுப்பதில் உள்ளூர் மக்களின் பங்களிப்பினை அதிகரிப்பதன்மூலம் சமூக நன்மைகளை அடையமுடியும். நிலவுகின்ற பாரம்பரியம் மற்றும் வழமைகள் போன்றவற்றைப் புரிந்துகொண்டு மதிப்பளிப்பதுடன் நல்வாழ்வு என்பது ஒரு தயாரான திட்டமாகவும் மக்களின் கௌரவம் மதிப்பளிக்கப்படுவதுடன் அவர்களை எதிர்க்கவோ


அல்லது ஒதுக்கவோ கூடாது. எதிர்கால சந்ததிக்கான பசுமை மரபுரிமைகளாவை அனுமதிக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் சூழல் மீதான பாதகமான விளைவுகளைக் கட்டுப்படுத்துவதுடன் உயிர்ப் பல்வகைத் தன்மையை மேம்படுத்தி அபிவிருத்தியை முகாமைசெய்வதன் மூலம் பாதுகாக்கப்படும். தொழில்களை உருவாக்குதல், வருமானத்தினை மீள் பரம்பலுக்கு உள்ளாக்குதல் மற்றும் வறுமைக் குறைப்பு போன்றவற்றின் ஊடாக சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா அபிவிருத்திக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் சமூக அபிவிருத்தி மேற்கொள்ளப்படும். ஏனைய சாதகமான தாக்கங்களாக சுற்றுலாத்துறை சமூக ஐக்கியத்தை உருவாக்குதல், சமூதாயத்தை மேம்படுத்திப் பலப்படுத்துதல் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பை மேலும் பலப்படுத்துதல் போன்றனவாகும்.

அத்தியாயம் 06

**திட்டம்**

மிக முக்கியமாகப் பெறுமதியுள்ள கலாசாரம் மற்றும் பாரம்பரியம் போன்றவற்றைப் பேணுதலும் கலாசார வரலாற்றுப் பாரம்பரிய மற்றும் நிகழ்வுகளை மேம்படுத்துவது மாகும். இயற்கை வளங்களைப் பேணி நிலைத்து நிற்கத்தக்க வகையில் முகாமை செய்வதற்குப் பங்களிப்புச் செய்வதும் உள்ளூர் மரபுரிமைகளைப் பாதுகாப்பதும் மற்றும் பூர்வீக கலாசாரத்துக்குப் புத்துணர்வு ஊட்டுவதுமான கலாசாரக் கலைகளையும் வடிவமைப்புக்களையும் முக்கியமான விடயமாகக் கொள்ளலாம். எதிர்காலத்தில் இயற்கை மற்றும் கலாசார இடங்களின் பணப் பெறுமதிகள் பற்றிய விழிப்புணர்வை உயர்த்துவதன் மூலமும் உள்ளூர் மற்றும் தேசிய மரபுரிமைகள் மீதான பெருமையை ஊக்குவிப்பதன் மூலமும் நிலைத்து நிற்கும் சுற்றுலாத்துறைக்கு உள்ளூர் மக்களின் ஈடுபாட்டை ஊக்குவித்தல்.

**வரைபடம் 18 : சூழல் மற்றும், சுற்றுலாத்துறைத் திட்டம் (2030)**




### 6.5.1. பாதுகாப்பும் நன்னிலையில் பேணுதலும்

**அ) தொல்பொருள், கலாசாரம் மற்றும் வரலாற்று இடங்களின் பெறுமதியை பாதுகாத்தல்.**

மன்னார் தீவின் நுழைவாயிலில் மனித அளவுக்கு ஏற்றதான வசதியான கோட்டை யொன்று போர்த்துக்கீசர்கள் மற்றும் ஒல்லாந்தர்களினால் கட்டப்பட்ட கோட்டையானது மன்னார்த் தீவுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். புதிய கலாசாரப் பகுதியில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க கட்டமைப்பு ஒன்றைப் புனரமைப்பது முக்கியமானதொரு அடையாளக் கூறாகும். கோட்டையின் உட்புறத் தொழிற்பாட்டை மேம்படுத்துவதற்காக கோட்டையைப் புனரமைத்து உள்ளே ஓவியத் தொடுப்பினைக் காட்சிப்படுத்துவதன் மூலம்

மேற்கொள்ளலாம். பெருக்க மரம் மன்னார் மாவட்டத்தின் முக்கியமான மரமாகும். இது 500 வருடப் பழைமையான மரமாகும். தற்போது சிறிய எண்ணிக்கையிலான பெருக்க மரங்கள் உள்ளன. இவற்றினை அடையாளப்படுத்திப் பாதுகாக்கவேண்டும். பெருக்க மரத்தினை (50 அடி ஆரை) பாதுகாப்பதற்கு அதற்கு அண்மையில் கட்டடங்கள் அமைப்பது தொடர்பான கட்டுப்பாடு, ஒழுங்கு விதிகளை முன்மொழிவது அவசியம்.

**ஆ) மன்னார் வளைகுடா, உயிர்க்கோளத்தினுள் நிலைத்து நிற்கத்தக்க மீனினப் பயன்பாட்டை உறுதிப்படுத்தல்.**

ஆசியாவின் முதலாவது கடல்சார் உயிர்கோளமாக மன்னார் வளைகுடாவின் உயிரியல் வலயப் பாதுகாப்புப் பகுதியானது முன்மொழியப்பட்டது. இது வங்காள விரிகுடாவின் தெற்குப் பகுதியிலுள்ளது. மன்னார் வளைகுடாவினது எல்லைக்குள் 3600க்கும் அதிகமான தாவர மற்றும் விலங்கினங்கள் வாழ்வதாக அறியப்பட்டுள்ளது. இது உயிரியல் ரீதியில் மிகவும் வளமான இந்தியாவின் கடற்கரையோரமாகும். மன்னார் வளைகுடாப் பிரதேசத்தில் இன்னமும் உலகளாவிய ரீதியில் ஆபத்தான நிலையிலுள்ள கடற்பசு, பல வகையான டொல்பின்கள், திமிங்கிலங்கள் மற்றும் அழிவடையும் நிலையிலுள்ள ஆமைகள் போன்றவற்றைக் காணலாம். மேலும் பாதுகாக்கப்பட்ட பிரதேசமானது கடற்குதிரைகள், 450க்கு மேற்பட்ட வகையான மீனினங்கள் 100க்கும் மேற்பட்ட வகையான கடலட்டைகள், பாசிகள், எல்லா வகையான பவளப்பாறைகள் மற்றும் பல்வேறு வகையான கடற்புற்கள் போன்றவற்றுக்கு இருப்பிடமாகும். பாதுகாக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள தீவுகளில் 150க்கும் மேற்பட்ட பறவைகள் காணப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட பகுதியின் சூழல் தொகுதிக்கு முக்கிய மாக 17 வகையான கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன. இவை மீனினங்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் தளமாகச் செயற்படுகின்றன. (மூலாதாரம் : மன்னார் வளைகுடா உயிர்க்கோள பிராந்தியத் திட்டம்) முன்மொழியப்பட்ட கடற்கரை மற்றும் உயிர் பல்லினத்தன்மை தொடர்பான ஆய்வு மையத்தினை உருவாக்குதல் மற்றும் மன்னார் வளைகுடாவையும் அதன் உயிரின வகைகளின் முக்கியத்துவத்தினை ஆய்வு செய்யவும் பயன்படும்.

**இ) மணற்குன்றுகளைப் பாதுகாத்தல்**

மணற்குன்றுகள் கடல் நீர் உட்புகுவதனைத் தடுப்பதன் மூலம் தீவைப் பாதுகாக்கின்ற முக்கியமான பணியை மேற்கொள்கின்றன. அவை சக்திவாய்ந்த புயல்களிலிருந்தும் அழிவுத் தன்மைகொண்ட அலை, காற்று போன்றவற்றிலிருந்து பாதுகாக்கின்ற தடுப்புச் சுவர் போலவும் தொழிற்படுவதனால் தாக்கங்களை உள்வாங்கி, தீவினைப் பாதுகாக்கின்றன. மன்னாரில் அதிகளவான மணற்குன்றுகள் உள்ளன. இதனைப் பாதுகாப்பது அவசியமானது. ஆகவே, எதிர்காலத்தில் பேசாலை மற்றும் பழைய இறங்குதுறையிலிருந்து நடுக்குடாப் பகுதியினூடாக பழைய இறங்கு துறைவரை உள்ள மணற்குன்றுகளைப் பாதுகாக்க முன்மொழியப்பட்டுள்ளது.

**6.5.2.தரைத் தோற்றமைப்பு முகாமைத்துவம்**

**அ) கடற்தோற்றத்தின் அழகான காட்சியினை மேம்படுத்தல்.**

தற்போதைய சூழ்நிலையில் இயற்கைச் சூழல் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினது அனுபவத்தினை மேம்படுத்தவேண்டிய தேவை உள்ளது. மன்னார் தீவினுள் நுழைகின்ற பார்வையாளர்களுக்கு நல்ல மகிழ்ச்சியான நினைவுகளைக் கொடுக்கக்கூடிய அனுபவத்தினை வழங்குவது அவசியமானது. சுற்றுலாப் பயணிகளை வசதிப்படுத்துவதற்காக மன்னாரின் நுழைவாயில் அருகே இயற்கைப் பூங்கா ஒன்றினை அமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை முன்மொழிந்துள்ளது. எல்லா உயிரின வகைகளுக்கும் அடிப்படையாக அமைகின்ற மன்னாரின் காற்று, நீர், மண் மற்றும் சூழல் தொகுதி போன்றவற்றினை மேம்படுத்துவதன் மூலம் இயற்கைப் பூங்கா அபிவிருத்தியானது உற்பத்தித் திறனை மேம்படுத்தும். இது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்கும் உற்பத்தித் திறனுக்கும் அவசியமான அடிப்படையாகும்.

மேலும் மன்னார் அழகான தோற்றப்பாடாக மாற்றக்கூடிய கடற்கரைகளைக் கொண் டுள்ளது. உதாரணமாக உறுமலைக் கடற்கரை, நடுக்குடாக் கடற்கரை, ஓலைத் தொடுவாய்க் கடற்கரை, தோட்டவெளிக் கடற்கரை மற்றும் கீரிக் கடற்கரை என்பன வாகும். இதற்கு மேலதிகமாக கடல்நீர் ஏரிப்பகுதி, நிலக் காட்சியை அபிவிருத்தி செய்தல், பறவைகளைக் கண்டுகளிப்பதற்கு பேசாலை மீன்பிடிப் பிரதேசத்தினை மேம்படுத்துதல், முன் கடற்கரைச் சூழலை விருத்திசெய்தல், நிலக்காட்சி தந்திரோ பாயங்கள் மூலமாக அழகான தோற்றங்களை மேம்படுத்துவதுடன், அழகான தோற்றத்தினை நிர்மாண செயற்பாடுகளும் விளம்பரப் பலகைகளும் குழப்பக்கூடாது.

(விளம்பரக் கட்டுப்பாடு : பொது விதிகளைப் பார்க்க)

**ஆ) இடைக் கடற்கரையோர முகாமைத்துவம் (கடல்சார் சுற்றுலாவை மேம்படுத்துதல்)**

அத்தியாயம் 06

**திட்டம்**

இடைக் கடற்கரையோரம் மன்னார் நகர சபைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இடைக் கடற்கரைப் பகுதி மன்னார்த் தீவின் நுழைவாயிலுக்கு ஒரு சுவாரஸ்யத்தைக் கொடுக் கின்றது. தற்போதைய நிலையில் ஒல்லாந்தர் கோட்டை, நன்னீர் மீன்வளர்ப்பு, பாலம், மீன்பிடியுடன் தொடர்புடைய செயற்பாடுகள், கடற்கிராமங்கள், உப்பளம் போன்றவற்றைப் பார்க்கலாம். இடைக் கடற்கரையோரப் பகுதியில் போதியளவு கவர்ச்சி தற்போது காணப்படவில்லை. இடைக் கடற்கரையோரப் பயன்பாட்டை அதிகரிப்பதுடன், நிலத்தினைப் பல பயன்பாட்டுக்கு உட்படுத்தி நிலத்தின் பயன்பாட்டை உச்சப்படுத்த வேண்டும்.

கடற்கிராமமானது கடல்சார் கலாசாரப் பாங்கிற்கும் சுற்றுலாவை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளுக்கு முக்கியமாக செயலாற்றும் இக்கடற்கிராமம் ஒல்லாந்தர் கோட்டையையும் உள்ளடக்கியது. இதனால் கடற்கிராமம் அதிகளவு சுற்றுலாப் பயணிகளை உள்வாங்கும். கடற்கிராமத்தினை நிர்மாணிப்பதற்கு அடிப்படையாக அமைவது எல்லை மீறிய அபிவிருத்தியைக் கட்டுப்படுத்துவதாகும். கடற்கிராமத்திலுள்ள தங்கியிருக்கும் வசதிகள் உள்ளூர் மக்களின் வாழ்க்கை முறையினை மிக நெருக்கமாக உணர்வதற்குரிய தனித்துவமான வழியைக் கொடுக்கும். இத்தெரிவானது நீண்ட நாட்களுக்குத் தங்கியிருப் பவர்களுக்குப் பொருத்தமானது.

மன்னார்க் கடற்கிராமத்தின் தங்குமிடமானது குடிசையிலிருந்து வீடுகள், திறந்த உணவகங்கள், சிறிய உணவகங்கள், கடைகள், கடலுணவு, விற்பனை நிலையங்கள், உள்ளூர் கைவினைப் பொருள், காட்சியறைகள், ஓவியக் காட்சிக்கூடங்கள், பரிசுப் பொருள் விற்பனை நிலையங்கள், கடல்சார்ந்த பொருட்கள் மற்றும் சிறு அங்காடி என்பன காணப்படும். மேலும் எதிர்காலத்தில் சூழல்சார் சுற்றுலாவுடன் தொடர்புடைய செயற்பாடுகள், மகிழ்வுக்காகப் படகோட்டுதல், உதை படகோட்டுதல் மற்றும் பாரம்பரிய முறையில் மீன்பிடித்தல் என்பன ஊக்குவிக்கப்படும். இதற்கு மேலதிகமாக கிராமத்தில் தங்கியிருக்கும் முறையை உருவாக்குதல், விருந்தினருக்கும் விருந்தோம்புவருக்கும் மகிழ்ச்சியான அனுபவத்தைச் செழுமைப்படுத்தியுள்ளது. உள்ளூர் விடயங்களுக்கு முகங்கொடுத்தல், மேலதிகமான வருமான வழிமுறைகள், நல்வாழ்க்கைக்கான வாழ்க்கைச்சூழலை மேம்படுத்துதல் போன்றன உள்ளூரவர்களுக்கான நன்மை களாகும்.

**இ) சந்திகளை அழகுபடுத்தல்.**

முதலாவது மனப்பதிவு உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. மன்னாருக்கு வருகின்ற பார்வையாளர்களுக்குரிய முதல் மனப்பதிவானது தள்ளாடிச் சந்தி மற்றும் மன்னார் மேம்பாலம் என்பவற்றுடன் ஆரம்பிக்கின்றது. விருந்தினர்கள், மன்னார் நுழைவாயில் மற்றும் நகர வாயிலிலுள்ள வரவேற்பு அடையாளத்தினால் நட்புடன் கனிவாக வணக்கம் செலுத்தி வரவேற்கப்படுவார்கள். அத்துடன் பூங்கன்றுகள், நல்ல நிலையிலுள்ள நகரங்கள், விருந்தினர் அடையாளப் பலகைகள் என்பன மேலும் பார்வையாளரை கவர்வதாகவுள்ளது. நேர்த்தியாக நன்கு ஒளியூட்டப்பட்ட, பூ மரங்கள் நாட்டப்பட்ட நகர மையங்கள் நன்கு வடிவமைக்கப்பட்ட சந்தைகள் விருந்தினர்களைக்

கவருவதுடன் அவர்கள் அதிக காலம் தங்கியிருக்கும் சாத்தியப்பாட்டையும் கொண்டிருக்கும். அழகினால் ஏற்படும் நன்மைகளுக்கப்பால், வீதியோர மற்றும் சந்தி வடிவமைப்புக்கள், அழகுபடுத்தல், தோட்டங்கள் போன்றன வாகன ஓட்டுநர்களின் மன அழுத்தம், சினம், மன அமைதிக் குலைவு மற்றும் வன்முறையைத் தூண்டும் சின உணர்வு போன்றவற்றைக் குறைக்கும்.

(வரை படம் சூழல் மற்றும் சுற்றுலாத்துறை திட்டத்தினைப் பார்க்க)

**6.5.3. அனர்த்த இடர் தணிப்பு**

மன்னார்த்தீவானது குறைந்தளவு வெள்ளம், கடலலை மேலெழுதல், வரட்சி, புயல் மற்றும் சுனாமி போன்றவற்றின் தாக்கங்களைக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையின் குடியிருப்பு அமையமானது (UN-HABITAT) சில பகுதிகளைப் பல தரப்பட்ட அனர்த்த ஆபத்துள்ள வலயங்களாக அடையாளப்படுத்தியுள்ளது. அதிகமான வெள்ள ஆபத்து இருக்கின்றது என்பதற்கு அப்பால் தலைமன்னார் வெளிச்ச வீடு, ஆதாம் பாலம், மன்னாரப் புகையிரதப் பாதையின் முடிவிடம் போன்றவற்றுக்கு அண்மையிலிருத்தல் போன்ற பல முக்கியத்துவம்மிக்க பண்புகளைக் கொண்டுள்ளன. இவ்வாறாக இது சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு பயனுள்ள இடமாக இருக்கக்கூடுமென எதிர் பார்க்கப்படுகின்றது. அத்துடன் பல் நோக்கின் அடிப்படையிலான பசுமை வலயத் தொடரின் மூலம் உருவாகும் நிழல் சூழ்ந்த வாழக்கூடிய சூழலிலிருந்து இது நன்மை யைப் பெற்றுக்கொள்ளும்.

பல்லினத் தன்மையுள்ள சூழல் தொகுதியை உருவாக்குவதற்குப் பசுமை வலயத்தினுள் வேறுபட்ட உயிரினங்கள் இருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். புயல், சுனாமி போன்றவற்றின் பாதிப்புக் குறைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொதுவாக 50 மீற்றர் அகலமான பசுமை வலயம் காணப்படல் வேண்டும். பசுமை வலயத் தொடர் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் கடற்கரையோர வலயத்தினுள் அமைந்திருக்கும். இவ்வலயத்தினுள் நிரந்தரமான கட்டடங்கள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் பாதுகாப்பற்ற பகுதிகளில் சமுதாய நடவடிக்கைகள் அதிகரித்துச் செல்லுவது அனர்த்தத்துக்கு முகங்கொடுக்கும் நிலையை அதிகரிக்கும். ஆகவே எல்லாச் செயற்பாடுகளும் அவற்றின் வடிவமைப்பினுள்ளேயே உயர்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கொண்டிருக்கக் கூடியதாகத் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். பசுமை வலயத் தொடரினை வடிவமைத்தலும் அமுல்படுத்தலும் பெரிதும் வேறுபடுகின்றது. இது ஆலோசனைகளை பெறுகின்ற இடத்துக்கு ஏற்றதாகும்.

(மூலம் : மன்னார் அனர்த்த இடர் குறைப்பு தயார் நிலையில் இருப்பதற்கான திட்டமும், நிலைத்து நிற்கத்தக்க தாங்கு திறன் மிக்க நகரம், ஐ.நா. குடியிருப்பு முகவரகம்)

**அ) நீர்நிலைகளின் அளவினை அதிகரிப்பதுடன், நன்கு இணைக்கப்பட்ட கால்வாய் வலையமைப்பை விருத்திசெய்தல்.**

இது மூன்று தலையீடுகளைக் கருத்திற் கொள்வதன் ஊடாக மேற்கொள்ளப்படும்.

1. நீர்நிலைகளில் கழிவுகள், சேற்றுப் படிவு மற்றும் வண்டல் போன்றவற்றை அகற்றுதல்.

   கழிவுகள், சேற்றுப் படிவு, வண்டல் போன்றன நீர்நிலைகளின் கொள்ளளவைக் குறைப்பதோடு, வடிகால்களினதும் கால்வாய்களினதும் கொள்ளளவைக் குறைக்கும். சீரான நீரோட்டத்தினை ஏற்படுத்துவதுடன் வெள்ள நிலைமையின்போது நீர் வடிந்து செல்வதற்கு உதவுவதுடன், நீர் தேங்கி நிற்பதனைத் தடுக்கும்.

2. கால்வாய் வலையமைப்பில் முக்கியமான இணைப்பை அடையாளப்படுத்தி அவற்றின் இணைப்புக்களைப் பேணுதல்.

   முன்பு நீர்நிலைகளுடன் இணைந்திருந்த இயற்கையான இணைப்புக்கள் இப்போது தொழிற்படவில்லை. சில மணல் நிரவுதலாலும் ஏனைய அபிவிருத்திக் காரணங் களாலும் குழப்பப்பட்டுள்ளன. இவ்விணைப்புக்களை மீளிணைப்புச்செய்வதன்

மூலம் வெள்ள நீரைக் குறிப்பாகக் கடுமையான மழை மற்றும் புயல் காரணமாகக் கடலலை உட்புகும் தருணங்களில் சீராக வடிந்தோட உதவிசெய்யும்.

3. குளங்களின் மேலதிகமான நீரைக் கொண்டு செல்வதற்கு அவசியமான இடங்களில் கால்வாய்களை உருவாக்குதல்.

மேலதிக நீரை வெளியேற்றுவதற்குக் காணப்படுகின்ற கால்வாய்கள் சமாளிக்க முடியாதுள்ளபோது நிரம்பிப் பாய்கின்றமையைக் குறைப்பதற்கு உதவக்கூடியதாகப் புதுக்கால்வாய்களை அமைப்பது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

(மூலம் : மன்னார் அனர்த்த இடர் தணிப்பு மற்றும் தயார் நிலைத் திட்டம், நிலைத்து நிற்கத்தக்க தாங்கு திறன்மிக்க நகரம், ஐ.நா. குடியிருப்பு முகவரகம்)

அத்தியாயம் 06

**திட்டம்**

**ஆ) கட்டுமானப் பிரதேசங்களில் திட்டமிட்ட வெள்ள வடிகாலமைப்பை விருத்திசெய்தல்.**

வெள்ள வடிகாலமைப்பு வலையமைப்பைத் திட்டமிடும் போது அதிகூடிய வெள்ள அளவு, புவியியல் நிலைமைகள், (தரை உயரம், சாய்வு) மண்ணின் தன்மை, தற்போதுள்ள மற்றும் முன்மொழியப்பட்ட நிலப்பயன்பாடு காணப்படுகின்ற வடிகாலமைப்பு மற்றும் வீதி விபரங்கள் என்பன கருத்திற் கொள்ளப்படவேண்டும். வெள்ள வடிகாலமைப்பு ஒன்றினை விருத்தி செய்யும்போது சராசரி வெள்ள அளவு என்பதனைவிட அதிகூடிய வெள்ள அளவு என்பதனைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

(மூலம்: மன்னார் அனர்த்த இடர் தணிப்பு மற்றும் தயார் நிலைத்திட்டம், நிலைத்து நிற்கும் தாங்கு திறனுள்ள நகரத்தை நோக்கி ஐ.நா. குடியிருப்பு முகவரகம்.)

**6.5.4. பொதுத் திறந்தவெளிகள்.**

அ) செயற்திறன் மற்றும் செயற்திறன் அற்ற பொழுதுபோக்கு.

நகரமொன்று வாழ, தொழில் செய்ய, விளையாட விரும்பத்தக்க இடமாக உருவாக்குவதில் பூங்காக்களும் திறந்தவெளிகளும் முக்கிய பங்காற்றுகின்றன. பூங்காக்கள் பௌதீக மற்றும் உளவியல் ஆரோக்கியத்தினை, சமுதாய வாழ்க்கையை, வெளியிட அனுபவம் மற்றும் அயல்மை உணர்வு போன்றவற்றை மேம்படுத்துகின்றது.

பொதுப் பூங்காக்களும் அவை வழங்குகின்ற செயற்றிறனுள்ள மற்றும் செயற்றிறனற்ற பொழுதுபோக்கு வாய்ப்புகள் தரமான வாழ்க்கைக்குப் பிரதானமான பங்களிப்பாகும். பூங்காக்கள் இயற்கை அழகைக் காணக்கூடிய அதிகம் நகரமாகிய சூழலுக்கு முற்றிலும் மாறுபாடான வெளியிடப் பொழுதுபோக்கு இடங்களை வழங்குகின்றது. பூங்காக்கள் மக்கள் சந்திப்புக்கும், சமூக ஒன்றுகூடல் மற்றும் சமூகமயமாக்கத்திற்குரிய மைய இடத்தினையும் வழங்குகின்றது. மேலும் பொழுதுபோக்கு வசதிகள், கல்வி வாய்ப்பினையும் வழங்குகின்றது.

செயற்றிறனுள்ள மற்றும் செயற்றிறனற்ற பொழுதுபோக்கு வசதிகள் வேறுவகையான செயற்பாடுகளைக் குறிக்கின்றபோதும் இரண்டு வகையான செயற்பாடுகளையும் வினைத்திறனான வகையில் மன்னாரில் ஏற்படுத்தமுடியும். செயற்றிறன் மிக்க பொழுதுபோக்கு என்பது வகுப்புக்கள், களங்கள், கருவிகள் போன்ற விசேளட கருவிகள் தேவைப்படுத்துகின்றதுமான கட்டமைக்கப்பட்ட தனி நபர் அல்லது குழுச் செயற்பாடு களைக் குறிக்கின்றது. உதாரணம் – கரப்பந்து, காற்பந்து, டெனிஸ். செயற்றிறனற்ற பொழுதுபோக்கு என்பது விளையாட்டுத் தளங்கள், பார்வையர் அரங்கு போன்ற விசேடமாகத் தயார்ப்படுத்தப்பட்ட வசதிகள் தேவைப்படாத செயற்பாடுகளைக் குறிக்கின்றது.

செயற்றிறனற்ற பொழுதுபோக்குச் செயற்பாடுகள் இடத்தின் வளங்கள் மீது குறைந்தளவு அழுத்தத்தினைக் கொண்டிருக்கும். இதன் விளைவாக அவை சூழல் தொகுதியின் சேவைகளை வழங்கமுடியும். அத்துடன் இயற்கை வளப்பாதுகாப்புடன் மிகவும் இணக்கத் தன்மையுடையது. உதாரணமாக, ஓடுதல்/மெல்லோட்டம், துவிச்சக்கரவண்டி ஓட்டம், நீந்துதல், வன ஜீவராசிகளைப் பார்த்தல், இயற்கையை அவதானித்தலும் புகைப்படமெடுத்தலும், சுற்றுலா உணவருந்துதல், நடத்தல், பறவைகளை அவதானித்தல், வரலாற்று மற்றும் தொல்பொருள் தேடல் என்பன.

அத்தியாயம் 06

**திட்டம்**

- **மன்னார்த் தீவில் பூங்காக்களையும் விளையாட்டு மைதானங்களையும் ஸ்தாபித்தல்.**

  மன்னார்த் தீவு முழுவதுமாக 16.8 ஹெக்ரெயர் நிலப்பரப்பு பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் உள்ளடங்குகின்றன. இவை மிகச் சிறிய பூங்கா, சிறிய பூங்கா, உள்ளூர் பூங்கா, சமுதாயப் பூங்கா மற்றும் நேர்கோட்டுப் பூங்கா என வகைப்படுத்தப்பட்டுள்ளன. பொதுத் திறந்த வெளிகள் மற்றும் பொழுதுபோக்குத் திட்டத்தின்படி காணப்படுகின்ற சில பூங்காக்களும் விளையாட்டு மைதானங்களும் மீள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். செயற்திறனற்ற உள்ளகப் பொழுதுபோக்கான கலாசார மண்டபம், சினிமா மண்டபம், கேட்போர் கூடம், நூலகம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு வழிகாட்டல் திட்டப் பிரதேசம் மிகப் பொருத்தமான இடமாகும்.

வழிகாட்டி திட்ட எண் 2 ஐப் பார்க்கவும்: அடையாளம் காணப்பட்ட துணை வலயம் - அபிவிருத்தி வழிகாட்டி திட்ட பகுதி மற்றும் 7.2.5. அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள், அதிகபட்ச உயரம் மற்றும் வழிகாட்டுதல்கள்

இதற்கு மேலதிகமாக மன்னார் நகரசபை, பிரதேச சபைப் பகுதிகளில் செயல் திறனுள்ள வெளியகப் பொழுதுபோக்கு இடமாக மேம்படுத்தக்கூடிய இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.


**அட்டவணை 6 : மன்னார்த் தீவுக்கான முன்மொழியப்பட்ட வெளியகப் பொழுதுபோக்கு வெளித்திட்டம் (2030)**

| இல | பூங்காக்கள் விளையாட்டு மைதானங்கள் வகைகள் | பரப்பளவு (கெக்) | தற்போதைய பயன்பாடு | முன்மொழியப் பட்ட பயன்பாடு | கி.நி.பிரிவு |
|---|---|---|---|---|---|
| | முன் மொழியப்பட்ட மிக சிறிய பூங்காக்கள் (மு.மி.சி.பூ) | | | | |
| 1 | மு.மி.சி.பூ 1 | 0.2 | புதர் | மி.சி.பூ | சோனக தெரு |
| 2 | மு.மி.சி.பூ 2 | 0.1 | புல் நிலம் | மி.சி.பூ | காவற்காடு |
| 3 | மு.மி.சி.பூ 3 | 0.2 | வெறும் நிலம் | மி.சி.பூ. | தலைமன்னார் வடக்கு |
| | முன்மொழியப்பட்ட சிறிய பூங்கா (மு.சி.பூ) | | | | |
| 4 | மு.சி.பூ. 1 | 0.5 | வெறும் நிலம் | சி.பூ. | காவற்காடு |
| 5 | மு.சி.பூ 2 | 0.6 | வெறும் நிலம் | சி.பூ. | சௌத்பார் |
| 6 | மு.சி.பூ. 4 | 1.0 | வெறும் நிலம் | சி.பூ. | எழுத்தூர் |
| 7 | மு.சி.பூ. 10 | 0.4 | வெறும் நிலம் | சி.பூ. | உப்புக்குளம் தெற்கு |
| 8 | மு.சி.பூ. 11 | 0.8 | புதர் | சி.பூ. | தலைமன்னார் |
| 9 | மு.சி.பூ. 12 | 1.0 | மணல் | சி.பூ. | சிறுதோப்பு |
| 10 | மு.சி.பூ. 13 | 0.3 | குடியிருப்பு | சி.பூ. | எருக்கலம்பிட்டி மேற்கு |
| | முன்மொழியப்பட்ட உள்ளூர்ப் பூங்கா (மு.உ.பூ) | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | மு.உ.பூ. 1 | 2.6 | புதர் | உ.பூ. | பட்டித்தோட்டம் |
| 12 | மு.உ.பூ. 2 | 1.7 | புல்நிலம் | உ.பூ. | தாராபுரம் கிழக்கு, எழுத்தூர் கிழக்கு. |
| 13 | மு.உ.பூ. 5 | 2.8 | வெறும் நிலம் | உ.பூ. | தோட்டவெளி |
| 14 | மு.உ.பூ. 6 | 2.8 | வெறும் நிலம் | உ.பூ. | பேசாலை வடக்கு |
| | முன்மொழியப்பட்ட சமூகப் பூங்கா (மு.ச.பூ) | | | | |
| 15 | மு.ச.பூ. | 5.9 | புதர் நிலம் | ச.பூ. | பட்டித்தோட்டம் |
| 16 | மு.ச.பூ. | 5.6 | வெறும் நிலம் | ச.பூ. | தோட்டவெளி |
| | முன்மொழியப்பட்ட நகரப் பூங்கா (மு.ந.பூ) | | | | |
| 17 | மு.ந.பூ. 1 | 6.3 | வெறும் நிலம் | நகரப் பூங்கா | எழுத்தூர் |
| | மொத்தம் | 33.2 | | | |

மூலம் : சூழல் மற்றும் நிலக்காட்சி வடிவமைப்புப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபை.

**வரைபடம் 19 : முன்மொழியப்பட்ட பொது வெளியகப் பொழுதுபோக்கு வெளிகள்**



## 6.6. அமுலாக்கல் தந்திரோபாயங்கள்

### 6.6.1. தந்திரோபாய செயற்திட்டங்கள்

அட்டவணை 7 : தந்திரோபாய செயற்திட்டங்கள்

| தந்திரோபாய செயற்திட்டங்கள் | | | |
|---|---|---|---|
| முன்னுரிமை இல | செயற்திட்டம் | செயற்திட்டத்தின் காலம் | நிதிமூலம் |
| 1 | பேசாலையில் மீன்பிடித் துறைமுகம் விருத்தி செய்தல் | நீண்டகாலம் | நீர்வள மற்றும், மீன்பிடித் திணைக்களம் ஆ.அ.வ. |
| 2 | மன்னார் நகரில் நவீன வியாபாரக் கட்டடத் தொகுதி அபிவிருத்தி | நடுத்தர அளவுக் காலம் | உ.ஆ.அ.ச. தனியார், பொதுக் கூட்டு முயற்சி |
| 3 | இடை கடற்கரையில் கடற் கிராமம் அமைத்தல் | நீண்டகாலம் | உ.ஆ.அ.சபை இ.சு.அ.அ.ச.பொதுத் தனியார் கூட்டு முயற்சி |
| 4 | காற்று மின்னாலைகளை நிர்மாணித்தல் | நீண்டகாலம் | நி.ச.அ,தனியார் பொதுக் கூட்டு முயற்சி |
| 5 | துறைமுக விருத்திக்காக அணுகுவழி அபிவிருத்தி | நடுத்தர அளவுக்காலம் | உ.ஆ.அ.ச. |
| 6 | கைத்தொழில் வலயத்துக்கான நில அபிவிருத்தி | நடுத்தர அளவுக்காலம் | கைத்தொழில் அமைச்சு முதலீட்டு சபை |
| 7 | பாலத்துக்கருகே இயற்கைப் பூங்கா அபிவிருத்தி (வங்காலை வசதிப்படுத்தும் நிலையம்) | நடுத்தர அளவுக்காலம் | ந.அ.அ.ச, உ.ஆ.அ.ச. |
| 8 | உப்புக் குளத்தில் அல்பதா மைதானம் அமைத்தல் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச.கைத்தொழில் வர்த்தக அமைச்சு |
| 9 | நிர்வாகக் கட்டடத் தொகுதி அபிவிருத்தி | நீண்டகாலம் | உள்ளூராட்சி அமைச்சு |
| 10 | நகரசபை மீன் சந்தையைப் புனரமைத்தல் | நீண்டகாலம் | ந.அ.அ.ச.,உ.ஆ.அ.ச. |
| 11 | நகர சபை பகுதி பேருந்து நிலையத்தைப் புனரமைப்புச் செய்தல் | நடுத்தர அளவுக் காலம் | ந.அ.அ.ச.,உ.ஆ.அ.ச. |
| 12 | காணப்படும் வடிகாலமைப்பை விருத்தி செய்வதுடன் இணைப்பை விருத்திசெய்தல் | நீண்டகாலம் | உ.அ.அ.ச.மாகாண சபை அ.சா. நிறுவனம் |
| 13 | பேசாலையில் நவீன சந்தையை அபிவிருத்தி செய்தல் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச.மாகாண சபை |
| 14 | ஒல்லாந்தர் கோட்டையைப் புனரமைப்புச் செய்தல் | நடுத்தர அளவுக்காலம் | தொல்லியல் திணைக்களம் |
| 15 | தெற்குக் கடற்கரை வீதியை அபிவிருத்தி செய்தல் | நடுத்தர அளவுக் காலம் | உ.அ.அ.ச. |
| 16 | பாலத்துக்கருகில் தரிப்பிட வசதியை அபிவிருத்தி செய்தல் (ப.நோ.கூ.ச.முன்பாக) | குறுகிய காலம் | உ.அ.அ.ச. |

அத்தியாயம் 06

**திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 17 | பேசாலைக் கடற்கரையை அழகுபடுத்தல் திட்டம் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச.மாகாண சபை |
| 18 | நகரசபைப் பகுதியில் வர்த்தகக் கட்டடத் தொகுதியையும் மரக்கறிச் சந்தையையும் அபிவிருத்தி செய்தல் | நடுத்தர அளவுக்காலம் | உ.ஆ.அ.ச.மாகாண சபை |
| 19 | வீதியை விரிவாக்குதலும் மேம்படுத்தலும் - உள்சுற்றுவட்ட வீதி | நடுத்தர அளவுக்காலம் | உ.ஆ.அ.ச. |
| 20 | தலைமன்னாரில் பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்தல் | குறுகிய காலம் | தே.போ.ஆணைக்குழு |
| 21 | தோட்டவெளி அழகுபடுத்தல் திட்டம் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச.மாகாண சபை |
| 22 | வீதிகள் விரிவாக்கமும் மேம்படுத்தலும் - சேவை வீதி | நடுத்தர அளவுக்காலம் | பொது - தனியார் கூட்டிணைவு |
| 23 | பள்ளிமுனையிலும் எழுத்தூரிலும் பெருக்கு மரத்தினைப் பேணிக் காத்தல் | குறுகிய காலம் | தொல்லியல் திணைக்களம் |
| 24 | வைத்தியசாலை வீதி பொது அரங்கினைப் புனரமைப்புச் செய்தல் | நடுத்தர அளவுக்காலம் | உ.ஆ.அ.ச. |
| 25 | A14 வீதியை விருத்தி செய்தல் | நீண்டகாலம் | வீ.அ.அ.ச. |
| 26 | எருக்கலம்பிட்டியில் இறங்குதுறையை நிர்மாணித்தல் | குறுகிய காலம் | மீன்பிடி மற்றும் நீர்வளத் திணைக்களம், அ.கா.அ.நிறுவனம் |
| 27 | தலைமன்னாரில் மீன் சந்தை அபிவிருத்தி | நடுத்தர அளவுக்காலம் | உ.ஆ.அ.ச. |
| 28 | உப்பள மீள்அபிவிருத்தி | நீண்டகாலம் | கைத்தொழிலமைச்சு, மாந்தை உப்பளம் த.வ. |
| 29 | நகர சபைப் பகுதியின் பிரதான சந்தியை அழகுபடுத்தல் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச.,மாகாண சபை, வீ.அ.அ.ச. |
| 30 | பள்ளிமுனை வீதி மீள்அபிவிருத்தி | நடுத்தர அளவுக்காலம் | உ.ஆ.அ.ச. |
| 31 | கீரி அழகுபடுத்தல் திட்டம் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச. மாகாண சபை |
| 32 | பட்டிக்கோட்டம், தாராபுரம், தோட்டவெளி, பேசாலை வடக்கு | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச. மாகாண சபை |
| 33 | சூரிய சக்திப் பூங்கா அபிவிருத்தி | நீண்ட காலம் | நி.ச.அ,பொது - தனியார் கூட்டமைப்பு |
| 34 | பள்ளிமுனையில் இறங்குதுறையை அமைத்தல் | குறுகிய காலம் | மீன்பிடி மற்றும் நீர்வளத் திணைக்களம், ஆ.அ.வ. |
| 35 | பட்டித்தோட்டம் மற்றும் தோட்டவெளியில் சமூகப் பூங்கா அமைத்தல் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச.,மாகாண சபை |

| | | | |
|---|---|---|---|
| 36 | தாழ்வுப்பாட்டில் இறங்குதுறை அமைத்தல் | குறுகிய காலம் | மீன்பிடி மற்றும் நீர்வளத் திணைக்களம், அ.சா.நிறுவனம் |
| 37 | வடக்குக் கடற்கரையோர அபிவிருத்தி (கட்டம் - 1) | நடுத்தர அளவுக்காலம் | உ.ஆ.அ.ச. |
| 38 | உறுமலையில் அவதானிப்புக் கோபுரமமைத்தல் | குறுகிய காலம் | இ.சு.அ.அ.ச. மாகாண சபை |
| 39 | எழுத்தூர் சந்தி அழகுபடுத்தல் திட்டம் | குறுகிய காலம் | உ.ஆ.அ.ச. மாகாண சபை |
